# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 731 – 780

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

# நூல் விபரம்


நூலின் பெயர் :- திருக்குறள் கதைகள்
(731 – 780)

நூலாசிரியர் :- தமிழறிஞர்
கே.வி.குணசேகரம்

பதிப்பாண்டு :- 2010

மொத்தப் பக்கங்கள் :-

விநியோகம் :- லங்கா புத்தகசாலை
கு.டு 1.14, டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர,
கொழும்பு – 12

தொ.பேசி :- 011-2341942

விலை :-

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 731 - 780 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளோன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

## அணிந்துரை

எதைச் சொல்வதென்பது அறிவு, எப்படிச் சொல்வதென்பது உத்தி. இந்த அறிவும் உத்தியும் சரிக்குச்சரி வாய்க்கப்பெற்ற அற்புதமான அர்த்தநாரீஸ்வரர். ஓரத்து அலைகளை உதாசீனம் செய்துவிட்டுச் சமுத்திரத்தில் குதிக்கும் சாமர்த்தியம். முள்ளில் நடந்து சென்று பூப்பறிக்கும் வைபவம் தான் வாழ்க்கை. ஆனால் மனிதர் முள்ளை மற, பூவை நினை என்ற நம்பிக்கையின் குரல் இவரின் எழுத்துக்களில் உள்ளிருக்கும் நாதமாய் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரோடு பேசிவிட்டு வந்தால் ஒரு நூலகத்திற்குள் நுழைந்து வந்தமாதிரி இருக்கும். ஆச்சரியமான செய்திகளை அணிவகுத்து நிறுத்துவார். இவரை நினைக்கும் போது, உறங்கும் போது கூட வாசிக்க ஏதாவது உத்தி வைத்திருக்கிறாரா என்று எண்ணத்தோண்றுகிறது. இராஜவீதிகளில் மட்டும் உலாவ முடியும் என்றிருந்த இலக்கியத்தேரை கிராமத்தில் சந்து முனைகளுக்கு இழுத்துச் செல்ல வேண்டுமென்று வடம் பிடித்தவர் வரிசையில் தடம்பதித்திருக்கிறார்.

நான் நேர்மையாக ஒப்புக்கொள்கிறேன் குணசேகரம் ஐயாவைப் பற்றி எந்தக் காலத்திலும் எனக்கு ஓர் உயர்ந்த மதிப்பு அடிமனதில் உண்டு. ஒருவர் உழைக்கும் விதம்

தான் அவருடைய உண்மையான தகுதிகளைக் காலக்கிரமத்தில் நிர்ணயிக்கும் அளவுகோல். “இந்த மனிதனால் எப்படி இப்படிச் செயற்பட முடிகிறது” என விழிகள் அகல நான் வியப்பதுண்டு. அதன் மூலம் என்னை நெறிப்படுத்துவதுண்டு. மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். பிறப்பிற்கும் இறப்பிற்குமுள்ள இடைக்காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை மறக்க முடியாத மாமனிதனாக மாற்றுகிறது. எழுத்தாளராக, இரசிகர் நெஞ்சில் தடம் பதித்த இவர் மனிதநேயம் மிக்க இலக்கியவர்த்தா.

இந்நாட்டு மக்களின் பிரச்சினைகளை, வாழ்க்கை முறைகளை, ஏக்கங்களை எதிர்பார்ப்புக்களை அந்த மக்களின் மொழியிலேயே கலாபூர்வமாகச் சித்தரித்துள்ளார். ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும், வசனமும் அவருடைய சிந்தனையின் புதுமையையும் வாழ்க்கை அனுபவத்தையும் எழுத்தின் அழகையும் எடுத்தியம்பும். படித்து முடிந்ததும் அறிவிலும், உணர்வின் பக்குவத்திலும் ஒருபடி உயர்ந்ததை உணரலாம். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பரந்த கல்வியும், தெளிந்த உள்ளமும் அவரது படைப்புக்களில் கண்கூடு. இவர் சமூகத்தின் பொதுவான “முற்போக்குச் செல்நெறிக்கு ஆதரவு நல்கினார். இதன் காரணமாக இவர் முற்போக்குச் சக்திகளின் ஆதரவாளராகப் கருதப்பட்டார்”. இவர் பாரதி வழிவந்த புதிய இலக்கிய உத்வேகத்தையே தமது பிரதான தளமாகக் கொண்டார். அடுத்த சந்ததி எழுத்தாளருக்கு பிதாமகர். எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமானாலும் அதைச் சொல்லும் போது அதில்

ஒரு புதிய சுவை இருக்கும். சொல்பவற்றைச் சுருக்கமாகவும், இறுக்கமாகவும், சுவையாகவும் சொல்லும் திறன் மெச்சத்தக்கது. பொருளுக்கேற்ற உருவம், உருவத்திற்கேற்ற பொருள் என்ற வகையிலே இவரது கதைகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இன்றுவரை அறுவடை செய்துகொண்டிருக்கும் ஓர் இலக்கிய வேளாண்மைக்காரர்.

**நயினை கி. கிருபானந்தா,**
செயலாளர்,
யாழ் இலக்கிய வட்டம்.

## சிறந்த நாடு

நாவலர் ஸ்ரீ வித்தியா மகாகணபதி ஆலய மதியபூசைக்கு வந்த வித்தியா, பூசை முடிந்த பின்பும் கோயிலில் தங்கி நின்றாள். "கஜேந்திரன் அங்கு வரமாட்டானா...?" என்று அவளது மனம் ஏங்கியது. குருக்கள் கர்ப்பக் கிருகக் கதவைப் பூட்டி விட்டு வந்தார். வித்தியாவைத்தவிர இன்னும் இரண்டு வயோதிபப் பெண்கள் அங்கு நின்றனர். வித்தியா குருக்கள் வருவதைக் கண்டுவிட்டு கண்களை மூடினாள். குருக்கள் நடந்து செல்லும் ஓசை மெல்ல மெல்லத் தேய்ந்து ஒலித்து மறைந்தது. கண் விழித்துப் பார்த்தாள் கூட நின்ற வயோதிப் பெண்கள் இருவரையும் காணவில்லை. மெல்ல மெல்ல அன்னநடை பயின்று அவர் வெளி மண்டபத்திற்கு வந்த போது கஜேந்திரன் அங்கே நின்றான். அது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அவளின் அருகே வந்த கஜேந்திரன் அர்ச்சனைத் தட்டிலிருந்த வீபூதியை எடுத்துப் பூசினான். பின்பு சந்தனத்தை எடுத்து நெற்றியில் பொட்டு வைத்து விட்டு, வித்தியாவின் நெற்றியிலும் வைத்தான்.

வித்தியா அதிர்ந்து போனாள். அவளால் சில நிமிடங்கள் கதைக்க முடியவில்லை; “இதென்ன புதுப்பழக்கம். யாராவது கண்டால்” துடித்தாள் வித்தியா.

“ஏற்கனவே அதிபரும் தணிகாசலம் அண்ணையும் கண்டு விட்டனர். இனி யார் கண்டாலென்ன...?” என்று சிரித்தான் கஜேந்திரன்.

திகிலுடன் நான்கு பக்கமும் பார்த்த வித்தியா யாரும் இல்லாததால் நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டாள்; “நல்ல வேளை யாரும் இல்லை. வரவர நீங்கள் படுமோசம். பகல்வேளை, கோயிலடி என்று கூடப்பாராமல் துணிவுடன் நடந்து கொள்கிறீர்கள். கதை எழுதத்தொடங்கியபின் படுமோசம்....?” கோபித்தாள் வித்தியா.

“புதிதாகக் கதை ஒன்று எழுதத் தொடங்கியுள்ளேன். கொண்டு சென்று வாசியும்” என்று துவிச்சக்கரவண்டியில் கொழுவியிருந்த பையிலிருந்து கதை எழுதிய தாள்கள் எடுத்து நீட்டினான் கஜேந்திரன்.

முழுநிலவு வானில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வித்தியா கஜேந்திரன் கொடுத்த கதைக் கொப்பியைப் பிரித்தாள்.

மங்கள புரி மன்னன் ஏமநாதன் நிலாமுற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவனுக்கருகில் மணிமாறன் சுவாமியார் வேஷத்தில் இருந்தான்; "அடுத்த பௌர்ணமியன்று நீங்கள் நிலா முற்றத்தில் நாகபுரி அரசி காயத்திரியுடன் அமுதமொழி பேசிக் குதூகலிப்பீர்கள்; அந்த நேரம் நாம் இங்கு வரமுடியாது" என்றான் மணிமாறன். பூரண மகிழ்வுடன் சிரித்தான் ஏமநாதன்; "இந்திர விழாவில் நான் காயத்திரியைக் கண்டு மோகித்தேன். அதன்பின் அவள் எனக்குக் கிடைப்பாளா என்று கவலைப்பட்டேன். திருமணம் நிட்சயமானபின் எப்போது திருமணம் நடைபெறுமென ஆவற்படுகிறேன். அவளை நினைத்துருகும் ஒவ்வொரு கணமும் யுகம் போலத் தான் கழிகிறது" ஏமநாதன் கூறும் போது அவனது குரலில் மோகம் பிசிறியது.

"மக்கள் தாம் கொடுங்கோலனிடமிருந்து விடுபட்டதைப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென நினைத்திருந்தனர். அதற்கு வாய்ப்பாக உங்கள்திருமணம் வந்து விட்டது. இப்படியொரு விழா முன்பும் கொண்டாடப்படவில்லை.; எதிர்காலத்திலும் கொண்டாடப்படக்கூடாது என்று மக்கள் நினைக்கிறார்கள்"

"அது தவறு மணி, பலகாலமாகத் துன்பப்பட்ட மக்கள் இப்போதுதான் அதிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். அதனால் பெருவிழாவாகக் கொண்டாடுவது மக்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் மந்திரி பிரதானிகளையும் கிராமத் தலைவர்களையும் அழைத்துச் சாதாரணமாகக்

கொண்டாடும்படி கூறப்போகிறேன்" என்றான் ஏமநாதன்.

"மக்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. மங்களபுரி நல்லதொரு நாடு. குறை வில்லாத விளைபொருட்களை உருவாக்குவோர் இங்கு ஏராளமாக இருக்கிறார்கள். தகுதி மிக்க பேரறிஞர் பலர் இருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான செல்வந்தர்களும் இருக்கிறார்கள். இம்மூன்றும் உள்ள நாடு சிறந்த நாடாகும். நந்திதேவன் தனது பெண்ணாசையால் நாட்டைக் கெடுத்து விட்டான். அதனால் தான் அவன் அழிந்தான். இப்போது நாடு சீரடைந்து விட்டது. உழவர்கள் தமது விளை நிலங்களுக்குச் சென்று நிலத்தை உழுது பண்படுத்தி விதைத்து விட்டார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் நாடு தானியங்களால் நிரம்பிவிடும். பிறகேன் அதைப் பற்றிக் கவலைப் படுகிறீர்கள். பலகாலம் துன்பப்பட்ட மக்கள் மகிழ்வுடன் கொண்டாடட்டும்" என்றான் மணிமாறன்.

ஏமநாதன் எதுவும் கூறாது கைகளைப் பின்னால் கோர்த்துக் கட்டியபடி நிலா முற்றத்தில் உலாவினான்.

---

**731. தள்ளா வினையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.**

---

குறைவில்லாத விளை பொருட்களும், தகுதிவாய்ந்த அறிஞர்களும், குறைவில்லாத செல்வம் உடையவர்களும் கூடி வாழும் நாடே நாடாகும்.

## வளம்

ஆழ்ந்த யோசனையுடன் நிலா முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்த ஏமநாதனைப் பார்த்துக் கொண்டிருந்தான் மணிமாறன். எதற்கும் முடிவெடுப்பதற்கு ஏமநாதனுக்கு வெகுநேரம் தேவை. அந்த நேரம் சிலசமயம் நாலைந்து நாட்கள் கூட ஆகலாம். மங்களபுரியை உடன் கைப்பற்ற வேண்டுமென்று பருத்திமலை அரசன் சுந்தரசேனன் கூறிய போது அதை ஏமநாதன் ஏற்றுக் கொள்ளவில்லை. “வணிகனான எனக்கு ஏன் வீண் வம்பு” என்று நினைத்தான். அவனது எண்ணத்தை உணர்த்த சுந்தரசேனன் சொன்னான்; “ஏமநாதா நீ வணிகனென்றும், அதனால் மங்களபுரியைக் கைப்பற்றுவது எனக்குத் தேவையில்லாத வேலை என்றும் சொல்கிறாய். அப்படியானால் ஏன் நீ மங்கள புரி மக்கள் மீது பாசங் கொண்டாய்? அந்த மக்கள் தற்பொழுது மிகவும் துன்பப் படுகிறார்கள். அவர்கள் நீ தான் தமது தலைவன் என்று நினைக்கிறார்கள். அவர்கள் அப்படி நினைப்பதால் நந்திதேவனும் நீதான் அவர்களின் தலைவன் என்று நினைத்து உன்மீது அன்பு கொண்டவர்களைக் கைது செய்து மரண தண்டனை வழங்குகிறான். இதற்குப் பின்பும் நீ தாமதிப்பதால் பல நல்லவர்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பருத்திமலை பெரிய நாடு. ஓர்அரசன் நாடுகளைப் பிடித்து தனது குடையின் கீழ்க் கொண்டு வருவது பெரிய விடயமல்ல. அதன்பின் மக்களது நலன்களைக் கவனிப்பதே பெரிய விடயம். அதனால் நான் மங்கள புரியைக் கைப்பற்ற விரும்பவில்லை. மகதநாடு, நாகபுரி போன்ற நாடுகள்

பருத்திமலையைத் தாக்குவதற்குத் திட்டம் போட்டுள்ளன. இந்த வேளையில் நான் மங்களபுரி மீது படையெடுத்தால் நந்திதேவன் அயல்நாடுகள் பலவற்றையும் உதவிக்களைப்பான். இல்லாவிட்டால் மங்களபுரியை விட்டுத்தப்பிச் சென்று மகத நாட்டில் தஞ்சமடைந்து விடுவான். ஆனால் உனது நிலை அப்படியானதல்ல. நீ ஊரவன். மக்கள் கலகஞ் செய்து நாட்டைக் கைப்பற்றி விட்டனர் என்றே நட்பு நாடுகள் நினைக்கும். அத்துடன் உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நான் செய்கிறேன். எமது நாட்டில் அகதிகளின் தொகை அதிகரித்தமையால்தான் நான் உதவி செய்கிறேன் என்று பகைவர்கள் நினைப்பார்கள். மங்களபுரி, பருத்திமலையை விடச் சிறப்பான நாடு. மிகுந்த செல்வ வளமுடையது. அயல்நாட்டு மக்கள் மங்களபுரியை எவ்வளவு நேசிக்கிறார்கள் தெரியுமா…? மிகவும் சிறந்த ரகச் சேலைகள் அங்கு நெய்யப்படுவதால் அயல் நாடுகளில் வாழும் பணக்காரப் பெண்கள் மங்கள புரியில் நெய்ப்பட்ட சேலைகளை அணிவதைப் பெருமையாக நினைக்கிறார்கள். எமது நாட்டுப் பட்டத்தரசியிடம் நூற்றுக்கணக்கான மங்களபுரிப்பட்டுச் சேலைகள் உண்டு. எந்தப் பெருந் துன்பம் வந்தாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடியவளங் குன்றாத சிறந்த நாடு மங்களபுரி. நீ தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் உன் தாய் நாட்டிற்குத் துரோகஞ் செய்வதாகவே நான் நினைக்கிறேன்" என்று சுந்தரசேனன் கூறிப்ப பத்துத் தினங்களுக்குப் பின்பு தான் ஏமநாதன் மங்கள புரியைக் கைப்பற்றுவதாக முடிவெடுத்தான். அதனால் மணிமாறன் அவனாகச் சொல்லட்டும் என்று பொறுமையாகக் காத்திருந்தான்.

சாமக்கோழி எங்கோ கூவும் சத்தம் கேட்டது. நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. மணிமாறனுக்கு நித்திரை வந்தது. ஆசனத்தில் இருந்தபடியே அவன் கண்ணயர்ந்து விட்டான்.

ஏமநாதன் மணிமாறனைத் தட்டி எழுப்பினான். நித்திரை விட்டெழுந்து மணிமாறன் எதுவும் பேசாமல் ஏமநாதனைப் பார்த்துக் கொண்டிருந்தான்; “மணி, நீ எதைச் சொன்ன போதும் எனது மனம் நாடு துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் இவ்வேளையில் பெருவிழாவாக நான் எனது திருமணத்தை நடாத்த விரும்பவிலலை” என்றான்.

“சரி, உனது விருப்பப்படி செய். அதை முன்பே சொல்லியிருந்தால் நான் சென்று நித்திரை கொண்டிருப்பேன். நேரம் பன்னிரண்டு மணியைக் கடந்து விட்டது” என்று கூறியபடி எழுந்தான்.

“எமது நாடு முன்பு பெருஞ் செல்வ வளமுடையதாகவும், பிறநாட்டு மக்களும் விரும்பக்கூடியதாகவும், எந்தத் துன்பம் வந்தாலும் அதைத் தாங்கக்கூடியதாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுது அந்தநிலை மாறிவிட்டது. அதனால்தான் சொல்கிறேன்” என்றான்.

மணிமாறன் சிரித்தான்; “இப்பொழுது நாட்டில் பஞ்சமென்று சொல்கிறீர்களா..? நாட்டில் பஞ்சமிருந்தால் மக்கள் கேளிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். சென்ற வாரம் சிவன் கோயில் திருவிழா எப்படி நடைபெற்றது. நானறிந்தவரை இம்முறைதான் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது.

அதனால்தான் சொன்னேன். மக்களும் பெரிதாக நினைக்கிறார்கள்" என்றான் மணிமாறன்.

**732. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு.**

குறையாத பொருள் வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத்தக்கதாய், கேடு இல்லாததாய், மிக்க விளை பொருள் விளைவதாய் உள்ளதே நாடாகும்.

## சுமைதாங்கி

"சொல்லொணாத் துன்பப்பட்ட மக்கள் அதிலிருந்து மீண்டதன் மகிழ்ச்சியைச் சிவன் கோயில் திருவிழாவின்போது காட்டியுள்ளனர். மக்கள் துன்பப்படும் போது சிவனிடஞ் சொல்லியழுதார்களே தவிர ஒரு பூவைக்கூடக் கொண்டு சென்று சிவனுக்கு அர்ச்சிக்க முடியவில்லை. ஒரு கட்டி கற்பூரம் கொழுத்த முடியவில்லை. அவர்களெல்லோரும் கொடுங்கோளாட்சி நீங்கினால் எதுவெதுவோ வெல்லாம் செய்வதாக நேர்த்திக் கடன் வைத்தனர். அதை அவர்கள் துன்பம் நீங்கியதும் செய்து முடித்தனர். நான் கூட எனது காதல் நிறைவேறினால் சிவன் கோயிலின் தெற்கு வாசற் கோபுரத்தைக் கட்டுவதாக வேண்டினேன். என்மீது அன்பு கொண்ட நீ அதைக் கட்டுவதாக ஒப்புக் கொண்டாய். நட்புக் காரணமாக நான் ஒப்புக்

கொண்டாலும் அதை என்னால் கட்ட முடியவில்லையே என்ற வருத்தம் எனது இதயத்தில் இருக்கிறது” என்று ஏமநாதன் கூறிக் கொண்டிருந்தான்.

“மக்கள் அரசனையும் தெய்வத்தையும் ஒன்றாகவே மதிப்பவர்கள். நீதிநெறி முறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் அரசனை, மக்கள் தனிப்பெரும் தெய்வம் என்று போற்றி வணங்குவார்கள் என்றும், அந்தணர் ஓதும் வேதத்திற்கும் அறத்திற்கும் அடிப்படையாக இருந்து நாட்டைக் காப்பது அரசனது செங்கோல் என்றும் எமது பழந்தமிழ்நூல்கள் கூறுகின்றன. உலகிற்கெல்லாம் உணவு படைக்கும் சூரியனுக்கு மக்கள் பொங்கிப் படைக்கிறார்கள். இதை அவர்கள் தமது நன்றிக்கடனாககச் செய்கிறார்கள். அது போலத்தான் தம்மைக் கொடுமைகளில் இருந்து காப்பாற்றிய உன்னைத் தெய்வமாகவே மக்கள் நினைக்கிறார்கள். சிவனுக்குத் திருவிழா செய்தது போல உனக்கு மணவிழா செய்ய விரும்புகிறார்கள். ஐந்து வருடங்களுக்கு முன்பு சிங்கபுரியில் கடும் பஞ்சமேற்பட்டது. அங்குள்ள இலட்சக்கணக்கான மக்கள் எமது நாட்டிற்கு வந்தனர். இன்றும் அவர்கள் இங்குதான் வாழ்கிறார்கள். அத்துடன் நந்திதேவனது கொடுமையைத் தாங்கமுடியாது பருத்திமலைக்கு இடம்பெயர்ந்த எமது நாட்டு மக்கள் இங்கு ஆட்சி மாறியதும் ஒருவர் கூட அந்நாட்டில் தங்காது திரும்பிவிட்டனர். இதற்குக் காரணம் என்ன?” என்று கேட்டுவிட்டு நிறுத்தினான் மணிமாறன்.

ஏமநாதன் உடனடியாக அதற்குப் பதில் கூறவில்லை. மணிமாறனைப் பார்த்தான்; "மன்னா, பிறநாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்களால் ஏற்படும் சுமையைத் தாங்கிக் கொண்டு, தன்னை ஆளும் அரசனுக்கு ஆட்சி புரிவதற்கு வேண்டிய வரிப் பொருளையும் குறையாமல் வழங்கும் மக்களைக் கொண்டது தான் சிறந்த நாடு. அந்த வகையில் எமது நாடும் சிறந்த நாடுதான். அதனால் மக்களின் விருப்பப்படி அவர்கள் நடந்து கொள்ளட்டும். அத்துடன் ஒரு நல்ல அரசன் மக்களின் விருப்பத்தைத் தடை செய்பவனாக இருக்கக்கூடாது. மக்கள் தவறான வழியில் நடந்தால் மட்டுமே அரசன் அவர்கள் செய்வதைச் சட்டமூலம் தடுக்கலாம். உனது திருமண விழாவிலன்று அவர்கள் தமது வீடுகளையும் வீதிகளையும் அலங்கரிப்பார்கள். ஆடிப்பாடி மகிழ்வார்கள். இவற்றை யெல்லாம் செய்ய வேண்டாமென்று கட்டளையிடப் போகிறீர்களா?"

ஏமநாதன் முழுமையான மகிழ்வுடன் சிரித்தான்; "நாம் எமது நாட்டின் சிறப்பை மக்கள் மூலம் தான் அயல்நாட்டினருக்குக் காட்ட முடியும். நாகபுரி அரசன் தனது மாப்பிள்ளையின் பெருமையை உணர வேண்டும். அவருக்கு நமது பெருமைகளை உணர வைக்க வேண்டுமானால் மக்கள் மகிழ்வுடன் திருமண விழாவைக் கொண்டாடுதல் வேண்டும். இது உங்களுக்குப் பெருமை" என்றான் மணிமாறன்.

"நான் உயிரையே வைத்திருக்கின்ற எனது அன்புக்குரிய காதலி காயத்திரியின் மனம் மக்களின் மாபெரும் நிகழ்வுகளால் பொங்கிப்

பூரித்து மகிழ்வடையும். அதை நினைக்க எனக்கு ஆனந்தமாக உள்ளது. நான் அவளை விரும்பியதைப் போல அவளும் என்னை விரும்பியிருக்கிறாள். அவள் என்னை விரும்புகிறாளோ, அவளது தந்தை என்னை விரும்புவாரோ என அறிந்து கொள்ள நான் நக்கீரனை அங்கு அனுப்பினேன். காயத்திரி என்னைக் கண்ட நாள் முதல் உணவைக் கூட மறந்து என் நினைவாகவே உள்ளாளாம். நான் விரும்பும் பெண்ணை விட என்னை விரும்பும் பெண்ணை அடைந்த நான் பாக்கியசாலி" என்று கண்களை மூடினான் ஏமநாதன்.

"அது தெரிந்திருந்தால் தான் நான் திருமணவிழாவைப் பெரிதாகக் கொண்டாடுமாறு கூறினேன்" என்றான் மணிமாறன்.

**733. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு இறைஒருங்கு நேர்வது நாடு.**

பிறநாடுகளில் இருந்து மக்கள் வந்து குடியேறுவதால் உண்டாகும் சுமையைத் தாங்கி, அரசாளும் அரசனுக்கு வேண்டிய பொருட்கள் யாவற்றையும் கொடுப்பது நாடாகும்.

வளமான நாடு

ஏமநாதனின் திருமண ஏற்பாடுகள் மிகவும் விமர்சையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. விடிந்தால் திருமணம். மங்களபுரி சொர்க்கபுரியாகக்

காட்சியளித்தது. வீதிகள் தோறும் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. திருமணத்திற்காக அயல் நாடுகளில் இருந்து முக்கிய பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தனர். பருத்திமலை அரசரின் பிரதிநிதியாக முதலமைச்சர் சிவபூரணனின் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர் களும் வீரர்களும் வந்து கொண்டிருந்தனர். அவர்களை அடையாளங்கண்ட மங்களபுரி மக்கள் மங்கல கும்பங்களைத் தமது வீட்டு வாசல்களில் வைத்து மலர் மாலைகள் சூடி வரவேற்றனர். அவர்கள் நந்திதேவனது கொடுமைகளைத் தாங்கமுடியாது பருத்திமலைக்கு இடம்பெயர்ந்த போது அந்நாட்டின் முதலமைச்சர் அம்மக்களை நேரில் கண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறியது மட்டுமல்லாமல், அவர்களுக்கு வசதியான இருப்பிடங்களையும் அமைத்துக் கொடுத்தார். தமது நாட்டு மக்களைப் போல அவர்களை உபசரித்தார். பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்த மங்களபுரி மக்கள் முதலமைச்சரின் உதவிகளால் மனம் குளிர்ந்தனர். அத்துடன் கொடுங்கோலனான நந்திதேவனின் ஆட்சியை ஒழித்து, நல்லதொரு அரசை உருவாக்கிக் கொடுத்த பருத்திமலை அரசனையும், முதலமைச்சரையும் அவர்கள் தெய்வங்களாகவே நினைத்தனர். அதனால் மக்கள் நன்றிக் கடனாக தம்மாலியன்றளவு வரவேற்புச் செய்தனர். மங்கல வாத்தியக் கலைஞர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் அங்கு திரண்டு வந்து மங்கல வாத்தியங்களை இசைக்க, நடனமாதுக்கள் வீதிகளில் நடனமாடினர். அவற்றைக் கண்டு சிவபூரணன் மிகவும் மகிழ்ந்தார்; "மங்களபுரி மிகவும் சிறந்த நாடு; செல்வந்தநாடு; மிகக் கொடிய பசியும், தீராத நோய்களும், அழிவினை உண்டாக்க முடியாத அரண்களும் சூழ்ந்த நாடு. நந்திதேவன் முறைகேடாக ஆண்டு

நாட்டைச் சிதைத்து விட்டான். ஆனால் தற்பொழுது நாடு பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது என்பதை மக்களின் முகங்கள் காட்டுகின்றன. நன்றியுள்ள மக்கள்” என்று தளபதியான வீரபாண்டியனுக்குச் சொன்னார்.

“நநதிதேவன் நல்லவன். அவனைக் கதிர்வேலவனும் கடம்பனாரும் தான் கெடுத்தது. நீதியாக ஆண்ட அவனை தமது நன்மைக்காக அழகிய பெண்களை விட்டு, அவனை மயக்கித் தம்பக்கம் சேர்த்துக் கொண்டனர். நான் முன்பு அரச சபைக்குச் சென்றால் மிக மகிழ்வுடன் வரவேற்று உபசரித்து என்னை பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்து பொன்னும், மணியும் பரிசாகத் தரும் நந்தி தேவனைப் பிற்காலத்தில் அரச சபையில் காணமுடிவதில்லை” என்று கவலைப்பட்டார் பருத்திமலைப் புலவர் இளங்கோவன்.

“பருத்திமலை அரசர் வாழ்க! முதலமைச்சர் வாழ்க” என்று மக்கள் எழுப்பிய கோஷம் வானை அதிரச் செய்தது.

பருத்திமலையில் இருந்து முதலமைச்சர் தலைமையில் ஏராளமான வீரர்கள் தனது திருமணத்திற்காக வருகிறார்கள் என்பதை அறிந்த ஏமநாதன், மந்திரி பிரதானிகளுடன் அரண்மனை வாசலில் வந்து அவர்களை வரவேற்றான். முதலமைச்சரதும் தளபதியினதும் கால்கள் குடநீரால் கழுவப்பட்டன. அவர்களுக்கு மலர் மாலை சூடி, வணங்கிய ஏமநாதன் முதலமைச்சரை அரண்மனையுள் அழைத்துச் சென்று ஆசனத்தில்

அமர்ததினான். பணிப்பெண்கள் அவருக்குச் சாமரை வீசினர்.

சிவபூரணன் மகிழ்வுடன் புன்னகைத்தார்; “அரசே! நான் எதிர்பாராதவாறு மங்களபுரி முன்னேறிவிட்டது. முன்பு இந்த மக்கள் எமது நாட்டிற்கு வந்த போது அவர்களின் முகத்தில் பசிக்களையும், நோய்களின் தாக்கமுமே இருந்தது. இன்று அவர்களின் முகங்களில் என்றுமில்லாத ஆனந்தம் குடிகொண்டுள்ளது. செல்வம் கொளிக்கும் நாட்டை நந்திதேவன் கெடுத்து விட்டான். அது இப்போது பழைய நிலைக்குத் திரும்பி விட்டது. என்னை அவர்கள் வரவேற்ற விதத்தில் இருந்து நான் அதைப் புரிந்து கொண்டேன். அதை வைத்துக் கொண்டு நாளைக்கு என்னென்ன நிகழ்வுகள் நடைபெறுமென்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. மிகக் கொடிய பசியும், தீராத நோய்களும் தான் ஒரு நாட்டைக் கெடுப்பது. இங்கு அவை இல்லை. அழிவினை உண்டாக்கும் தீராத பகையும் உன்னை நோக்கி வராது. ஏனென்றால் நீ எல்லோருடனும் நல்லுறவு வைத்திருக்கிறாய். எல்லா நாட்டுப் பிரமுகர்களும் வந்திருக்கிறார்கள். நீ பாக்கியவான். நாகபுரியின் இளவரசி கொடுத்து வைத்தவள்” என்றார் சிவபூரணன்.

**734. உறுபசியும் ஓவாப் பிணியும்| செறுபகையும்
சேராது இயல்வது நாடு**

கொடிய பசியும், தீராத நோயும், வெளிநாட்டுப் படையெடுப்புக்களால் உண்டாகும்

அழிவும் வந்து சேராமல் நல்ல வகையில் இருப்பதே நாடாகும்.

## நல்ல நாடு

பருத்திமலை முதலமைச்சர் சிவபூரணன், பருத்திமலை அரசன் சுந்தரசேனன் கொடுத்தனுப்பிய திருமண வாழ்த்துச் செய்தியடங்கிய ஓலையை மங்களபுரி அரசனான ஏமநாதனிடம் கொடுத்தார். மிகுந்த மரியாதையுடன் சிவபூரணன் கொடுத்த ஓலையை பெற்றுக் கொண்ட ஏமநாதன், பெறுமதிமிக்க பொற்கம்பளித்துணியால் மூடப்பட்டிருந்த செய்தியடங்கிய ஓலையை எடுத்துப் பார்த்தான். பவளங்களும் முத்துக்களும் பதிக்கப்பட்டிருந்த உயர்தரப்பட்டுத் துணியில் கண்ணைக் கவரும் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முகப்பு அலங்காரமே ஏமநாதனின் சிந்தையைக் கவர்ந்தது.

மனதில் பொங்கி ஆர்ப்பரித்த மட்டற்ற மகிழ்வுடன் பருத்திமலை அரசன் சுந்தரசேனன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியைப் படித்தான் ஏமநாதன்.

“நண்ப!” அதை வாசித்து விட்டு சிந்தனையில் ஆழ்ந்தான் ஏமநாதன். “பெரியதொரு அரசன்; அரசனல்ல பேரரசன் தன்னை நண்ப! என்று விழித்தது அவனுக்குப் பெரு மகிழ்வைக் கொடுத்தது. தொடர்ந்து ஓலையைப் படித்தான். “நண்ப! நாளை நீ புது உலகத்துள் புகப் போகிறாய். வாழ்த்துக்கள்! திருமணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு புதிய உலகப்

பிரவேஷம். புதுமையும் புத்துணர்ச்சியும் இதுவரை கிடைக்காத புதிய பல அனுபவங்களும் கிடைக்கின்ற உலகம். ஓர் இளைஞனும் கன்னிப் பெண்ணும் கனவுகளிலும் கற்பனைகளிலும் கண்டு அனுபவித்த பேரின்பத்தை நேரில் சுவைத்து மகிழப் போகும் காலம். அதைவிட இருவரும் காணாது, கதைக்காது உணர்வுகளால் மட்டும் நினைவுகளோடு வாழ்ந்தீர்கள். உங்கள் காதல் இதுவரை நான் கேள்விப்பட்டிராத புதுக்காதல். ஒரே ஒருமுறை தூர இருந்து, கண்கள் மட்டும் கண்டு கலந்துரையாடி மகிழ்ந்த காதல் நிறைவேறுவது பேரின்பமானது. ஒப்பற்ற அழகியான காயத்திரி மீது எத்தனையோ நாட்டு அரசர்களும் இளவரசர்களும் மோகமுற்றனர். ஆனால் அந்தப் பேரழகி உன்மீது காதலுற்று, பேரரசர்களையெல்லாம் ஒதுக்கி உன்னை விரும்பி விட்டாள். அவளைப் பொன்னைப் போல மதித்துப் பூவைப் போல பாதுகாத்து காதலின்பம் பெற வாழ்த்துகிறேன்"

அந்த இடத்தில் வாசிப்பதை விட்டு விட்டுச் சிந்தித்தான் ஏமநாதன். அந்த ஓலையில் பதிக்கப்பட்ட இரத்தினக் கல்லொன்றுக்குள் காயத்திரியின் உருவம் தோன்றிச் சிரித்தது. பூவைப் போன்ற அவளது கண்கள் மெல்லத் துடித்தன. போதையூட்டும் செவ்விதழ்கள் மெல்ல அசைந்து செல்ல, வெண் சங்குப் பற்கள் ஒளிர்ந்தன. மோக மயக்கத்துக்குள்ளான ஏமநாதன் காயத்திரி தோன்றிச் சிரித்த அந்த இரத்தினக் கல்லைத் தொட்டுப் பார்த்தான். அதன் ஒளி ஏமநாதனது கைபட்டதும் குறைந்தது.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஏமநாதன் தொடர்ந்து ஓலையை வாசித்தான்; "ஒரு

பெண்ணின்மீது கொண்ட காதல் அளவுக்கதிகமானதாக இருக்கலாம்; இருக்க வேண்டும். ஆனால் மோகம் இருக்கக்கூடாது. ஏனென்றால் மனைவியைப் பெரிதும் விரும்பி அவளது சொற்கேட்டு நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார். அத்துடன் தனது கடமைகளையும் சரிவரச் செய்யமாட்டார். அதற்காக நான் பட்டத்தரசியின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்க வேண்டாமென்று கூறவில்லை. அரசனான உனக்கு ஆயிரமாயிரம் கடமைகள் உள்ளன. அவற்றை நல்லமுறையில் செய்ய மனைவியின் மீது கொண்ட மோகம் விடாது. நீ அரசிற்குப் புதியவன். அரசனானதும் காதல் கொண்டு திருமணம் புரிகிறாய். அதனால் நண்பனென்ற முறையில் சில ஆலோசனைகளைக் கூறுகிறேன். நாட்டை நல்ல முறையில் நீதி தவறாது ஆட்சிசெய்; பெரியோரை மதி. நாட்டை நல்ல முறையில் நிர்வகிக்காவிட்டால் ஆட்சிக்கு எதிராக நாட்டில் பல குழுக்கள் உருவாகும்; உடனிருந்தே கேடு செய்யும் உட்பகைகள் பல உருவாகும்; கெடுமதியாளர் பலர் நாட்டில் உருவாகி மக்களின் சிந்தனைகளைசக் கெடுப்பார்கள். ஒரு நாட்டில், ஆட்சிக்கெதிராக இயங்கும் பல குழுக்களாலும், உட்பகையாலும், கெடுமதியாளர்களாலும் கேடு உண்டாகும். அதனால் அவை ஏற்படாமல் பார்த்துக் கொள். இவை இல்லாத நாடுகள் தான் உலகில் உள்ள சிறந்த நாடுகளாகும். புதிய வாழ்வு தொடங்கும் நேரத்தில் தேவையில்லாத ஆலோசனைகளைக் கூறுகிறேன் என்று நினைப்பாய். இவை ஆலோசனைகள் அல்ல. உண்மையாக நிகழ்பவை. அதனால்தான் இன்பமான வாழ்வு தொடங்கும் போது கசப்பானதைச் சொல்கிறேன்" வாசிப்பதை நிறுத்தினான் ஏமநாதன்.

**735. பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு.**

பல மாறுபட்ட குழுக்களால் வரும் தொல்லைகளும், உடனிருந்தே அழிவு செய்யும் பகையும், அரசனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் கொலைத் தொழில் புரியும் குறுநில மன்னர்களும் இல்லாதது நாடாகும்.

## தலையாய நாடு

சிறிது நேரத்திற்கு முன்பு மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்த அவனது மனம் சற்றுத் தளர்ந்தது; "உண்மையான நட்புக் கொண்ட நண்பன் இன்பமான வேளைகளிலும் உள்ளதைத்தான் சொல்வான். ஒப்புக்கு மனம் மகிழ வேண்டுமென்று நினைத்து முகஷ்துதி செய்யமாட்டான். உண்மையான நட்பென்பது நண்பனுக்கு எதையும் உளமாரச் செய்வது; சொல்வது. நண்பன் விரும்பியவற்றையெல்லாம் செய்து கொடுப்பதில் இல்லை" என்று நினைத்தவாறு ஓலையைத் தொடர்ந்து படித்தான்.

"அரசன் இறைவன் எனக் கொள்ளப்படுகிறான். அதனால் அவனது பேச்சில் சத்தியம் இருத்தல் வேண்டும். செயல்கள் அனைத்தும் தர்மமுள்ளவையாக இருத்தல் வேண்டும். அரசன் எதைச் செய்தாலும் அதில் பக்கச் சார்போ, சுயநலமோ இருத்தல் கூடாது. உனது சொல் எப்பொழுதும் நாட்டிற்கு நன்மை

தருவதாக இருத்தல் வேண்டும். அரசனானவன் தனது குடிமக்களின் கருத்தைப் பிரதிபலித்தல் வேண்டும். நீதியை நிலை நாட்டுவதற்காக எல்லாவற்றையும் தியாகஞ் செய்ய நீ தயாராக இருத்தல் வேண்டும். பல அரசர்கள் அரச நீதிக்காகத் தமது பெற்றோர்களை, பிள்ளைகளை, தனது மனைவியைக் கூடத் துறந்திருக்கிறார்கள். இதை உனக்கு நான் இந்த இன்பமான வேளையில் ஏன் எடுத்துக் கூறுகிறேன் என்றால், நீ ஓர் இளைஞன். இளைஞனான நீ உன் மனங்கவர்ந்த பேரழகியைத் திருமணஞ் செய்யப் போகிறாய். அதனால் அவளைவிட உயர்ந்த பொருட்கள் எதுவும் இப்பொழுது உனது உலகத்தில் இராது. அதனால் இவற்றையெல்லாம் சிந்தித்து மனதில் இருத்திய பின், உனது காதலியோடு உறவாடு. அப்படி உறவாடும் போது இயல்பான உனது நிலை உனக்குத் தெரியும். நீ காதல் கொண்ட பெண்ணை விட, உன்னில் அன்பு கொண்ட லட்சக்கணக்கான உயிர்கள் நாட்டில் இருக்கின்றன என்ற எண்ணம் உனது மனதில் உருவாகும். அதை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தான் நண்பா இவற்றை எழுதினேன். இன்பமயமான நேரத்தில் உன்னை வருந்தியதற்காக மன்னிப்புக் கோரும் உனது நண்பன் சுந்தரசேனன்.

பெருமூச்சுவிட்டான் ஏமநாதன். கடிதத்தை வாசிக்கத் தொடங்கியது முதல் ஏமநாதனது முக மாறுதல்களை அவதானித்துக் கொண்டிருந்த முதலமைச்சர் சிவபூரணன் மனதுள்ச் சிரித்தார். முன்பிருந்த மட்டற்ற மகிழ்ச்சியை ஏமநாதனது முகத்தில் காண முடியவில்லை. அதில் திடகாத்திரம் பரவி இருந்தது.

“மன்னா, எமது மன்னர் தான் பட்ட கஷ்டங்களை நீ படக்கூடாது என்பதற்காகச் சில ஆலோசனைகளைக் கூறியிருப்பார். கண்டும், கேட்டும், முகர்ந்தும், தொட்டும், உண்டும் ஐம்புலன்களால் பெறுகின்ற இன்பங்கள் அனைத்தையும் அழகான நற்குணமுள்ள ஒரு பெண்ணிடத்தில் மட்டும்தான் பெறலாம். அதுவும் ஆணை விரும்புகின்ற ஒரு பெண்ணிடம் தான் அளவுக்கதிகமாகப் பெற முடியும். அதனால் எமது அரசர் எழுதியவற்றை நினைத்து மனம் சலிப்படையாதே. அவர் உண்மையான நிலையைக் கூறியுள்ளார். நான் இன்பமான நிலையைக் கூறுகிறேன். கணவனும் மனைவியும் கூடிப் பெறும் இன்பத்தை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. மனைவியிடம் பூரண இன்பம் பெறும் கணவனால் தான் தனது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும். மங்களபுரி தலைசிறந்த நாடு. அதன் பழம்பெருமைகளைக் காப்பாற்றுவதோடு நாகபுரியின் கௌரவத்திற்கு இழுக்கேற்படாதவாறும் நீ நடந்து கொள்ளல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பகைவர்களால் கெடுக்க முடியாததாகவும், கேடுகள் நேர்ந்தாலும் வளம் குறையாததாகவும் இருப்பதே சிறந்த நாட்டுக்குரிய இலக்கணமாகும். இந்த நாட்டை தலை சிறந்த நாடாக மாற்று. உனது இன்பக் கனவுகளுக்கு எனது வாழ்த்துக்கள்” என்று கூறி விடைபெற்றார் சிவபூரணன்.

சிவபூரணன் சொன்னவற்றை நினைக்க ஏமநாதனுக்கு உற்சாகம் பிறந்தது. காயத்திரியை நினைத்தான்; “பூரணமாகத் தனது மனைவியிடம் இன்பம் பெறும் ஒருவனால் தான் தனது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும். கண்டும்,

கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் ஐம்புலன்களால் பெறுகின்ற இன்பங்கள் அனைத்தும் ஓர் அழகிய இளம்பெண்ணால்தான் தரமுடியும்" காயத்திரி அவனது மனக்கண்களுக்குள் மலர்ந்தாள். அவளது பொலிவான அங்கங்களின் தோற்றம் அவனை மெய் மறக்கச் செய்தது.

**736. கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**
**நாடுஎன்ப நாட்டின் தலை.**

பகைவர்களால் கேடுகள் செய்ய முடியாததாகவும், கெட்டு விட்ட காலத்திலும் வளங்குறையததாய் உள்ள நாடே, நாடுகள் எல்லா வற்றிலும் தலையாய நாடு என்று கூறுவர்.

## உறுப்புக்கள்

"அன்பரே! உங்களை இந்திர விழாவின் போது கண்டேன். இன்னார் என்று தெரியாத போதும் உயர்ந்தவர் என்று உங்கள் உருவம் பறை சாற்றியது. உங்களைப் பார்த்தவுடன் எனது மனதைக் கொள்ளை கொண்டது உங்கள் உரமான வலிமை மிக்க மார்புதான். அதன் அழகு, திடம், பொலிவு என்னை வசீகரித்தது. நினைத்தவுடன் களிப்புக்குளாக்குகிறது. அன்பரே! உம் மீது உண்டான காதலை நான் எப்படி உமக்கு எடுத்துரைப்பது. அரண்மனையில் தங்கக் கூண்டில் வாழும் கிளியை வந்து கேட்டுப் பாருங்கள். நான் உங்கள் மீது கொண்ட காதலை எடுத்துக்கூறும். திருமணமான பின்பு நான் உங்கள் நாட்டிற்கு எனது கிளியுடன் தான் வருவேன். அப்பொழுது அந்தக்கிளி வெட்கப்படாமல்

எல்லாவற்றையும் கூறும்." மனதுள் மலர்ந்த காயத்திரி கூறினாள்

ஏமநாதன் சிரித்தான்; "சந்திரனில் கூட மறை உண்டு. ஆனால் உனது முகத்தில் மறைகள் எதுவும் இல்லை. சந்தனச்சிலை போன்ற உனது உடலை நான் எப்போது அணைத்து மகிழ்வேன் என நினைத்தேங்குகிறேன்"

கலகலவெனச் சிரித்தாள் காயத்திரி; "உங்களைப் போலத்தான் நானும் நினைத்தேங்குகிறேன். உங்களை இன்னாரென்று அறிந்தன்றே எனது மனம் மங்களபுரிக்கு வந்துவிட்டது. மனம் வந்தது போல என்னால் வரமுடியவில்லையே என்ற ஏக்கம் எனது உடலை வாட்டிக் கொண்டே இருக்கிறது. நாளை நான் உங்கள் மடியில் தலை வைத்து உறங்குவேன்..." நாணிக் கோணினாள் காயத்திரி.

"அந்த நன்நாள் நாளைக்கு வரவுள்ளது. நான் கனவு கண்ட இன்பங்களெல்லாம் நாளை தீரப்போகிறது. எனினும் அதற்கு இன்னும் பல மணிநேரம் இருக்கே. அதை எப்படித் தாங்கிக் கொள்வது. உமது நினைவுகளை யாருக்கும் வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருக்கிறேன் என்று தான் நான் நினைத்தேன். ஆனாலும் எனக்குத் தெரியாமல் உமது நினைவுகள் வெளிப்பட்டு மற்றவர்களுடன் கலந்துறவாடி விடுகின்றது. அரண்மனையிலுள்ளவர்கள் திருமணம் முடிந்த பின்புதான் அரசருடன் கதைக்க முடியும் என்று சொல்கிறார்கள்"

“உங்களது நிலையில் தான் நானும் இருக்கிறேன். உங்கள் நினைவை மறைக்கலாமென்று பார்த்தால் அது தும்மலைப் போல வெளிப்பட்டு விடுகிறது. நீங்கள் பொல்லாதவர். உங்கள் நினைவுகளே எனக்குத் தீராத துன்பங்களைத் தருகின்றன வென்றால் நீங்கள் எவ்வளவு துன்பங்களைத் தருவீர்கள்” சிணுங்கினாள் காயத்திரி.

“ஐயையோ, அழுகிறீரா…?” உமது கண்கள் கலங்கினால் எனது நெஞ்சு தீபற்றி எரியும்…”

“உண்மையாகவா?… உண்மையாகவா….? நான் கொடுத்து வைத்தவள். என்மீது நிரம்பிய அன்பு கொண்ட நீங்கள் சிறந்த ஒரு நாட்டின் மன்னர். அப்பா சொன்னார்; “நீ அதிஷ்டக்காரியம்மா. ஏமநாதன் இயல்பாகவே அரசர்களைவிடப் பெரிய பணக்காரன். அவன் அரசனாக இல்லாவிட்டால் கூட அவன் கேட்டிருந்தால் உன்னை அவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்திருப்பேன். அவன் பெரும் வர்த்தகன். அதைவிட மங்களபுரி ஒப்புயர்வில்லாத சிறந்தநாடு. ஊற்றுநீர், மழைநீர் என்ற இருநீர்வளமும், இயற்கையாகவே அரனாக அமைந்த மலைகளும் அம்மலைகளில் உருவாகிப் பாயும் ஆற்று நீரும் வலிமை மிக்க கோட்டைகளும் உடைய நாடு மங்களபுரி. அதனால் தான் பேரரசர்கள் பலர் உன்னை விரும்பிக் கேட்டும் அவர்களுக்கு உன்னைத் திருமணஞ் செய்து கொடாது ஏமநாதனுக்குத் திருமணஞ் செய்து கொடுக்கச் சம்மதித்தேன். எந்தப் பேரரசனும் மங்களபுரியை எதிர்க்கத் துணிய மாட்டான்” என்றவர்.

“அப்படியா சொன்னார்....? எனது நாட்டின் பெருமைகளை நான் அறிந்து கொள்ளவில்லை. ஆனால் உனது தந்தை அறிந்து விட்டார். அதனால்தான் நீர் என்னை விரும்புகிறீரோ....”

காயத்திரியின் முகம் வாடிச் சோர்ந்தது. “இது தானா நீங்கள் என்மீது வைத்த அன்பின் அடையாளம்” அழுதாள் காயத்திரி.

“ஐயையோ...” பெரிதாக அலறினான் ஏமநாதன்.

“என்ன...?” என்றவாறு ஓடி வந்தான் ஒருவீரன்.

“ஒன்றுமில்லை. நீ போ” என்றான் ஏமநாதன்.

வீரன் சிரித்தான். அதைக் கண்டும் காணாதவன் போல இருந்தான் ஏமநாதன். அவனுக்குத் தன்னை நினைக்க வெட்கமாக இருந்தது. மீண்டும் அவனது மனம் காயத்திரிரைய நோக்கிச் சென்றது. அவள் அவனுள்த்தோன்றி மின்னலாகச் சிரித்தாள்; “எப்பொழுது விடியும்; எப்பொழுது காயத்திரி எனக்கருகில் வருவாள்” என்று எண்ணியபடி இருந்தான் ஏமநாதன். அவனுக்கு நித்திரை வர மறுத்தது.

---

**737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.**

---

ஊற்று, மழை ஆகிய இரு நீர்வளமும், இயற்கையாகவே தகுந்த முறையில் அமைந்த மலைகளும் அந்த மலைகளில் இருந்து பாய்ந்து வரும் நீர் வளமும், வலிமையான அரன்களும் ஒரு நாட்டின் உறுப்புக்கள் ஆகும்.

## அழகான ஐந்து

திருமண மண்டபத்தில் ஆயிரக்கணக்கான பெரியவர்கள் ஆசிகூற மங்கல கீதங்கள் ஒலிக்க ஏமநாதன் காயத்திரிக்கு மங்கலநாண் சூடினான். ஆயிரக்கணக்கான பெரியவர்கள் அரிசியும் பூக்களும் தூவினர். பலமணிநேரம் திருமண மண்டபத்துள் பூமழை பொழிந்தது. மணமக்களை மலைபோலக் குவித்த மலர்கள் மூடின.

“எமக்கெல்லாம் விடிவுகாலம் வந்து விட்டது. எமக்கினித் துன்பமில்லை” என்று மக்கள் குதூகலித்தனர்.

கோயில்களிலெல்லாம் காண்டாமணி ஒலித்தது. மங்கல வாத்தியங்கள் முழங்கின.

அந்தணர்களும் முனிவர்களும் அரசனையும் அரசியையும் வாழ்த்தினர்.

“மக்களின் துயர் துடைத்த மகேசா, இன்று போல நீ என்றும் வாழ்ந்து மக்களின் துயர் நீக்கி இன்பமாக வாழ்க” என்று ஒரு பிராமணர் வாழ்த்துக் கூறினார்.

“மக்கள் தொண்டுதான் மகேசனது தொண்டென்று நினைத்துக் காரியமாற்றுபவனே! நினைப்பதல்ல முக்கியம், செயற்படுவதே வெற்றியென்பது தெரிந்து கருமமாற்றிய செயல் வீரனே! நீ பல்லாண்டு வாழ்ந்து மேன்மேலும் தொண்டாற்ற வேண்டும்” என்றொரு பிராமணர் வாழ்த்தினார்.

“ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் கடவுளைக் காண்பவன்தான் உண்மையான அரசன். நீ உண்மையான அரசன். கடவுளின் கிருபை உனக்கு எப்போதும் கிடைக்கும். வாழ்த்துகிறேன்” என்றார் ஒரு தவசி.

“அச்சமில்லாத அரசனே! அஞ்சுபவன் சதா மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். நீ வீரன்; மாவீரன். உனது காலத்தில் மங்களபுரி சிறந்து விளங்கட்டும்” என்று வாழ்த்தினான் ஓர் அந்தணன்.

“நீ நூறாண்டு காலம் வாழ வேண்டும்; உன் குலம் தழைக்க வேண்டும். இந்நாடு ஒப்புயர்வில்லாத புகழை அடைய வேண்டும்; நாட்டில் நோயில்லாமல் இருத்தல் வேண்டும். சிறநத செல்வந்த நாடாதல் வேண்டும்; விளைபொருட்கள் குறைவில்லாது விளைதல் வேண்டும். நீ என்னும் இன்பமாக வாழ வேண்டும்.” என்றார் ஒரு புலவர்.

மணிமாறன் முனிவரின் உருவில் மணமக்களுக்கு ஆசி கூற வந்தான். “அரசே! நினைத்த வாழ்வு தங்களுக்குக் கிடைத்து விட்டது. மனம் வானில் பறக்கிறது. இனி நாட்டின் நலனில்

தாங்கள் தீவிரமாகக் கவனமெடுத்தல் வேண்டும். மங்களபுரியை சிறந்த நாடாதல் வேண்டும். நோயில்லாத வாழ்வு, குறைவில்லாச் செல்வம், தேவைக்கு மிஞ்சிய விளைவு, இன்பமான வாழ்க்கை, போதிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டின் அழகை மேலும் மேம்படுத்தும். இந்த ஐந்தையும் நாட்டில் உண்டாக்கி ஒப்பாரும்மிக்காருமின்றி நீ அரசாள வாழ்த்துகிறேன்.”

சபையோர் மகிழ்ச்சியாரவாரஞ் செய்தனர். “எமது மன்னர் நீர் கூறிய ஐந்தை விடக் கூடுதலாகச் செய்வார்” என்று பலகுரல்கள் ஒலித்தன.

“ஏமநாத மகாராஜா வாழ்க”
‘‘காயத்திரிதேவி வாழ்க’’
‘‘நாகபுரி அரசர் வாழ்க’’
மக்கள் வானதிர வாழ்த்தினர்.

திருமணஞ் சடங்குகள் முடிந்ததும் ஏமநாதன் பள்ளியறைக்குச் சென்றான். அந்தப் பள்ளியறை விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விதம் விதமான மலர்களிலிருந்து வீசியவாசம் மனதில் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. தேவதையைப் போல அவனின் முன்னால் காயத்திரி நின்றாள். அவளது முகம் கவிழ்ந்திருந்தது.

“தேவி” மெல்ல அழைத்தான் ஏமநாதன்.

பதிலில்லை. மெதுவாக அவளது முகத்தை நிமிர்த்தினான். அவளது முகமெங்கும்

முத்துக்களாக வியர்ந்திருந்தது. அவளது கையைப் பிடித்துப் பஞ்சணையில் அவளை அமர்த்தினான். அவனாலும் பேச முடியவில்லை. காதலர்களானாலும் அன்று தான் அவர்கள் முதன்முதலாகச் சந்திக்கிறார்கள். நேரம் மௌனமாகக் கழிந்து கொண்டிருந்தது.

“தேவி” என்றவாறு அவளது தோள்களைப்பற்றினான். அவள் அவனது நெஞ்சில் சாய்ந்தாள். பரவசமொன்று உடலெங்கும் சிலிர்த்தோடியது.

“உங்களது நாட்டிலுள்ளவர்கள் சுயநலமுடையவர்கள்” இனிய நாதமாக ஒலித்தது அவளது குரல்.

“ஏன்?” பதறினான் ஏமநாதன்.

“திருமணமானவர்களை இப்படியா வாழ்த்துவது? பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்” என்று கூறாமல் மக்களைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் வாழ்த்துகிறார்கள். நாட்டின் அழகு ஐந்தாம். அந்த ஐந்தையும் கவனியுங்கள்” பொய்யாகக் கோபித்தாள் காயத்திரி.

**738. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.**

நோய் இல்லாதிருத்தல், செல்வம், விளை பொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகாகும்.

## நாட்டின் விதம்

காயத்திரியை இறுக அணைத்தான் ஏமநாதன். அவளது உடல் மிகவும் மிருதுவாக இருந்தது. அவளது கண்கள் படபடவெனத் துடித்தன. உதடுகள் மெல்ல அசைந்தன. அவளது தூய வெண்ணிறப்பற்கள் ஒளிர உதடுகள் துடித்தன; "மென்மையான மொழிகளைப் பேசுகின்ற காதலியினுடைய தூய்மையாக பற்களில் ஊறும் நீா் பாலோடு தேன் கலந்தது போல மிகவும் இனிய சுரைவயை உடையது" முன்பு நல்லதொரு பழந்தமிழ் நூலில் கற்றது அவனது நினைவுக்கு வந்தது. சிரித்தான்.

காயத்திரி சிணுங்கினாள். அவளது உஷ்ணமான மூச்சுக்காற்று அவனது உதடுகளில்பட்டது. "நான் கேள்விப்பட்டதை சுவைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்" அதன் பின் அவன் பேசவில்லை. சிலநிமிடங்கள் அந்தரத்தில் பறப்பதைப் போன்ற உணா்வு அவனுக்கு ஏற்பட்டது.

திடீரென புதிய எதிர்பாராத நிகழ்வால் தடுமாறிய காயத்திரி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவனோடு சங்கமமானாள்.

சுவரில் வரையப்பட்டிருந்த ஒரு குழந்தையின் சித்திரம் மகிழ்வுடன் சிரித்துக் கையைத் தட்டிக் கொண்டிருந்தது; "அருமையான தொரு சித்திரத்தை உங்கள் ஓவியா் சுவரில் வரைந்துள்ளாா்" என்றாள் காயத்திரி.

ஏமநாதன் நிமிர்ந்து பார்த்தான். அந்தக் குழந்தையின், ஓவியம் அவனைக் கவர்ந்தது; “உமக்குக் குழந்தைகள் மீது ஆசையா…? நாம் பத்துப் பதினைந்து குழந்தைகளைப் பெறுவோம்” என்றான் ஏமநாதன்.

காயத்திரி நாணிக்கோணினாள். அவளது முகம் சிவந்தது; “மங்களபுரி சகல வளங்களும் நிறைந்த நாடு. ஊற்று நீரும், மழை நீரும், ஆற்று நீரும் குறைவில்லாது இருக்கும் நாடு. அத்துடன் முயற்சிகள் செய்து சிரமப்பட்டு உழைக்காது விட்டாலும் போதியளவு விளைச்சலைத் தருகின்ற சிறந்த நாடு. பல நாடுகளில் சிரமப்பட்டு உழைத்தாலும் போதிய விளைச்சலைப் பெற முடியாது. எமது நாடு அப்படியானதல்ல. நீர் எத்தனை குழந்தைகளைப் பெற்றாலும் எமது நாடு தாங்கும்.’’ பெரிதாகச் சிரித்தான் ஏமநாதன்.

“ஏன் எமது நாடு வறிய நாடென்று கருதுகிறீர்களா…?’’ செல்லமாகக் கோபித்தாள் காயத்திரி. அவளது முகம் சற்றுக் கோணலாகியது.

“நீர் கோவிக்கும் போது பிரமாதமாக இருக்கிறீர். கிடைத்தற்கரிய அழகுப் பெட்டகத்தை அடைந்த நான், எனது தேவதையின் நாட்டைக் குறைத்து மதிப்பிட்டால் அது எனது தேவதையைக் குறைத்து மதிப்பிடுவது போலாகும். உமது நாடும் தலை சிறந்த நாடுதான்…” ஏமநாதன் கூறிக்கொண்டிருக்கும் போது குறுக்கிட்டாள் காயத்திரி; “நீங்கள் அதைச் சொல்லத் தேவையில்லை. எமது நாட்டில் மழைக்குப் பஞ்சமில்லை. மாதம் மும்மாரி பொழிகிறிது.

அதனால் நாம் முயற்சி செய்யாமலே அதிக விளைச்சலைப் பெறுகிறோம். காய்கனிவகைகளுக்கும் தானியங்களுக்கும் எமக்கு ஒரு போதும் தட்டுப்பாடேற்படுவதில்லை”

“ஒப்புக்கொள்கிறேன் மகாராணி. தங்கள் அழகு தங்கள் நாட்டின் வனப்பைப் பறைசாற்றுகிறது. நான் முதன்முதலாகக் கண்டன்று இப்படியொரு அழகான தேவதை பெண் உருவில் பிறந்திருக்கிறாளா என்று ஆச்சரியப்பட்டேன். விசாரித்த பின்புதான் தெரிந்தது நாட்டின் செல்வச் செழிப்புத்தான் உம்மீது படர்ந்திருக்கிறதென்று.”

சிணுங்கினாள் காயத்திரி. அவன் கூறுவதைக் கேட்க அவளுக்கு வெட்கமாக இருந்தது; “அன்று நான் உமது முகத்தைக் கண்ட போது தெய்வப் பெண்ணோ..! அழகிய மயிலோ…! ஆபரணங்களை அணிந்த ரதியோ” என்று எண்ணி மயங்கினேன். இன்று உமது பெண்மையின் பூரணத்துவத்தைக் கண்டு உமதுநாட்டின் தன்மையை உணர்ந்து கொண்டேன். உண்மையைச் சொல்வதனால் உமது வனப்புக்கு முன் இந்த நாடு ஒரு தூசிக்கு சமமானது”

“அப்படிச் சொல்லாதீர்கள். பிறந்தநாடு தான் ஒருவனுக்குச் சிறந்த நாடு. புகுந்தநாடுதான் பெண்ணுக்குச் சிறந்தநாடு. சிறந்த நாட்டின் உறுப்புக்கள் அனைத்தும், இங்கு உண்டு. அழகும், முயற்சி செய்யாமலே பெரும் பலனும் பெறும் தலை சிறந்த நாட்டின் மகாராணி நான். எனது

நாட்டைக் குறை கூற நான் அனுமதிக்க மாட்டேன்” சற்று அகங்காரமாகச் சொன்னாள் காயத்திரி.

“அப்படியா? மன்னித்துக் கொள்ளுங்கள் மகாராணி” என்றான் ஏமநாதன். காயத்திரி எதையோ சொல்ல உதட்டைக் குவித்தாள். ஏமநாதன் அதற்கு அனுமதிக்கவில்லை. சில நிமிடங்களுக்குப் பின் அவள் சொன்னாள்; “நீங்கள் மோசமானவர்”

**739. நாடுஎன்ப நாடா வளத்தன; நாடு அல்ல**
**நாட வளம்தரு நாடு.**

முயற்சி செய்யாமல் வளத்தைத் தரும் நாடுகளே சிறந்த நாடுகள் என்று சொல்வார்கள்; வருந்தி உழைத்தால் வளத்தைத் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.

## பயனில்லாத நாடு

“நான் மோசமானவனா...? எதை வைத்துக் கொண்டு அப்படிச் சொல்கிறீர்? நாம் இன்றுதான் முதல் முதலாகக் கதைக்கிறோம். அன்றொரு நாள் மின்னலைப் போலத் தோன்றி எனது கண்களைப் பறித்துச் சென்றீர். அந்த நினைவுகள் எனது மனதை விட்டு இன்றுவரை அகலாது தாங்க முடியாத பல தொல்கலைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. இன்று நேரில் தரிசனம் தந்து நான்பட்ட தொல்லைகளையெல்லாம் நீக்கி, என்னைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றீர். சொர்க்கபுரியில் வைத்து நான் மோசமானவன் என்று

சொன்னால் அதன் அர்த்தமென்ன…?” வியப்படைந்தவன் போலப் பாவனை காட்டியவாறு கேட்டான் ஏமநாதன்.

“குழந்தைப் பிள்ளை எதுவும் விளங்காதவர் போன்ற நடிப்பு. உண்மையாக உங்களுக்கு அது புரியவில்லை…”

“இல்லை,” என்று சிரித்தவாறு அவளின் அருகில் வந்த ஏமநாதன் அவளை உற்றுப் பார்த்தவண்ணம் நின்றான். காயத்திரி மெல்ல அவனை நெருங்கினாள். அவளது பட்டுக் சேலை அவனுடலை மெல்ல உரசியது. கண்கள் நடனமாட, உதடுகள் ஒட்டிக் காய்ந்து துடிக்க தலையை நிமிர்த்தி அவனை அண்ணாந்து பார்த்தாள் காயத்திரி. அவன் இறுக அணைத்துத் தேனும்பாலும் கலந்து தரமாட்டானா?” என அவளது உள்ளம் ஆவலுடன் துடித்தது.

“மோசமானவன் எப்படியும் நடந்து கொள்ளலாம்” என்றவாறு அவளின் அருகே வந்தான். காயத்திரியின் இதயத்துள்பட்டாம்பூச்சிகள் பல ஆர்ப்பரித்துப் பறந்தன. மென்மையான மயக்கத்துடன் அவனின் தோளில் சாய்ந்தாள்.

“உம்மீது நான் கொண்ட மோக மிகுதியால் நான் நாட்டை மறந்து விடுவேனென அறிஞர்கள் நினைத்துப் பயப்படுகிறார்கள். எனக்கும் அந்தப் பயமுள்ளது. அழகான உம்மை ஒருகணம் கூடப்பிரிந்திருப்பேனோ தெரியவில்லை. இப்போது யாராவது நாட்டைப் பற்றிக் கேட்டால் எனக்கு நாடு

வேண்டாம். இந்தச் சந்தனச் சிலைதான் வேண்டும் என்பேன்” மோக மிதியால் உழறினான்.

“இந்தநிலை நீடிக்குமா...? அரசர்களைப் பொறுத்தவரை பெண்கள் போகப் பொருட்கள். உங்கள் நாட்டின் முன்னைய மன்னனுக்குப் பல பெண்களின் தொடர்பிருந்தது...”

காயத்திரியை மேலே அவளைச் சொல்லவிடாது அணைத்து சுவைத்து மகிழ்ந்தான் ஏமநாதன்.

“நீர் மிகுதியைச் சொல்லக் கூடாதென்பதற்காகத்தான் அப்படி நடந்து கொண்டேன். நான் இராமபக்தன். அதனால் ஏகபத்தினி விரதனாகவே வாழ்நாளைக் கழிப்பேன். உலகில் தோன்றிய எல்லா நூல்களிலும் என்ககுப் பிடித்த சிறந்த நூல் இராமாயணம். கிருஷ்ணர் அதில் மனிதன் எப்படி வாழ வேண்டுமென்று வாழ்ந்து காட்டினார். இராமாயணக் கதா பாத்திரங்கள் யாவும் தர்மத்தையே போதிக்கின்றன. நாம் எல்லோரும் இராமன், தனது சகோதரர்களுள் இலக்குவனைத்தான் மேலானவன்; தன்மீது அளவில்லாத அன்பு கொண்டவன் என்று இராமர் நினைப்பாரென எண்ணினோம். ஆனால் இராமன் பரதன்தான் தன்மீது அதிக பாசமுள்ள சகோதரன்” என்றான். இராமரது குணாதிசயங்களால் கவரப்பட்டு அவரையே தெய்வமாக மதிக்கும் நான் உம்மைத் தவிர எந்தப் பெண்ணையும் மனதால் கூடத் தீண்டமாட்டேன்” என்றான் ஏமநாதன்.

காயத்திரி சிலிர்த்துப் போனாள். வேடிக்கையாகத் தன் மனதில் இருந்ததைக் கூறியவுடன் ஏமநாதன் இப்படிச் சொல்வானென அவள் கனவு கூடக் காணவில்லை.

“நான் பாக்கியசாலி. காலம் பூராகவும் நான் உங்கள் அடிமையாக இருந்து சேவகஞ் செய்வேன். உங்கள் மொழியில் கூறுவதானால் நான் இராமதாசனான அனுமானைப் போல இருப்பேன்” என்றாள் காயத்திரி.

காயத்திரியை இறுக அணைத்தான் ஏமநாதன்; “அன்பே! நான் இந்த நாட்டையும் மக்களையும் அளவுக்கதிகமாக விசுவாசிக்கிறேன்…” அவன் கூறும் போது காயத்திரி சற்றுக் கோபத்துடன் குறுக்கிட்டாள்; “என்னை விசுவாசிக்கவில்லையா?”

“உம்மை எப்படி விசுவாசிப்பது. நீர் எனது உயிர். ஒரு நாட்டில் நல்ல அரசனின் ஆட்சி நடைபெறாவிட்டால், அது சகல வளங்களை உடைய நாடாக இருந்தாலும் அவற்றால் மக்கள் பயனடைய மாட்டார்கள்” என்று எனது குரு கூறுவார். அதனால் நல்லாட்சி நடத்த எனக்கு நீர் உறுதுணையாக இருந்து வழிகாட்ட வேண்டும். செய்வீரா…?”

“உங்கள் உயிர்நான்தான் என்று சொன்னபின் உங்களுக்காக உயிரை விடவும் சித்தமாக இருப்பேன்” என்று கூறியவாறு

ஏமநாதனின் நெஞ்சில் தனது முகத்தைப் புதைத்தாள் காயத்திரி.

**740. ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே வேந்துஅமை வில்லாத நாடு.**

ஒரு நாட்டில் நல்ல அரசனின் ஆட்சி இல்லாவிட்டால், தேவைக்கேற்ற வளங்கள் யாவும் அமைந்திருந்தாலும் அவற்றால் பயன் இல்லாமல் போகும்.

## அரண்

கடற்கரைக்காற்று கடல்நீரைப் புரட்டியெடுத்துக் கொண்டிருந்தது. வித்தியாவும் கஜேந்திரனும் வழமையாக இருக்கும் ஓடத்தின் பின் பக்கமாக இருந்தனர். அதனால் காற்றின் வேகம் அவர்களைப் பாதிக்கவில்லை; "என்னால் அந்தக் கதைகளை வாசிக்க முடியவில்லை. என்னுடன் விசர்பிடித்து அலட்டுபவையெல்லாம் கதைகளில் வந்திருக்கு. எனக்குப் பிடிக்கவில்லை".

"அப்படியா...? நான்வாழ்வதல்ல... செய்வதெல்லாம் உமக்காகத்தானே. உம்மை நல்லமுறையில் வாழவைக்கப் படிக்கிறேன். உமது எதிர்காலத்தை அறியச் சோதிடங்கற்றேன். உம்மீது கொண்ட காதலை எழுதினேன். கவிதைகளும் அப்படித்தான். உம்மை விட்டால் கதையே இல்லை. உம்மை நினைக்காவிட்டால் என்னால் எழுத முடியாது. ஏன் வாழக்கூட முடியாது. அதனால் தான் உம்மோடு பிரச்சினைப் பட்ட போதெல்லாம் சமாதானமாகித் திரும்பித் திரும்பி வருகிறேன்.

இலக்கியப் பேரவையில் பேசும்போது என்ன சொன்னேன்…” கேட்டுவிட்டு நிறுத்தினான் கஜேந்திரன்.

வித்தியாவுக்குக் கோபம் வந்தது. “ஆட்களுள்ள சபையிலும் யோசிக்காமல் கதைக்கிறீர்கள். என்னுடைய நாவில் இருப்பது வித்தியா” என்று கூறிவிட்டுச் சிலகணங்கள் பேசாமல் நின்று விட்டுக் ‘கணபதி’ என்றீர்கள். வித்தியாவைச் சந்தித்தால் தான் என்னால் எழுத முடியும்” என்றீர்கள்.

“உண்மையைத்தானே சொன்னேன். இதைப்படித்துப்பாரும்” என்று ஒரு தாளை நீட்டினான். அவளுக்கு அதை உடனே வாசித்து பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு மனதில் எழுந்தது. அவளைப் பற்றி அவன் எழுதுவது அவளுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கும். இருப்பினும் விருப்பமில்லாதவள் போலக் கோபப்படுவாள்.

வீட்டுக்கு வந்த வித்தியா கதையை வாசிக்கத் தொடங்கினாள்

பஞ்சணையில் நிமிர்ந்து படுத்திருந்த காயத்திரியை உள்ளே வந்த ஏமநாதன் பார்த்துக் சொக்கிப் போனான். ஏமநாதன் வரும் காலடி ஓசை கேட்ட காயத்திரிதான் நித்திரையாகியிருப்பவளைப் போல நடித்தாள். ஏமநாதன் அருகில் வந்து கூர்ந்து பார்த்தான். அவளது எளில்மிக்க கண் இமைகள் மெல்ல அசைந்து கொண்டிருந்தன. உதடுகள் மலர்வதற்காகத் துடித்துக் கொண்டிருந்தன.

அதனால் அவள் நித்திரை போல நடிக்கிறாள் என்று ஏமநாதன் நினைத்தான்; அதனால் காயத்திரியின் தோழியை அழைத்தான். அவள் ஓடிவந்தாள்; "மலர்விழி. நன்றாகக் களைத்து விட்டேன். மகாராணி உறங்குகிறாள். அவளின் நித்திரையைக் கெடுக்கக்கூடாது. நீ எனக்குப் பழரசம் கொண்டுவா. நான் அவசரமாக அரச சபைக்குச் செல்ல வேண்டும்" என்றான்.

காயத்திரி எழுந்து கட்டிலில் அமர்ந்தாள்; "என்னை எழுப்பலாம்தானே."

"நித்திரை கொள்பவர்களை எழுப்பலாம். நித்திரை மாதிரி இருப்பவர்களை எழுப்ப முடியுமா" என்று சிரித்தான்.

"நீங்கள் சரியான கள்வன்" என்று காயத்திரி கூறும் போது மலர்விழி பழரசக் கிண்ணத்துடன் வந்து சொன்னாள்; "முதலமைச்சரும், சுவாமியாரும் உடனே தங்களைச் சந்திக்க வேண்டுமாம்"

உடனே ஏமநாதன் எழுந்து அவரசமாக வெளியே வந்தான். முதலமைச்சரின் முகத்தில் கலவரம் தெரிந்தது.

"அரசே! நாகபுரிச்சிறையில் இருந்து குதிரைப்படைத் தளபதி தப்பிச் சென்று மகதநாட்டு இளவரசனான வீரமார்த்தண்டனுடன் சேர்ந்து விட்டான். அவனுக்கு காயத்திரி மேல் அளவுக்கதிகமான மோகம்இருந்தது. அவனுடன் செல்வபுரி அரசன் நடனசேகரனும் சேர்ந்து விட்டான்.

எனவே விரைவில் அவர்களிருவரும் சேர்ந்து எமது நாட்டின் மீது படையெடுக்கலாம். அதனால் எமது நாட்டின் அரண்களை கண்காணித்துச் சீர்செய்ய வேண்டும். நாம் பிற நாட்டின் மீது போர் புரியப்படை செல்வதாக இருந்தாலும், பகைவர் எமது நாட்டின் மீது படையெடுத்து வந்தாலும், நாம் பகைவரைப் பதுங்கியிருந்து தாக்குவதற்கு அரண் தேவை. எனவே எமது நாட்டிலுள்ள அனைத்து அரண்களையும் சீர்செய்ய அனுமதியுங்கள்" என்றார் முதலமைச்சர் வெங்கடேசர்.

"நான் திருமணம் முடித்துச் சிலநாட்களேயாகின்றன. அதனால் நான் நாட்டைக் கவனிக்காதிருப்பேன் என எதிரிகள் எண்ணுவார்கள். உடனடியாக முப்படைத் தளபதிகளையும் அழையுங்கள். அரண்கள் முழுவதும் நல்ல நிலையில் தான் இருக்கின்றன. எனினும் அவற்றைப் பரிசோதனை செய்து பலப்படுத்துங்கள். வீரர்கள் ஆயிரம் பேர் உடனடியாக அக்கடமையில் ஈடுபடட்டும் நான் சகல அரண்களையும் பார்வையிடல் வேண்டும். அதற்கான ஒழுங்கை மேற்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் சபையை நோக்கி நடந்தான் ஏமநாதன்.

**741. ஆற்று பவர்க்கும் அரண்பொருள்; அஞ்சித்தன்**
**போற்று பவர்க்கும் பொருள்.**

இன்னொரு நாட்டின் மீது போர் தொடுத்துச் செல்பவர்களுக்கும் அரண் பாதுகாப்பளிக்கிறது;. பகைவர்கள் படையெடுத்து வரும்போது பதுங்கியிருந்து தாக்கவும் அரண் பயன்படுகிறது.

## சிறப்பான நான்கு

இரவு பத்து மணிக்கு மேலாகியும் ஏமநாதன் அரண்மனைக்குத் திரும்பாது சுவர்ணா ஆற்றங்கரையில் அமைக்கப்பட்ட அரண்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அவனது மனதில் மகதநாட்டு இளவரசன் வீரமார்த்தாண்டனின் நினைவு எழுந்து கொண்டிருந்தது; ‘‘காயத்திரி கன்னியாக இருந்த போது அவன் ஆசைப்பட்டது நியாயம்தான். வீரமார்த்தாண்டன் காயத்திரியை விரும்பினானே தவிர காயத்திரி அவனை விரும்பவில்லை. அப்படியானாவள் இன்னொருவனை விரும்பித் திருமணஞ் செய்த பின்பு, அவளின் மீது இச்சை கொள்வது நியாயமானதல்ல. அதனால் அவன் படையெடுக்கு முன் நாம் படையெடுத்துச் சென்று அவனை கொல்லுதல் வேண்டும். வீரமார்த்தாண்டன் மகதநாட்டுப் பெண்கள் பலரை பலாத்காரமாகக் கடத்திச் சென்றவன். பல பெண்கள் அவனது இச்சை தீர்க்கப்பட்ட பின்பு கொல்லப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். இரண்டு தினங்களுக்கு முன்பு நக்கீரன் வந்து சொன்ன செய்தி அவனது மனத்திரைக்கு வந்தது;. ‘‘அரசே, அருண்பாண்டியன் நாகபுரிச் சிறையில் இருந்து தப்பிச் செல்வதற்கு, நாகபுரியில் உள்ள சிலர்தான் காரணமென நான் நினைக்கிறேன். நாகபுரிக் கோட்டை மிக்க பலமுடையது. அக்கோட்டையில் இருந்து அருண்பாண்டியன் தப்பிச் சென்றானென்றால்நாகபுரி அரசருக்கு எதிரானவர்கள் பலர் அங்கிருக்கிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது. வீரமார்த்தாண்டன் கொடியவன். பெண் பித்துப் பிடித்தவன். அதனால் திரவியங்களைக் கொடுத்து நாகபுரியில்

முக்கியமான சிலரை விலைக்கு வாங்கி யிருப்பான். அவனுக்கு நாடுகளைப் பிடிப்பதை விடப் பெண்களைப் பிடிப்பது தான் நோக்கம்.''

''அரசே! காலையில் இங்கு வந்தீர்கள். சிறந்த அரண்கள் பல நமது நாட்டில் உள்ளன. அவற்றைக் கடந்து எந்த நாட்டரசனாலும் எமது நாட்டைக் கைப்பற்ற முடியாது. மகத நாட்டின் வடக்குப் புறமாக இருக்கும் இந்த அரண்மிக்க பாதுகாப்புடையது. மணிபோலத் தெரிந்த சுவர்ணா ஆற்று நீரும், வெட்ட வெளியான முன்பகுதி நிலமும், அருகே குளிர்மையான நிழலைத் தருகின்ற காடும், காட்டு எல்லைப் பகுதியில் உள்ள மலையும் எமக்கு மிகுந்த பாதுகாப்பைத் தரும். முன்பும் பலமுறை மகதநாட்டரசர் எமது நாட்டின் மீது போர் தொடுத்த போது அவர்களை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்ட அரண்களில் இருந்துதான் எமது வீரர்கள் துரத்தியடித்தனர். மகதநாட்டுப் படையினரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்ட போதும் அவர்களால் இறந்த வீரர்களின் உடல்களைக் கூட எடுக்க முடியவில்லை. பாதுகாப்பான அரண் நான்கு தன்மைகளைக் கொண்டது. தெளிந்த நீர், வெளியான இடம், மலை, காடு இந்த நான்கும் அமைந்த அரண் இது. எனவே கவலை கொள்ளாது தாங்கள் அரண்மனைக்குத் திரும்புங்கள். தாங்கள் திருமணமாகிச் சில நாட்கள் தான் ஆகின்றன. பட்டத்தரசி தனிமையில் இருந்து தங்களை எதிர்பார்த்திருப்பார். எமது தளபதிகளும் வீரர்களும் நாட்டுப் பற்று மிக்கவர்கள். ஒருபோதும் அவர்கள் எதிரிகளை நாட்டுள் வரவிடமாட்டார்கள்'' என்றார் தளபதி.

ஏமநாதன் சிரித்தான்; ‘‘எல்லாம் எனக்குத் தெரியும். காயத்திரி மீது கொண்ட காதலால் தான் நான் அவளின் இனிய நினைவுகளோடு அவளைப் பிரிந்து இந்தக் காட்டுப் பிரதேசத்தில் அரண்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறேன். தளபதிகள், வீரர்கள் எல்லோரும் நாட்டின் மீது அளவுக்கதிகமான விசுவாசம் கொண்டவர்கள். அதனால் எந்த எதிரியும் எமது நாட்டுள் வரமாட்டான். எனினும் எனது இயல்பு உங்களுக்குத் தெரியும். எமது நாட்டில்நடைபெறும் எந்தவிடயத்தையும் நான் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும். அது எனது இயல்பான குணம்.’’ என்று கூறிச் சிரித்து விட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் ஏமநாதன்.

காயத்திரி, ஏமநாதனின் வருகைக்காக நிலா முற்றத்தில் காத்திருந்தாள். அவள் ஏமநாதனைக் கண்டதும் மகிழ்ச்சிப் பெருக்கோடு எழுந்து ஓடி வந்தாள். ஏமநாதன் அவளை அணைத்தான். பின்பு ‘‘பட்டத்தரசி மகிழ்வுடன் இருப்பதாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும் முகத்தில் கவலைகள் இருப்பதாகத் தெரிகிறது. ஒருபோதும் எதிரியை நாட்டுள் நுழைய எமது படைவீரர்கள் அனுமதிக்க மாட்டார்கள். நீர் மகிழ்வுடன் இரும்’’ என்றான்.

‘‘உங்களைப் பற்றிய கவலை எனக்கு எப்போதும் வராது. நீங்கள் மாவீரன். நாகபுரியில் நடப்பவைதான் மனதிற்குக் கவலையைத் தருகிறது’’

“நாகபுரியும் எனது நாடு. அங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய நான் வீரர்களை அனுப்பியுள்ளேன்” என்றான் ஏமநாதன்.

**742. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்.**

மணிபோலத் தூய தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலைகளும், குளிர்ந்த நிழல் உடைய காடும் ஒன்று சேர அமைந்ததே அரண் ஆகும்.

## சிறந்த அரண்

“எமது நாட்டின் தளபதியாக இருந்த அருண்பாண்டியனின் நடவடிக்கைகள் எனக்கு முன்பே பிடிப்பதில்லை. அவன் அப்பாவுக்கு ஏற்ற மாதிரி நடந்து அவரின் முழுமையான நம்பிக்கையைப் பெற்றுவிட்டான். அதனால் அவன் என்னுடனும் சற்று வித்தியாசமாகவே நடந்து கொண்டான். எனது ஓவியத்தை வரைந்த ஓவியரை மிரட்டி அதைப் போன்ற இன்னொரு ஓவியத்தையும் வரைந்து அதைக் கொண்டு சென்று மகதநாட்டு இளவரசனான வீரமார்த்தாண்டனுக்குக் கொடுத்து விட்டான். அதனால் வீரமார்த்தாண்டன் என்மீது மோகமுற்று அருண்பாண்டியன் மூலம் எனக்குப் பல கொடுமைகளைச் செய்தான். நான் இது பற்றி அப்பாவுக்குச் சொல்வேன். அவர் அருண்பாண்டினை விசாரிப்பர். அருண்பாண்டியன் அவருக்கு ஏதாவது சமாதானஞ் சொல்லி அவரது மனதை மாற்றி விடுவான். அத்துடன் அப்பாவுக்கு என்னை வீரமார்த்தாண்டனுக்குத் திருமணஞ் செய்து கொடுக்க விருப்பமிருந்தது. இப்பொழுது

அருண்பாண்டியன் நாகபுரிச் சிறையில் இருந்து தப்பிச் சென்று விட்டான். அருண்பாண்டியன் கொடியவன். அவனைவிடக் கொடியவன் வீரமார்த்தாண்டன். இரண்டு கொடியவர்களுஞ் சேர்ந்து என்ன செய்ய போகிறார்களோ…..'' என்று பயந்தவாறு கூறினாள் காயத்திரி.

''அவர்களால் எதுவுஞ் செய்ய முடியாது. எம்மிடம் சிறந்த படைவீரர்கள் இருக்கிறார்கள். பாதுகாப்பான அரண்கள் உள்ளன. போர் நுட்பங்கள் தெரிந்த தளபதிகள் பலர் இருக்கிறார்கள். கோழைகளும் பேடிகளும் தான் நயவஞ்சகமான குறுக்கு வழிகளை நாடுவார்கள். அக்குறுக்கு வழிகளே அவர்களை அழிவுக்குட்படுத்தும். நாகபுரிக்கு எமது வீரர்கள் பலரை நான் அனுப்பியுள்ளேன். அவர்கள் அங்கு மாறுவேடத்தில் சென்று நிலைமையை ஆராய்ந்து வருவார்கள். நக்கீரனின் தலைமையில் ஒற்றர்கள் பலர் மகத நாட்டிற்குச்சென்றுள்ளனர். அவர்கள் மாவீரர்கள். செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் சென்று, மறைந்திருந்து ஆய்வு செய்வர். எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் அவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ள மாட்டார்கள். எனவே பயமில்லாமல், அச்சங் கொள்ளாமல் இன்பமாக இரு கண்ணே!. உமக்கோ அல்லது உமது நாட்டிற்கோ துன்பம் வந்தால் அது எனக்கு வந்த துன்பமென்று நான் நினைத்துச் செயற்படுவேன்.'' என்றான் ஏமநாதன்.

காயத்திரி பூரண மகிழ்வுடன் புன்னகைத்தாள். அந்த மோகம் மிகுந்த புன்னகையில் மயங்கிய ஏமநாதன் அவளின் அருகே

செல்ல, அவள் அவனைக் கட்டியணைத்தாள். அவளால் பேச முடியவில்லை. ஏமநாதனது வார்த்தைகள் கொடுத்த தைரியமும் அவனது அணைப்புக் கொடுத்த பேரின்பமும் அவளைத் திக்குமுக்கடையச் செய்தது.

எமக்கு நாடு வேண்டாம். நகரமும் வேண்டாம். எந்தப் பிரச்சினைகளுமில்லாது ஒரு தனி வீட்டில் இருவரும் இந்த நிலையில் ஒரு கணங்கூடப் பிரியாது இருத்தல் வேண்டும்.'' என்று முனகினாள் காயத்திரி.

ஏமநாதன் சிரித்தான்; ``நாம் சாதாரணமானவர்கள் என்றால் அப்படியிருக்கலாம். நான் இந்நாட்டின் அரசன். நீர் அரசி…'' என்று ஏமநாதன் கூறிக் கொண்டிருக்கையில் வெளியே அவனை அழைக்கும் ஒலி கேட்டது.

காயத்திரியின் இறுக்கமான அணைப்பிலிருந்து விடுபட்டு வெளியே ஏமநாதன் வந்தபோது, வாசலில் மலர்விழி நின்றாள்; ``அரசரை தளபதியார் சந்திக்க வந்திருக்கிறார்'' என்றார்.

``நடுச்சாமம் கழிந்த பின்பு அரண்மனைக்குத் திரும்பிய தங்களைக் குழப்பி விட்டேன். நான் பின்பு சந்திக்கிறேன்'' என்றார் தளபதி.

``பரவாயில்லைச் சொல்லுங்கள்.''

``அரண்கள் பலவற்றைச் செப்பனிட்டுள்ளோம். இருப்பினும் ஒரு

சந்தேகமிருக்கிறது. தாங்கள் அரண்களை நேரிற் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்''

''சரி நான் வருகிறேன்'' என்று புறப்பட்ட ஏமநாதன்; ''மலர்விழி, நான் அரண்களைப் பார்வையிட்டு விட்டு வருகிறேன் என்பதை மகாராணியாருக்குச் சொல்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

இருவரும் சுவர்ணா ஆற்றங்கரைக் வந்தனர். அங்கு புதிதாக அமைக்கப்பட்ட சில அரண்களைப் பார்வையிடுமாறு தளபதி கேட்டுக் கொண்டார்.

''தளபதியாரே புதிய அரண்களில் சிலமாற்றங்கள் செய்தல் வேண்டும். இவற்றின் உயரமும் அகலமும் போதாது. உயரங்கள் குறைந்தனவாக இவை இருக்கின்றன. இன்னும் உயரமாக்குங்கள். அகலமும் போதாது. அரண்கள் உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க முடியாத தன்மை ஆகிய நான்கும் பொருந்தியனவாக இருத்தல் வேண்டும். இவற்றை சீர் செய்து பலப்படுத்துங்கள்'' என்றான் ஏமநாதன்.

**743. உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
**அமைவுஅரண் என்று உரைக்கும் நூல்.**

உயரமும் ,அகலமும் ,வலிமையும் பகைவரால் அழிக்க முடியாத தன்மையும் ஆகிய இந் நான்கும் அமையப் பெற்றதே அரண் என்று நூலோர் கூறுவர்.

**வல்லது**

உற்சாகத்துடன் அரண்களை அமைத்தும், புனரமைப்புச் செய்தும் கொண்டிருந்த வீரர்களை ஏமநாதன் சந்தித்தான். வீரர்கள் உற்சாகமாக இருந்தனர்.

“வீரர்களே, இது எமது தாயகம். இதை எதிரிகள் கைப்பற்ற அனுமதிக்கக்கூடாது. நாம் பிறந்த மண்ணில் கடைசிகாலம் வரை சுதந்திரமாக வாழ்தல் வேண்டும். எதிரி நம்நாட்டைக் கைப்பற்றினால் எமது வளங்களையெல்லாம் தமது நாட்டிற்குக் கொண்டுசென்று விடுவான். இந்த நாட்டு மக்கள் அனாதைகளாகி அடிமைப்பட்டு விடுவர். அதை வீரர்கள் அனுமதிக்க மாட்டார்கள்” என்று ஏமநாதன் கூறும்போது போர்வீரர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு சொன்னார்கள்; “நாங்கள் சுத்த வீரர். எதிரிகள் எமது நாட்டுள் புகுந்தால் கண்ட துண்டமாக வெட்டுவோம்”

அவர்களது மன உறுதியைக் கண்டு வியந்து போனான் ஏமநாதன். இப்படியான வீரர்கள் உள்ள நாட்டை எந்தப் பேரரசனும் கைப்பற்ற முடியாதென நினைத்தவாறு வாசல் பக்கம் வந்தான்.

வாயில் பக்கமாக அரண் அமைத்துக் கொண்டிருந்த வீரர்கள் அரசனை மரியாதையுடன் வரவேற்று விட்டுத் தமது வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அந்த வாயிற் பகுதி வேலைகளைத் தலைமை தாங்கிச் செய்து கொண்டிருந்த சிவசேனன் அரசனின் அருகில் வந்து சொன்னான்; “அரசே, காக்க வேண்டிய வாயில்

சிறியதாகவும், மற்றய இடங்கள் மிகவும் விசாலமானதாகவும் இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் தான் எதிர்த்துவரும் பகைவரின் கொட்டத்தை அடக்கலாம். எனது தந்தையார் குதிரைப் படைத் தளபதியாக இருந்தவர். அவர் சொல்லித் தந்த பாடம் இது. அதன் படிதான் வாயில் பகுதியை அமைத்தேன். திருத்தங்கள் ஏதும் இருப்பின் கூறுங்கள்'' என்றான்.

ஏமநாதன் பலமுறை மிகவும் அவதானமாக அந்த வாயில் அரனைப் பார்த்தான். மிகவும் அவதானத்துடன் அவ்அரண் அமைக்கபட்டிருந்தது.

“பகைவரால் அழிக்கமுடியாத பலம் மிகுந்த இந்த அரணை அமைத்த உன்னைப் பாராட்டுகிறேன். வேலைமுடிந்ததும் என்னை அரண்மனையில் வந்து சந்தி'' என்று கூறிவிட்டு அப்பாற் சென்றான் ஏமநாதன். அந்த அரண் அமைந்த விதம் அவனுக்குப் பிடித்திருந்தது.

சூரியன் நடுவானில் நின்றான். வெயிற் கொடுமையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சுவர்ணா ஆற்றங்கரைக்கு வந்தான். ஆற்றங்கரையில் ஒரு பெரிய ஆலமரம் கிளை பரப்பி நின்றது. ஆயிரக்கணக்கான விழுதுகள் அம்மரத்தின் பாரிய கிளைகளைத் தாங்கிக் கொண்டிருந்தன. அந்த மரநிழலில் வந்தமர்ந்தான் ஏமநாதன். மணிபோன்ற தெளிந்த நீர் சலசலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. இதமான தென்றல் காற்று அவனது உடலை மென்மையாக வருடிக் கொண்டிருந்தது. அருமையான இடம். மணிபோலத் தெளந்த நீர் இனிமையான ஓசையுடன்

சலசலத்தோடும் அழகைப் பார்த்தான். அவ் ஆற்றுள் தானும் காயத்திரியும் ஒருமுறை நீராட வேண்டுமென்ற நினைவு அவனது மனத்துள் துளிர் விட்டது. அவனது மனத்திரையில் காயத்திரி அவ்வாற்று நீரில் குளிக்கும காட்சி விரிந்தது.

மார்பளவு சேலை கட்டியிருந்தாள் காயத்திரி. இடுப்பிற்குச் சற்று மேலே ஆற்று நீர் சலசலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அவள் தலையை நனைப்பதற்காக அடிக்கடி நீருள் இருந்து இருந்து எழும்பினாள். அவள் எழும்பும் போது நனைந்த சேலைக்குள்ளால் அவளது கவர்ச்சி பீறிட்டுப் பாய்ந்தது.

‘‘காயத்திரி’’ மெல்ல அழைத்தான் ஏமநாதன்.

‘‘உங்கள் நாடு மிகவும் அழகானது…’’ அவள் சொல்லும்போது ஏமநாதன் குறுக்கிட்டான்; ‘‘உம்மை விடவா..?’’

சிணுங்கினாள் காயத்திரி. அந்தச் சிணுங்கலில் மோகம் கலந்திருந்தது.

‘‘பசுமையான சோலை போன்ற காடு. அதில் சலசலத்தோடும் தூய்மையான நீர். காட்டுக்குள் வாழும் அழகான பறவைகள்.. இவையெல்லாம் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. நான் கொடுத்து வைத்தவள். அன்பான செல்வந்தனான கணவன். பெரியவளம் மிக்க நாட்டின் அரசன், மனைவியையும் அவளது பெற்றோரையும் அவர்களது நாட்டையும் தன்னைப் போல நேசிக்கும் துணைவன்..’’

“அரசே!” வீரன் ஒருவன் ஏமநாதனின் அருகே நின்றான்.

இனிமையான கனவிலிருந்து மீண்ட ஏமநாதன் தனக்கெதிரில் நின்ற வீரனைப் பார்த்தான். அவனது கையில் பெரியதொரு இளநீர் இருந்தது. அதை வெட்டி ஏமநாதனுக்குக் கொடுத்தான். அந்த இளநீர் மிகவும் சுவையாக இருந்தது.

---

**744. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை**
**ஊக்கம் அழிப்பது அரண்.**

---

பகைவர் உள்ளே நுளையும் வாயில் சிறிதாவும், மற்ற இடங்கள் பெரிதாகவும் இருந்து தன்னை எதிர்த்து வரும் பகைவரின் வலிமையை அழிப்பது அரனாகும்.

**ஏற்புடையது**

போர்வீரன் கொடுத்த இளநீரைச் சுவைத்துக் குடித்துவிட்டு ஆலமர விழுதில் முதுகைச் சாய்த்து வைத்து அமாந்தான் ஏமநாதன். குளிர்மையான தென்றல் அவனைத் தாலாட்டியது. தளபதி நாகராஜன் அரண்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கே நக்கீரன் வந்தான்.

“அரசே,மகதநாட்டிலிருந்து அரண்மனைக்குச் சென்றேன் தாங்கள் சுவர்ணா நதிக்கரையில் அமைக்கப்பட்ட அரண்களைப் பார்வையிட்டுக் கொண்டிருப்பதாக அரண்மனையில் சொன்னார்கள். தங்களுக்குத் திருமணமாகிச் சிலநாட்கள் தான்

முடிவடைந்திருக்கின்றன. பாதுகாப்பு வேலைகளைத் தளபதிகளிடம் ஒப்படைத்து விட்டுத் தாங்கள் பட்டத்தரசியுடன் இன்பமாக இருக்க வேண்டியது தானே. பாவம் பட்டத்தரசியார். அரண்மனையில் தனிமையில் இருந்து வாடுகிறார்.''

ஏமநாதன் சிரித்தான்; ''நாட்டின்பாதுகாப்பிற்கு ஆபத்து நேர்ந்துள்ள இந்த நேரத்தில் பட்டத்தரசியுடன் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்...?''

நக்கீரன் அதைக் கேட்டுச் சிரித்தான்; ''அரசே, நீங்கள் நினைப்பதைப் போல மகத நாடு பலமுள்ள நாடாக இப்போது இல்லை. மகதநாட்டரசர் மகேந்திரவர்மன் இளவரசனான வீரமார்த்தாண்டனைக் கட்டுப்படுத்த முடியாது தவிக்கிறார். வீரமார்த்தாண்டனுக்கு முடிசூடினால் திருந்தி விடுவானென அவர் நம்புகிறர். வீரமார்ததாண்டனின் தீய நடவடிக்கைகளை அறிந்த மக்கள் அவனுக்கு முடிசூடவேண்டாமெனக் கிளர்ச்சி செய்கின்றனர். இந்த நிலையில் பலம்பொருந்திய எமது நாட்டின் மீது படையெடுக்க மகேந்திர வர்மன் துணியமாட்டான். அருண்பாண்டியனை நாகபுரி மன்னர் அளவுக்கதிகமாக நம்பியிருந்தார். ஆனால் அருண்பாண்டியன் தற்செயலாகத் தான் அகப்பட்டால் அரசர் பாதாளச் சிறையில் அடைப்பார் என்று தெரிந்து தனது ஏவளாளர்கள் மூலம் பாதாளச் சிறையின் வடக்குப் புற வாலலிலிருந்து காட்டுக்குச் செல்லும் பகுதியூடாகச் சுரங்கமொன்று அமைத்திருக்கிறான். அந்த வழியால்தான் அவன் தப்பியிருக்கிறானே தவிர நாகபுரியில் அருண்பாண்டியனுக்குஉதவி

செய்பவர்கள் யாரும் இல்லை. நாகபுரியில் அருண்பாண்டியன் இல்லாததால் மக்களும் பிரதானிகளும் மகிழ்வுடன் இருக்கிறார்கள். அதனால் நீங்கள் பெரிதாகக் கவலை கொள்ளத் தேவையில்லை..'' என்றான் நக்கீரன்.

நக்கீரன் சிறந்த ஒற்றன். அத்துடன் விசுவாசமானவன். அதனால் அவன் சொன்ன செய்திகளைக் கேட்டு மனம் மகிழ்ந்தான் ஏமநாதன்; ‘‘ நக்கீரா, செல்வபுரி அரசன் நடனசேகரன் வீரமார்த்தாண்டனுடன் சேர்ந்துள்ளான் என்று கேள்விப்பட்டேன..'' ஏமநாதன் கதைத்துக் கொண்டிருக்கும் போது நக்கீரன் குறுக்கிட்டான்; ‘‘செல்வபுரி அரசன் நீதி தவறாதவன். எமது பட்டத்தரசியை விரும்பியது உண்மைதான். அதனால் அருண்பாண்டி யனும் வீரமார்த்தாண்டனும் செல்வபுரிக்குச்சென்று அவனுக்கு பட்டத்தரசி மீதிருந்த மோகத்தை அதிகரிக்கலாமென நினைத்திருக்கிறார்கள். ஆனால்செல்வபுரி மன்னன் அவர்களைக் கண்டித்து அனுப்பி விட்டான். அதனால் தற்பொழுத போர் உண்டாகக் கூடிய சூழ்நிலை இல்லை. தங்கள் அரண்மனைக்குச் சென்று பட்டத்தரசியுடன் இன்பமாக இருக்கலாம். வாரத்தில் ஓரிருமுறை வந்து அரண்களின் பாதுகாப்பைக் கவனிக்கலாம்'' என்றான்.

அதைக் கேட்டு மகிழ்ந்த ஏமநாதன் தனது கழுத்தில் இருந்த நவரத்தின மாலையொன்றைக் கழற்றி நக்கீரனுக்கு அணிவித்தான். பின்பு வாயிற் பக்கமாக வந்தான்.

வாயிற்புற அரணைப் புணரமைப்புச் செய்து கொண்டிருந்த சிவசேனன் மன்னனை வணங்கினான்; “சிவநேசா, மிகவும் பாதுகாப்பாக உள்ள அரணைப் பகைவர்களால் கைப்பற்ற முடியாது. தேவையானளவு உணவுப் பொருள்களைக் களஞ்சிய சாலைகளில் இருந்து கொண்டு வந்து அரண்களில் பாதுகாப்பாக வையுங்கள். எந்த வேளையிலும் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடாது. அத்துடன் அரணுள் சகல வசதிகளையும் செய்யுங்கள். அரணுள் இருப்போர் தமது வீட்டினுள் சகல வசதிகளோடும் இருப்பதைப் போல இருத்தல் வேண்டும். அரணுள் மாதக்கணக்கிலும் இருக்க வேண்டிய தேவையேற்படும். அதற்கேற்ற வசதிகளையும், உணவுப் பொருட்களையும் கொண்டு சென்று வைப்பது உனது கடமை” என்றான் ஏமநாதன்.

“ஒரு வருடத்திற்குப் போர் வீரர்கள் அரணுள் தங்குவதற்கான வசதிகள் யாவும் செய்தாயிற்று” என்றான் சிவநேசன்.

ஏமநாதன் மகிழ்வுடன் அரண்மனைக்குச் செல்ல நினைத்தான்.

**745.கொளற்கு அரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண்.**

பகைவரால் கைப்பற்றப்பட முடியாததாகவும், கையிருப்பில் பலவகையான உணவுப் பொருட்களைக் கொண்டதாகவும் உள்ளிருப்போர் அச்சமின்றி நிலைத்து வாழ்வதற்கு ஏற்றதாகவும் உள்ளதே அரண்.

## வாய்ப்பானது

மரநிழலில் மேய்ந்து கொண்டிருந்த குதிரை, ஏமநாதனைக் கண்டதும் மகிழச்சிப் பெருக்குடன் ஒருமுறைகனைத்தது. பின் வாலைக் கிழப்பியபடி ஓடிவந்து அவனுக்கருகில் நின்றது. ஏமநாதன் அதன்முதுகை அன்புடன் தடவினான். மகிழ்வடைந்த குதிரை கனைத்துத் தனது மகிழச்சியதைத் தெரிவித்தது.

அப்பொழுது நாகராஜன் குதிரையில் வந்திறங்கி ஏமநாதனை நோக்கி வந்து நமஸ்கரித்தான். அரண்கள் யாவும் பலப்படுத்தி அதற்குத் தேவையான பொருட்களை யெல்லாம் கொண்டு சென்று வைத்து விட்டேன். பகைவரை ஓடோட விரட்டவல்ல வீரர்கள் பலரைத் தெரிந்தெடுத்து அரணுள் கொண்டு சென்று விட்டு விட்டேன். பகைவர்கள் வந்தால் தப்பிச் செல்ல முடியாதபடி யாவும் அமைக்கப்பட்டு விட்டது. தாங்கள் எல்லா அரண்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு பாதுகாப்புப் போதாதிருந்தால் கூறுதல் வேண்டும்.'' என்றான்.

ஏமநாதன் மகிழ்வுடன் புன்னகைத்தான்; "நான் நினைத்ததைவிட பத்துமடங்கு செயற் திறன்களைக் கொண்ட தளபதிகள், சேனாதிபதிகள், துணைத்தளபதிகள் பலர் இருப்பதால் தான் மகத நாடு போர்தொடுக்கக்கூடும் என்ற செய்தி எமது செவிக்கெட்டு முன்பே அவர்களை எதிர்க்க நீங்கள் தயாராகி விட்டீர்கள். இது தாய்நாட்டின் மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தைக் காட்டுகிறது. உள்ளே இருப்பவர்களுக்கு வேண்டிய

பொருள்களெல்லாம் உடையதாகவும், போர் உக்கிரமாக நடைபெறும் போது சலிக்காமல் போரிடக்கூடிய மனவலிமை உடைய போர் வீரர்களைக் கொண்டதாக இருப்பது தான் அரண். அதை நீங்கள் செய்து முடித்து விட்டீர்கள். எல்லோர்க்கும் நன்றி'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் ஏமநாதன்.

வேகமாக வந்த புரவி அரண்மனையில் உள்ள லயத்தினுள் சென்றது. ஏமநாதன் குதிரையை விட்டிறங்கி அரண்மனைக்குச் சென்றான். அரண்மனையில் சுவாமியார் உருவில் மணிமாறன் இருந்தான்.

‘‘அரசேஇ நாம் நினைத்ததைப் போல நிலைமை இல்லை. மகத நாடு எம்மீது போர் தொடுக்கச்சொன்னாலும் தொடுக்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளது. தாங்கள் யாவற்றையும் அறிந்திருப்பீர்கள்''

மகிழ்வுடன் புன்னகைத்தான் ஏமநாதன்; ‘‘உன்னைப் போன்ற விசுவாசமுள்ள நண்பனைப் பெற்ற எனக்கு என்ன குறை? அத்துடன் உனது துணை இருக்கும்வரை மங்களபுரியை யாராலும் கைப்பற்ற முடியாது. விசுவாசமான படை வீரர்கள், பாதுகாப்பான அரண்கள். போதிய உணவுப் பொருள் என யாவும் இருக்கும் போது எப்படி எதிரிகளால் எமது நாட்டைக் கைப்பற்ற முடியும்…?''

‘‘அதனால்தான் நான் முன்பே சொன்னேன், காதல் கொண்ட உங்கள் காதலின் மோகத்தை

தீத்துக் கொள்ளுங்கள். பாவம் பட்டத்தரசி. முன்பு நீங்கள் கிடைக்க வேண்டுமென்று ஏங்கினாள். இப்போது நீங்கள் அருகில் இருந்தும் தன்னைச் சில நிமிடங்களாவது சந்தித்துக் கதைத்து மகிழ்கிறீர்களில்லையே என்று வாடுகிறாள். நீங்கள் அரண்களைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இனியாவது அவற்றையெல்லாம் மறந்து உங்கள் காதலியை மகிழ்வித்து நீங்களும் மகிழ்ந்திருங்கள். ஒருநாள் ஒரு சில நிமிடங்கள் மட்டும் காயத்திரியைக் கண்டு விட்டுத் திருமணஞ் செய்யுமுன் அவளை நினைத்து உருகினாய். அவள் கிடைக்கமாட்டாளென்று ஏங்கித் தவித்தாய். அவள் கிடைத்து பஞ்சணையில் அவள் இருக்கும் போது நீ அரண்களுக்குள் இருக்கிறாய். அரண்களுக்குள்ளே இருக்கும் போர் வீரர்களுக்குப் போதிய உணவு கொடுக்கிறாய். இவற்றையெல்லாம் நான் கவனிக்கிறேன். நீபோ..'' கண் சிமிட்டினான் மணிமாறன்.

ஏதோ சொல்ல வாயுண்ணினான் ஏமநாதன்; ''எனக்கு எதுவுங் சொல்லத் தேவையில்லை. விரைவாக இந்நாட்டிற்கொரு குட்டி இளவரசன் தேவை.'' என்றான் மணிமாறன். வெட்கம் கலர்ந்த புன்முறுவலுடன் அவனை நோக்கினான் ஏமநாதன்.

''நாகபுரியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மிகவும் பலம் பொருந்திய நாடாகவே இருக்கிறது என்று பட்டத்தரசியிடம் சொல். பட்டத்தரசிக்கு அருண்பாண்டியன் சிறையிலிருந்து தப்பியபின் மனதில் நிம்மதியில்லை. பட்டத்தரசியின் மனதைத் தைரியப்படுத்தி விட்டு உனது இன்பவாழ்க்கை ஆரம்பி. வாழ்த்துக்கள்'' என்றான் மணிமாறன்.

என்றுமில்லாத ஆனந்தத்துடன் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான் ஏமநாதன். பள்ளியறையில் காயத்திரி அலங்காரரூபியாக நின்றாள்.

**746. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்ஆள் உடையது அரண்.**

உள்ளே இருப்பவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் உடையதாய் நெருக்கடியாகப் பேர் நடைபெறும் காலத்தில் போரிட வல்ல திடமான வீரர்களை உடையது அரண் ஆகும்.

## தகுதியான அரண்

“இன்று மகாராணியின் அலங்காரத்தைப் பார்த்தும் நான் அசந்து போனேன். அளவுக்கதிகமான மகிழ்வை முகங்காட்டுகிறது. அதனால் அங்கங்கள் யாவும் பொலிந்து பூரித்திருக்கின்றன. திருமண நாளில் கண்டதை விட அற்புதமாக அலங்காரஞ் செய்திருக்கிறீர். இன்று ஏதாவது விஷேடமா..? அல்லது நான் செயற்கரிய செயல்களேதும் செய்து விட்டதற்குப் பரிசாக உம்மைத் தரப்போகிறீரா....? மகராணியின் மௌனம்

என்னைக் கொல்கிறது.'' என்றவாறு காயத்திரியின் தோளில் கையை வைத்தான் ஏமநாதன்.

சிலிர்த்துப் போனாள் காயத்திரி. அமர்க்களமாக அலங்கரித் திருந்த அவளது தோளை சுற்றியிருந்த பட்டு மெல்ல நழுவிக் கீழே விழுந்தது.

காயத்திரி ஏமநாதனின் அருகில் வந்து அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது தோள்கள் உறுதியாக இருந்தன; ‘‘எனது தந்தைக்கு அருண்பாண்டியனாலும் வீரமார்த்தாண்டனாலும் மிகுந்த ஆபத்து வரப்போகிறது என்று எனது மனம் பரிதவித்துக் கொண்டிருக்கின்றமையால் உங்களுடன் முழுமனதுடன் இன்பமாகக் கூடியிருக்க முடியவில்லை. இப்பொழுது எதிரிகள் உங்களுக்குப் பயந்து ஓடி ஒளித்து விட்டனர். மகத நாட்டில் மக்கள் கிளர்ச்சி செய்வதாக அறிந்தேன். நாகபுரி முன்பை விடப் பத்து மடங்கு பலம் பெற்று விட்டதாகக் கேள்விப்பட்டேன். உங்களைக் கணவனாக அடைந்த நான் பாக்கியசாலி'' கண்கலங்க ஏமநாதனை கட்டியணைத்தாள் காயத்திரி.

ஏமநாதன் அவளை வியப்புடன் பார்த்தான்; ‘‘சிறிது நேரத்திற்கு முன்புதான் நக்கீரன் வந்து இவற்றை எனக்குச் சொன்னான். அது இவளுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று நினைத்தவாறு நெஞ்சில் முகம் புதைத்திருந்த காயத்திரியின் முகத்தை மெலலத் தூக்கினான்.

காயத்திரி மெல்ல நகைத்தாள். அவளது அந்தப் புன்னகையில் மயங்கித் தனது எண்ணத்தை மறந்தான் ஏமநாதன்.

“அன்பானவரே, சிறிது நேரத்திற்கு முன்பு எனது அப்பா வந்து யாவற்றையும் விரிவாகச் சொன்னார். அதனால் மகிழ்ந்த நான் உங்களை அசத்த வேண்டுமென்பதற்காப் பூரண அலங்காரஞ் செய்தேன்…”

ஏமநாதன் சிரித்தான். வெகுநேரமாகச் சிரித்தான். அவனின் சிரிப்புக்கான காரணத்தைத் தெரியாது தடுமாறினாள் காயத்திரி.

“என்ன பெருஞ்சிரிப்பு” மெல்லக் கேட்டாள்.

“எனக்காக அலங்காரஞ் செய்ததாக கூறினீர். அதை நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்தது விட்டது”

“இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? இன்று நான் மிகவும் அழகாக இருக்கிறேன் என்றும் அரசர் கண்டால் அசந்து போவார் என்றும் உண்மையைக் கூறப் போனால் பெண்ணான நானே ஆசைப்படுமளவிற்கு அரசியின் அலங்காரம் அசத்துகிறது” என்றாள் மலர்விழி.”

மீண்டும் ஏமநாதன் சிரித்தான். காயத்திரிக்கு அளவுக்கதிகமான கோபம் வந்து அது அழுகையா மாறியது. விம்மினாள்.

ஏமநாதன் துடிதுடித்துப் போனான். ‘‘அன்பானவளே, என்னை மகிழ்விக்க, என் மனதைக் குளிர்விக்கவென நீ பலமணிநேரஞ் செலவிட்டு அலங்காரஞ் செய்தாய். அதற்கு உனக்குப்பல பணிப்பெண்கள் உதவி செய்தனர். ஆனால் எனக்குப் பிடித்தது.’’ அவளின் அருகிற் சென்று காதுள் சொன்னான் ‘‘இயற்கை அழகு விலை மதிக்க முடியாதது. பட்டுக்களும் மரகதங்களும் மாணிக்கங்களும் ஆபரணங்களும் வர்ணப் பூச்சுக்களும் உமது அழகையும் வனப்பையும் குறைக்கின்றன.’’ மீண்டும் சிரித்தான் ஏமநாதன்.

சிலநிமிடங்கள் அவனை உற்றுப் பார்த்த காயத்திரி; ‘‘நீங்கள் மோசனமானவர்’’ என்று கூறித் தலையைக் கவிழ்த்தாள். அவளுடலெங்கும் செம்மை பரவியது. அவளது நிலையை ரசித்த ஏமநாதன் சிலமணி நேரம் அவளுடன் இருந்து விட்டு நாகபுரி அரசனான விஷ்வப்பிரமனைச் சந்திக்கச் சென்றான்.

தனது வீரமான மாப்பிள்ளையைக் கண்டு மகிழ்ந்த விஷ்வப் பிரமன் சொன்னார்; ‘‘திருமணமான நாளில் இருந்து நாட்டின் பாதுகாப்புப்பற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாரே தவிர என்னுடன் கதைப்பதில்லை’’ என்று காயத்திரி துயரப்பட்டாள். உங்கள் அரண்கள் யாவும் மிகமிகப் பாதுகாப்பானவை. எதிரியின் படை முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமலே போர் செய்தாலும், அருண்பாண்டியனைப் போல உள்ளிருப்போரைக் கொண்டு வஞ்சனையால் கைப்பற்ற முயன்றாலும், பகைவரால் வெல்ல

முடியாத பலமுடையது உங்கள் அரண். அதனால் எனது மகளுடன் கூடியிருங்கள்” என்றார் விஷ்வப்பிரமன்.

**747. முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்**
**பற்றற்கு அரியது அரண்.**

முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாமல் போர் செய்தாலும் வஞ்சனை செய்தாலும் பகைவரால் எந்த நிலையிலும் கைப்பற்ற முடியாத தகுதியுடையதாக விளங்குவதே அரண் ஆகும்.

## வாய்ப்பான அரண்

தந்தை சொன்னதைக் கேட்டு வெட்கப்பட்டாள் காயத்திரி. திருமணமான மறுநாளே ஒற்றர்கள் மகதநாட்டு அரசனும் செல்வபுரி அரசனும் சேர்ந்து நாகபுரியை அல்லது மங்களபுரியைத் தாக்கப் போகிறார் என்ற செய்தியைக் கொண்டு வந்த நாளில் இருந்து ஏமநாதன் சற்றுப் பதட்டப்பட்டவனாக இருந்ததால் காயத்திரியுடன் இன்பமாகப் பொழுதைக் கழிக்க முடியவில்லை. ஒருநாள் இந்திர விழாவில் கண்டபின் அவளைக் காணவேண்டுமென்ற மோகத்தால் துடிதுடித்த அவன், திருமணமான பின்பு ஒற்றர்கள் கொண்டு வந்த செய்திகள் மூலம் கலங்கிப் போனான். காயத்திரி விதம் விதமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அவன்முன் வந்த போதும் அவளின் பேரழகை அவனால் ரசித்துச்

சுவைக்க முடியவில்லை. கூலிக்குத் தொழில் செய்பவர்கள் போலக் காயத்திரியுடன் நடந்து கொண்டான். அவனது நிலையில் தான் காயத்திரியும் இருந்தாள். தன்னை அவள் நன்றாக அலங்கரித்திருந்த போதும் அவளது மனம் கலங்கித் தவித்துக் கொண்டே இருந்தது. அத்துடன் ஏமநாதன் அருகில் இருக்கும் வேளைகளில் அவள் தைரியமாக இருப்பாள். அவன் சென்றுவிட்டால் பயங்கரமான எண்ணங்கள் தோன்றி அவளது மனதைக் கலக்கும். இரவிலும் பெரும்பாலான நேரங்கள் அவன் அவளுடன் இருப்பதில்லை. அவளுடன் இருக்கும் நேரங்களிலும் அவன் பலத்த யோசனைகளுடன் இருப்பதால் அவளுடன் கலகலப்பாகக் கதைப்பது குறைவு. அதனால் தந்தையைச் சந்தித்தவுடன் பாசமிகுதியால் அவள் அழுதுவிட்டாள். நிலைமையை உணர்ந்த அவர் அவளுக்குப் புத்திமதிகள் கூறினார். பின்பு நாட்டு நடப்பைப் பற்றிக் கூறினார். ஆனால் அவர் ஏமநாதனுக்கு முன் இப்படிச் சொல்வாரென நினைக்காத அவள் நாணிக் கோணினாள்.

அவளது நிலையைக் கண்டு ரசித்த ஏமநாதன் மெதுவாகச் சொன்னான்; “எனக்கு அலங்காரம் பிடிக்காது” அவ்வார்த்தைகள் அவளை மேலும் நாணத்திற்குள்ளாக்கின.

“மகதநாடு உங்களின் பெயரைக் கேட்டால் நடுநடுங்குகிறது. மகதநாட்டரசர் தான் ஒரு போதும் நாகபுரியுடனோ அல்லது மங்களபுரியுடனோ போர் தொடுக்க மாட்டேன் என்று தூதுவர்கள் மூலம் அறிவித்துள்ளார். தான் இரு நாட்டுடனும் நட்புறவுடன் இருக்க விரும்புவதாகக் கூறியுள்ளார்.

அதனால் போருக்கான ஆயத்தங்களை முப்படைத் தளபதிகளும் வீரர்களும் செய்யட்டும். நீங்கள் ஒருவாரகாலம் காயத்திரியை அழைத்துக் கொண்டு எமது நாட்டுக்கு வந்து இன்பமாகத் தங்கியிருங்கள்'' என்றார் விஷ்வப்பிரமன்.

ஏமநாதன் சற்றுக் கலக்கமடைந்தான். அவனது முகத்தில் படர்ந்திருந்த உணர்வுகளைப் புரிந்து கொண்ட தளபதி நாகராஜன் சொன்னான்; ''அரசே, திருமணமான நீங்கள் சிலநாட்கள் தேன்நிலவுக்குச் செல்ல வேண்டும். அது அரசவழமை. நாட்டின் பாதுகாப்பு நல்ல முறையில் உள்ளது. நீங்கள் இல்லாத வேளையில் எதிரி கள்ளத்தனமாக நாட்டுள் நுழைந்தாலும் அரணுக்கு வெளியே இருந்து முற்றுகையிடும் பகைவர்களை, உள்ளேயிருந்து எமது வீரர்கள் தாக்கி வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் நாம் செய்து முடித்துள்ளோம். எந்த எதிரியும் எமது அரணைத் தாண்டி உள்ளே நுழைய முடியாது. நீங்கள் மகிழ்வுடன் சென்று வரலாம்''

''திருமணமானவர்கள் சிலகாலங்களுக்கு எந்தத் தொல்லைகளும் இல்லாமல் இன்பம் துய்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அரச குடும்பத்தினர் அவர்களைத் தனிமைப்படுத்தி உள்நாட்டில் உள்ள தனிமையான இடத்திற்கோ, அல்லது நட்பு நாட்டுக்கோ அனுப்பி வைப்பார்கள். இது அரசவழமை. நீங்கள் எமது நாட்டுக்கு வாருங்கள். மலைக் கோட்டையில் சகல வசதிகளும் உள்ளன. உலகிலே சிறந்த பூங்கா உள்ளது. அதில் இல்லாத மலர்களே இல்லை. அழகான பறவைகளும் விலங்குகளும் நீர் வீழ்ச்சியும் உண்டு.

எமது நாட்டின் ஏழிலைப்பறைசாற்றுவது அம்மலைக்கோட்டை தான்'' என்றார் விஷ்வப்பிரமன்.

மலைக்கோட்டை என்றதும் காயத்திரியின் மனம் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தது. தனது கணவனுடன் மலைக் கோட்டையில் இருக்கும் ஏரியில் படகில் செல்வதாக நினைத்தாள். அந்த எண்ணம் கொடுத்த மகிழ்வு அவளைக் குழந்தையாக்கியது.

---

**748. முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.**

---

முற்றுகையிட்டுப் போர் செய்வதில் வல்லமை உள்ளவர் முற்றுகையிடும் போது, உள்ளே இருந்து போர் புரியும் வீரர்கள் வெற்றி கொள்வதற்கு வாய்பாக அமைந்திருப்பதே அரண் ஆகும்.

## பெருமையான அரண்

ஆயிரக் கணக்கான மக்கள் அரண்மனை வாசலில் கூடி நின்றனர். அன்று ஏமநாதனும் காயத்திரியும் நாகபுரியில் அமைந்துள்ள மலைக்கோட்டைக்குத் தேன் நிலவைக் கழிக்கச் செல்லவிருந்தனர். அதனால் மன்னனையும் பட்டத்தரசியையும் வழியனுப்ப மக்கள் திரண்டிருந்தனர். அரண்மனையின் பிரதான வீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குதிரை வண்டிகள் நின்றன. குதிரை வண்டிகளுக்கு முன்பும் பின்வும் நூற்றுக்

கணக்கான போர் வீரர்கள் ஆயுதங்களுடன் குதிரைகளில் அமர்ந்திருந்தனர்.

அரண்மனைக்குள் யாககுண்டம் அமைத்துப்புரோகிதர்கள் வேதமோதிக் கொண்டிருந்தனர். ஏமநாதனும் காயத்திரியும் பயபக்தியுடன் மதஅனுட்டானத்தில் ஈடுபட்டிருந்தனர். கிரிகைகளைச் சிவன் கோயிற் குருக்கள் செய்து கொண்டிருந்தார். கிரிகைள் முடிந்ததும் அரசனுக்கும் அரசிக்கும் திருநீறு கொடுத்தார் குருக்கள்.

“மன்னா, உனது சாதகப்படி நீ பல நாடுகளை வென்று பேரரசனாகத் திகழ்வாய். உன்னை எந்தப் பகைவர்களாலும் வெற்றி கொள்ள முடியாது” என்றார் குருக்கள்.

ஏமநாதன், சுவாமியார் உருவிலிருந்த மணிமாறனின் அருகில் வந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான்; “குருவே, தங்கள் ஆசியும் அனுக்கிரகமும் தான் நான் இந்த நாட்டைக் கைப்பற்ற உதவியது. அத்துடன் என் மனங்கவர்ந்த பேரழகியான காயத்திரியையும் திருமணஞ் செய்ய உதவியது. இதை நான் மறக்கமாட்டேன். நான் நாடு திரும்பும்வரை அரண்மனையை விட்டு எங்கும் செல்லாதிருந்து நாட்டின் நலன்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்.” என்றான்.

மணிமாறன் கண்களைத் திறக்காது சம்மதமெனத் தலையசைத்தான்.

அதன்பின் முதலமைச்சரான வெங்கடேசரின் அருகில் வந்து சொன்னான்; “முதலமைச்சரே,

நாட்டில் நடைபெறும் விஷயங்களை உடனுக்குடன் அறியத் தாருங்கள். நாட்டு மக்களுக்கு எந்தக் குறைகளும் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள். நான் இல்லை என்ற உணர்வு மக்களுக்கு ஒருபோதும் வரக்கூடாது'

''தாங்கள் சொற்படி நடப்பேன் மன்னா. தாங்கள் என்ன பலமாதங்களா அங்கு தங்கப் போகிறீர்கள். ஏழுதினங்கள், ஏழு கணங்களை போல மறைந்து விடும். தயவு செய்து நாட்டு நிலைமைகளை அந்த ஏழு நாட்களும் மறந்து பட்டத்தரசியாருடன் நல்ல கணவனைப் போல நடந்து கொள்ளுங்கள்'' என்றார்.

காயத்திரி புன்னகைத்தாள் ''அரசனின் குணம் முதலமைச்சருக்குத் தெரியும்'' என்பதை நினைக்க அவளுக்குச் சிரிப்பு வந்தது.

படைத்தளபதி நாகராஜனின் அருகில் ஏமநாதன் வந்ததும் அவன் சொன்னான்; ''அரண்கள் யாவற்றையும் எந்நேரமுங் கண்காணிப்பேன். எம்மை எதிர்க்கவரும் பகைவர்கள் போர் முனையில் கூண்டோடு அழியும் வண்ணம் அரணுள் இருக்கும் போர் வீரர்கள் போர் செய்வதற்கு ஏற்றதாக அரண்களை அமைத்துள்ளேன். அதைக் கண்காணிப்பது எனது கடமை'' என்றான்.

ஏமநாதனுக்குச் சிரிப்பு வந்தது. தன்னை எப்படிப் புரிந்து வைத்துள்ளான் என்பதை நினைத்து நினைத்துச் சிரித்தான் ஏமநாதன்.

“அரசே, முதலமைச்சர் கூறியதைத்தான் நானும் கூறுகிறேன். பட்டத்தரசியாரின் கணவர் என்ற நினைப்பதைத் தவிர மற்றைய நினைப்புக்களை இங்கேயெ களைந்து விடுங்கள். பட்டத்தரசியார் நாடு திரும்பும் போது இளவரசருடன் வரல் வேண்டும்.” என்றான் நாகராஜன்.

விஷ்வப்பிரமன் பெரிதாகச் சிரித்தார். வெங்கடேசருக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. எனினும் அரசனுக்கு முன் சிரித்தல் கூடாது என்று சிரமப்பட்டு அடக்கினார். காயத்திரியின் முகம் சிவந்து ஔிர்ந்தது.

வெங்கடேசர் அவதிப்படுவதைக் கண்ட விஷ்வப்பிரமன் சிரித்த வாறு சொன்னார்; “முதலமைச்சரே, மகிழ்வைக் கட்டுப்படுத்த வேண்டாம். சிரியுங்கள்; பலமாகச் சிரியுங்கள்; உங்கள் மகிழ்வை வெளிப்படுத்துங்கள்”

வெங்கடேசர் மகிழ்வுடன் சிரித்தார்; “அரசே, தங்கள் பயணம் இன்பமாக இருக்கவும், படைத்தளபதியான நாகராஜனின் வார்த்தைகள் பலிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்” என்றார் குருக்கள்.

சுபவேளையில் ஏமநாதனும் காயத்திரியும் புறப்பட்டனர். மக்கள் அரண்மனை வாசலில் நின்று மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர். முன்னே நூற்றுக்கணக்கான குதிரை வீரர்கள் செல்ல, ஏமநாதனும் காயத்திரியும் ஏறிய குதிரை வண்டி மெல்ல நகர்ந்தது.

**749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து**
**வீறுஎய்தி மாண்டது அரண்.**

போர் முனையில் பகைவர்கள் அழியும் படியாக உள்ளே இருக்கும் வீரர்கள் போர் செய்வதற்கு ஏற்றதாக அமைந்திருக்கும் பெருமை உடையதே அரண் ஆகும்.

## செயல்திறமை

நாகபுரியின் மலைக்கோட்டைக்குள் ஏமநாதனும் காயத்திரியும் வந்திறங்கினர். மலைக்கோட்டை என்றதும் ஏமநாதன் மலையில் அமைந்த பாதுகாப்பான அரணாக அமைந்த கோட்டை என்றே நினைத்தான். ஆனால் அதற்குப் பெயர்தான் மலைக் கோட்டையே தவிர அது சமவெளிப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. வானளாவ உயர்ந்த மரங்கள் கோட்டையைச் சுற்றி நின்றன. நூறடி உயரத்திற்கு கட்டப்பட்ட உறுதியான சுவர் மலைக் கோட்டையைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. செயற்கையாகச் செய்யப்பட்ட மிகவும் பெரிய ஏரி. அதன் அழகு ஏமநாதனின் மனதைக் கொள்ளை கொண்டது. மலைக்கோட்டைக்குள் நுழைந்ததும் அதன் அமைப்பில் மயங்கி, ஏமநாதன் தனது நாட்டை மறந்து விட்டான்.

அன்று காலையில் மலைக்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த நந்தவனத்தை ஏமநாதனும் காயத்திரியும் பார்வையிட்டனர். ஆயிரக்காணக்கான பூஞ்செடிகள் அங்கு நடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் மலர்ந்து நெஞ்சை அள்ளின.

“இந்த சிவப்பு நிற ரோஜாப் பாரும். மிகமிக அழகாக உமது தேனூறும் இதழ்களைப் போலச் சிவந்துள்ளது. இந்த ரோஜாவை விட அழகும் வனப்பும் மோகமும் மிக்கது உமது இதழ்கள். மங்களபுரியில் என்னால் ஓய்வாக இருந்து உமது அழகை ரசிக்க முடியவில்லை. இங்கு வந்த பின்புதான் உமது அழகின் தன்மை புரிகிறது. இயற்கையாக மலர்ந்த மலர்களை விட நாகபுரி மன்னர் உருவாக்கிய மலர் பேரழகுமிக்கது; அழகானது; மோகத்தைத் தருவது; முள்ளில்லாதது; வாசனை மிகுந்தது” என்றான் ஏமநாதன்.

காயத்திரி பதில் சொல்லாது சிணுங்கினாள்; “அன்பே, உமது மோகம் நிறைந்த சிணுங்கல் என்னைக் கொல்கிறது. ஆயிரம் வார்த்தைகளை விட உமது சிணுங்கல் ஒலி என்னை மோகத்துக்குள்ளாக்குகிறது.” என்று அவளது நெஞ்சில் சாய்ந்தான் ஏமநாதன்.

“பலம்மிக்க நாட்டின் பேரரசன் பேதைகளைப் போல புலம்புவதா…?” மெல்லச் சொன்னாள் காயத்திரி.

“அன்பே, மனம் விரும்பிய அழகிய பெண்ணின் முன் மேதைகளும், பேதைகளும், வீரர்களும் கோளைகளாவர்” என்று அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். உமது அழகு மங்களபுரியில் பிரகாசிக்கவில்லை. இங்கு பிரகாசிக்கிறது. அதனால் தான் பேதையானேன்.”

“மங்களபுரிக்கு செல்ல வேண்டுமா....? இன்னும் ஒருமாதகாலம் இங்கு தங்கி யிருக்க நான் விரும்புகிறேன். நாம் மலைக் கோட்டைக்கு வந்து இரண்டு தினங்கள் கழிந்து விட்டன. இரண்டு கணங்கள் போலத்தான் இருக்கிறது. உங்களை ஒரு கணங்கூடப் பிரிவதை நான் விரும்பவில்லை” காதுள் கிசுகிசுத்தாள் காயத்திரி.

“அதற்கென்ன. இன்னும் ஒருவாரம் கூடுதலாகத் தங்குவோம். உம்முடன் இருக்க எனக்கு விருப்பமில்லையா என்ன....? இப்பொழுது தான் வாழ்வின் இன்பம், காதலியின் மோகம் எனக்குப் புரிகிறது. மங்களபுரி அரசை யாருக்காவது கொடுத்து விட்டு உம்முடன் இருக்வே எனக்கு விருப்பமாக உள்ளது. அந்தளவில் உமது எழில் என்னைக் கவர்ந்து விட்டது....”

“எனது எழில் கவர்ந்ததா? இல்லை மலைக்கோட்டையின் அழகு கவர்ந்ததா? இம்மலைக்கோட்டை பாதுகாப்பான பல அரண்களை உடையது. இதன் அழகைப் போலப் பாதுகாப்பும் வலிமையானது. எதிரிகளால் எளிதில் கைப்பற்ற முடியாதது” என்றாள் காயத்திரி.

“அரண் வலிமையுடையதாகவும், பெருமை உடையதாகவும் இருக்கலாம். ஆனால் அரணுள் இருக்கும் வீரர்கள் செயல் திறமைமிக்கவர்களாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அரணால் பயனில்லை. பாதுகாப்பான மலைக்கோட்டையைப் பிரித்துத் தானே நாகபுரியின் இளவரசியைக் கைப்பற்றினேன்” சிரித்தான் ஏமநாதன்.

“எமது நாட்டில் சிறந்த போர் வீரர்கள் இல்லையா…?” கோபித்தாள் காயத்திரி.

“சிறந்த பல வீரர்கள் இருக்கிறார்கள் மகாராணி. ஆனால் பலநாட்டரசர்களை வென்றுதானே எனது காதல் மகாராணியைக் கைப்பற்றினேன். இப்பொழுது நான் அவளின் அடிமை…”

சிணுங்கினாள் காயத்திரி. நந்தவனத்தில் நின்ற மாமரத்தின் கிளையில் இருந்த பஞ்சவர்ணக் கிளிகள் இரண்டு கொஞ்சி விளையாடின. ஏமநாதன் அவற்றின் நெருக்கமான காதல் உறவை காயத்திரிக்குக் காட்டினான். காயத்திரியால் அதைப் பார்க்க முடியவில்லை. அவனின் நெஞ்சில் சாய்ந்து அண்ணாந்து அவனைப் பார்த்தாள். அவளது முகம் நவரசபாவனை காட்டியது.

சில நிமிடங்களின் பின் காயத்திரி மாமரக்கிளையைப் பார்த்தாள். அங்கிருந்து காதல் லீலைகள் புரிந்த அந்தப் பஞ்சவர்ணக் கிளிகளைக் காணவிலலை. அவை மறைவான இன்னொரு கிளையில் அமர்ந்திருந்தன.

அதைப் பார்த்து ஏமநாதன் சிரித்தான். “ஏன் சிரிக்கிறீர்கள்…” காயத்திரி கேட்டாள்.

“எமது நிலையை நேரில் பார்க்க வெக்கப்பட்ட அக்கிளிகள் மறைந்திருந்து பார்த்து இரசிக்கின்றன” என்றான் ஏமநாதன். அதைக் கேட்டு நாணிக் கோணினாள் காயத்திரி.

**750. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண்.**

எத்தகைய பெருமைகளை உடையதாக அரண் இருந்தாலும் செயல்திறன் மிக்க வீரர்கள் இல்லாத விடத்து அரணால் எந்தவிதமான பயனும் இல்லை.

## சிறந்த பொருள்

தனபாலவனின் சகோதரன் ஜெயபாலன் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்திருந்தான். இருபது வருடங்களுக்கு முன்பு அவன் பெருங் குடிகாரன்; திருடன்; பொம்பிளைப் பொறுக்கி என்று ஊரவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவன். நாவலா் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் கோயிலைப் பிரித்து கணபதியின் கவசத்தை அவன்தான் திருடியவனென்று ஊரவர்கள் அனைவருக்கும் தெரியும்.

இருபது வருடங்களுக்குப் பிறகு வெளிநாட்டில் உழைத்துப் பெரும் கோடீஸ்வரனாக ஊருக்குத் திரும்பியிருந்தான;. "இனி ஊரோடு இருக்கப் போகிறேன். நான் உழைத்தது ஐந்து சந்தத்திக்கும் போதும்" என்று அவன் ஊரவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் வெளிநாட்டில் போதைப் பொருட்களைக் கடத்தித்தான் அவ்வளவு பணத்தையும் சம்பாதித்ததாகவும், அவனை நெளிநாட்டில் காவல்துறையினா் கைது செய்வதற்காகத் தேடிக் கொண்டிருப்பதால் தலைமறைவாகி ஊருக்கு

வந்துள்ளான் என்றும் அதனால், அவன் திரும்பிச் செல்லமுடியாததால் அப்படிச் சொல்கிறானென ஊரில் சிலர் கதைத்துக் கொண்டனர்.

அன்று அவன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். அவன் வரும்போது மகா கணபதிக்குப் பல்லாயிரம் ரூபா பெறுமதியான ஒரு தங்கச் சங்கிலியை அர்ச்சனைத் தட்டுள் வைத்திருந்தான். அத்துடன் அர்ச்சனைத் தட்டில் ஒரு கட்டு ஆயிரம் ரூபாத் தாள்களையும் வைத்திருந்தான்; "குருக்கள், மகா கணபதியின் அருளால் இப்போ நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். உங்கள் வீட்டில் தான் நான் முன்பு சாப்பிட்டு வளர்ந்தனான். பின்நேரம் உங்களின் வீட்டுக்கு மனைவியுடன் வருகிறேன்." என்றான் ஜெயபாலன்

அவனில் செல்வத்தின் செழுமை படர்ந்திருந்தது. அவனது மனைவி சிவசக்தி கழுத்து நிறைய நகை போட்டிருந்தாள். கைகள் இரண்டும் தங்க முலாம் பூசப்பட்டதைப் போலப் பளபளத்தன.

கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபர் கனகலிங்கம், ஜெயநாதன் கோயிலில் நிற்பதை அறிந்து பூசைக்கு வருவது போல அங்கு வந்தார்.

"இப்ப, எங்களது பாடசாலைக்கு நீங்கள்தானாம் அதிபர். ஊரவை அதிபராக இருந்தால்தான் பாடசாலை முன்னேறும். பாடசாலைக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று எழுதித்தாருங்கோ. நான் ஊருக்கு நிறையச் செய்ய

வேண்டும். பண்டிதர் ஐயாவுடைய மகள் துளசியினுடைய கணவன் செத்துப் போனானாம். பாவம் நேற்று அவர்களின் வீட்டை போனனான். துளசியின்ரை கையிலே ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தனான்." என்றான் ஜெகநாதன்.

"நான் கேள்விப்பட்டனான் தம்பி. பணம் எல்லோரிடமும் வரும் போகும். அதைக் கொடுத்துதவும் தன்மை பரம்பரை பரம்பரையாக இரத்தத்திலை ஊற வேணும். உம்முடைய குடும்பத்திலை யாரோ இரக்கமுள்ள மனதுள்ளவர்கள் இருந்திருக்கிறார்கள்" என்றார் கனகலிங்கம்.

"என்னுடைய தகப்பனார் தான் சாப்பிடாவிட்டாலும் மற்றவர்களுக்குக் கொடுப்பார்..." ஜெகநாதன் கூறிக் கொண்டிருக்கும் போது கனகலிங்கம் குறுக்கிட்டுச் சொன்னார்; "அதுதானே பார்த்தன். தகப்பனின் குணம் தப்பாமல் உமக்கு வந்திருக்கு"

அதைக் கேட்க தணிகாசலத்திற்கு விசர்வரும் போல இருந்தது; "செல்லையற்ரை வீட்டைக் கொள்ளையடித்துத்தான் இவன் வெளிநாட்டுக்குப் போனவன். செல்லையர் தனது மகளுக்குத் திருமணஞ் செய்வதற்காகத் தோட்டக் காணியை ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு வித்து வைத்திருந்தவர். அதை அறிந்த ஜெகநாதன் இரவு சென்று மயக்க மருந்து தூவிக் களவெடுத்துக் கொண்டு கொழும்புக்குப் போனவன். அதன்பின் இப்போதுதான் வந்திருக்கிறான். பின் செல்லையற்ரை மகளுக்குத் திருமணம் நடைபெற

வில்லை. இப்பவும் குமராக இருக்கிறாள்” என்று நினைத்தார் தணிகாசலம்.

அப்பொழுது அங்கே வேலாயுதபிள்ளை வந்தார். அவரை கண்ட ஜெயகநாதன்; “எப்படி…? சுகமாக இருக்கிறியளே…? இப்படிவும் வாசிகசாலைத் தலைவர் நீங்கள் தானே...?’’ என்று கேட்டான்

“ஓ மோம்..” என்று சிரித்தார் வேலாயுதபிள்ளை.

“உங்களைத் தவிர வேறு யாராலும் வாசிகசாலையை நடத்த முடியாது…. வாசிகசாலைக்கு நான் இரண்டு இலட்ச ரூபா தாறன். புத்தகங்கள் வாங்குங்கோ. வேறேன்ன வேண்டும்..?”

வேலாயுதபிள்ளை எதுவும் பேசாது சத்தமாகச் சிரித்தார்; “என்னிடம் நிறையப் பணமிருக்கு. பிள்ளைகள் ஐந்து பேரும் கோடி கோடியாய்ச் சம்பாதிக்கிறார்கள். வெளிநாட்டிலை சீவிச்சு அலுத்துச் போச்சு. அதனாலைதான் ஊருக்கு வந்திட்டம். ஊருக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கோ” என்றான் ஜெகநாதன்.

கோயிலுக்கு வந்தவர்களெல்லோருக்கும் அன்று மகா கணபதியை வணங்காது ஜெகநாதனுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

பூசை முடிவடைந்ததும் ஜெகநாதன் வீட்டுக்குப் புறப்பட்டான். அவனுடன் கோயிலுக்கு வந்த பலர் சென்றனர்.

வேலாயுதபிள்ளை பெரிதாகச் சிரித்தார்; "ஒரு பொருளாய் மதிக்கத் தகாதவனையும் மதிப்புமிக்கவனாகச் செய்வது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஊர் முழுவதும் களவெடுத்தவனிட்டை இப்ப செல்வம் குவித்திட்டுது. முன்பு பேசியவர்கள் எல்லோரும் இப்ப மதிக்கினை." என்றார்.

"பணம் பலவும் செய்யும். அது பாதாளம் வரையும் செல்லும்" என்று அறிஞர்கள் அறியாமலா கூறினார்கள். இதை விடப் பல புதினங்கள் இனி நடக்கும். பொறுத்திருந்து பார்" என்றார் தணிகாசலம்.

**751. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள் அல்லது இல்லை பொருள்.**

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவனையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் தன்மை வாய்ந்தது செல்வத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

## இகழ்வும் புகழ்வும்

பண்டிதர் கந்தையா திடீரெனச் சுகவீனமுற்றுத் தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார். அவர் மீது பக்தியும் பாசமுங்

கொண்ட ஆரூரன் அவரை அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்காது தனியார் வைத்தியசாலையில் அனுமதித்தான். அதைப் பண்டிதர் விரும்பவில்லை. அதனால் சொன்னார்; "மகனே, நான் உழைக்கும் போது பணத்தைச் சேமிக்கவில்லை. பாடசாலையொன்றில் கற்பித்தேன். பாடசாலைக்காகக் காலை எட்டுமணியில் இருந்து இரவு வரை உழைத்தேன். அந்த நேரம் தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்திருக்கலாம். இல்லாவிட்டால் வேறேதாவது தொழில் செய்திருக்கலாம். ஆனால் அதற்கு எனது மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. பாடசாலைக் கற்பித்தலை விட்டு விட்டு வேறு தொழில்களைப் பார்த்தவர்கள் தான் இன்று பணக்காரர்களாக இருக்கிறார்கள். மக்களில் பலர் என்னை வாழத் தெரியாதவன் என்றுதான் நினைக்கிறார்கள். என்னிடம் பணமில்லை. அதனால் நீ தான் பணங் கொடுக்க வேண்டும். அது எனக்கு விருப்பமில்லை. ஏழை மக்கள் எல்லோரும் அரசினர் வைத்திய சாலையில் தானே சிகிச்சை பெறுகிறார்கள்" என்றார்.

"ஐயா, நீங்கள் என்னைக் கற்பித்து மனிதனாக்கினீர்கள். தங்களிடம் நான் கற்றதால் தான் நான் மனிதனாக இருக்கிறேன்; மதிக்கப்படுகிறேன். அதற்காக நான் உங்களுக்கு எவ்வளவு பணத்தையும் செலவு செய்யத் தயாராக இருக்கிறேன்." என்றான் ஆரூரன்.

"ஆரூரா, எவ்வளவுதான் கற்றாலும், பொருள் இல்லாதவரை எவரும் மதிக்க மாட்டார்கள். எல்லோரும் இகழ்வார்கள். பொருள் உள்ளவர்களை

அவர்கள் வேறு நன்மைகள் உடையவராக இருக்காவிட்டாலும் எல்லோரும் மதிப்பார்கள்; புகழ்வார்கள். என்னை, என்னைப் போல மத்திய தரவர்க்க மக்கள் தானே மதிக்கிறார்கள். பணக்காரர்கள், உயர்ந்தவர்கள் எவரும் மதிப்பதில்லை. இலக்கியப் பேரவைத் தலைவர், கோயில் தலைவர் என்றிருப்போரெல்லாரும் வசதியானவர்கள். சென்ற வருடம் கோயில் தலைவராக விக்னேஸ்வர மூர்த்தியைத் தெரிவு செய்யும் போது சிவசுந்தரமூர்த்தி என்னசொன்னார்? "உவர் அரசாங்கத்தை நம்பி வாழ்பவர். தன்னுடைய பணத்தில் செலவு செய்யமாட்டார். முற்பணமாகவும் செலவு செய்ய மாட்டார். காசில்லாவிட்டால் வேலையை நிறுத்தி வைப்பார். பணக்காரனொருவனைத் தெரிந்தால் எவ்வளவு நல்லது. பணக்காரர்கள் தான் கோயில் திருப்பணி வேலைகளுக்கு உதவுகிறார்கள். மற்றவர்கள் பெயரெடுக்கிறார்கள்" என்றவன். அதோடை பொது விஷயங்களுக்கென்றாலென்ன தனிப்பட்ட விஷயங்களுக் கென்றாலென்ன சனம் பணக்காரரைத்தானே முன்னுக்கு வைக்குது. இப்ப கோயில் குருக்கள் அடிக்கடி ஜெயபாலன்ரை வீட்டை போட்டு வாறார். கனகலிங்கம் பாடசாலைப் பரிசளிப்பு விழாவுக்கு ஜெயபாலனைப் பிரதம விருந்தினராக அழைத்திருக்கிறார். முந்தி ஜெயபாலன் கோயிலில் எத்தனை தரம் களவெடுத்தவன். பாடசாலையை உடைத்து வானொலிப் பெட்டியையும் நீர்இறைக்கும் இயந்திரத்தையும் களவெடுத்தவன். பிறகு வெளிநாட்டுக்குச் சென்று போதைப் பொருட்களைக் கடத்திப் பணக்காரனானவன். அவனை

மதிப்புள்ளவனாகவும், பெரியவனாகவும் சனம் நினைக்குது.'' பெருமூச்சுவிட்டார் பண்டிதர்.

அதற்கு ஆரூரனால் விடை கூற முடியவில்லை. அவரைச் சமாளிப்பதற்காகச் சொன்னான்; "அறிவில்லாத சனங்கள் அப்படித்தான் நடக்கும். நீங்கள் நிம்மதியாக ஓய்வெடுங்கள்."

"எப்படித்தம்பி நிம்மதியாக இருப்பது. ஏழ்மையைவிட சனத்தின்ரை பேச்சுக்கள் அதிகமான துயரத்தைத் தருகின்றன. மணியம் சொன்னானாம்; "உழைக்கேக்கை பண்டிதர் ஆடம்பரமாக வாழ்ந்திட்டு இப்ப ஆரூரனை மடக்கிச் செலவு செய்விக்கிறார். ஜெயபாலன் வந்து அள்ளிக் கொடுத்திருக்கிறான்" விம்மினார் பண்டிதர்.

"உங்களுக்கு யார் சொன்னது?"

"காலமையில் துளசி வந்து சொன்னவள். ஜெயபாலன் தந்த காசை அவன்ரை மூஞ்சியிலை தூக்கி எறியுங்கோ" என்றவள். வீடு தேடிக் கொண்டு வந்து தந்தவன். எப்படி மறுக்கிறது. இருபது வரிசத்துக்கு முன்னம் எனது மனைவி மகா கணபதி ஆலயத் திருவிழா முடிந்து இரவு பத்து மணி போல வரும்போது மனைவியின்ரை தாலிக்கொடியை ஆரோ அறித்தவை. அது ஜெயபாலரன் என்று சனம் கதைத்தது. அதை நான் நம்பேல்லை." பண்டிதர் கதைத்துக் கொண்டிருக்கும் போது ஆரூரன் சொன்னான்; "அவன் முன்பு திருடியதை இப்ப திருப்பிக் கொடுக்கிறான்"

பண்டிதர் எதுவும் பேசவில்லை.

**752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு.**

பொருள் இல்லாமல் வேறு பல நன்மைகள் உள்ளவனாக இருந்தாலும் அவன் மதிக்கப்படுவது இல்லை; வேறு நன்மைகள் எதுவும் இல்லா விட்டாலும் பொருள் உள்ளவனை எல்லோரும் மதிப்பர்.

## அணையா விளக்கு

யோகநாதன் நாவலடியில் மிகவும் பிரபலமான தவில் வித்துவான். அவனது குழுவினர் கோயில்கள் அல்லது விழாக்களுக்குச் சென்று கச்சேரியை வைப்பதனால் பத்தாயிரம் ரூபா கொடுத்தல் வேண்டும்.

அன்று ஜெயபாலன் பதினையாயிரம் ரூபா கொடுத்து யோகநாதன் குழுவினரை வரவழைத்திருந்தான். அன்று மிகப்பெரிய மூஷிக வாசனமொன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குத் தனபாலனின் வேண்டுதலின் பேரில் ஜெயபாலன் செய்து கொடுத்திருந்தான். தனபாலனும் ஜெயபாலனும் மூஷிக வாகனத்துடன் மேள தாளங்கள் ஒலிக்க ஊர்வலமாக வந்து கொண்டிருந்தனர். சிவசுந்தரமூர்த்தியின் வீட்டு வாசலில் நிறைகுடம் வைத்துச் சிவசுந்தரமூர்த்தி அவர்களை வரவேற்றார். தனபாலனுக்கும்

ஜெயபாலனுக்கும் அவர் மலர்மாலை சூட்டிக் கௌரவித்தார்.

வேலாயுதபிள்ளையையும் தனபாலசிங்கமும் தணிகாசலமும் அவ் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. விக்னேஸ்வரமூர்த்தி வேலைக்குச் சென்று விட்டார்.

கோயில் வாசலுக்கு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்ட மூசிக வாகனத்திற்கு மலார்மாலை சூட்டி, பஞ்சலார்த்தி காட்டிக் குருக்கள் அமர்க்களமாகப் பூசை செய்தார்.

அன்று அன்னதானமடத்தில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் கொடுப்பதற்கு உணவு தயாரிக்கப்பட்டது. ஊர்ப்பிரமுகர்கள் பலரும் அன்னதான மடத்தில் குழுமியிருந்து உணவைப் பெற்று உண்டனர்.

அன்னதானம் முடிந்த பின்பு தணிகாசலம் கோயிலுக்கு வந்தார். மூஷிக வாகனம் கோயில் வெளி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அப்பகுதிக் கோயில்களில் இல்லாத பெரிய வாகனம் அது. அத்துடன் மிகவும் அலங்கார வேலைகள் செய்யப்பட்டிருந்தன. அதன் பொலிவு தணிகாசலத்தின் மனதைப் பெரிதும் கவர்ந்தது.

“என்ன தணிகாசலமண்ணை உங்களை ஊர்வலத்திலே காணேல்லை” என்று கேட்டான் ஜெயபாலன்.

“அவசரமாகப் பட்டணத்திற்குப் போக வேண்டியிருந்தது” சிரித்தார் தணிகாசலம்.

“எப்படி அண்ணை வாகனம்?”

“மிகவும் நல்லாயிருக்கு. பணத்தின் செந்தளிப்பு அளவுக்கதிகமாகத் தெரியுது”

பலமாகச் சிரித்தான் ஜெயபாலன்.

“திருவிழாவின் போது பத்துப் பவுண் தங்கச் சங்கிலியொன்று மூஷிகத்திற்குப் போட்டுத் தான் மகாகணபதியை ஏற்றுவது.”

தணிகாசலம் பதில் எதுவும் சொல்லாமல் சிரித்தார். ஜெயபாலன் கோயிலினுள்ளே சென்றான். அப்பொழுது வேலாயுதபிள்ளை அங்கு வந்தார். அவருக்குப் பின்னால் தனபாலன் வந்தான்.

“முன்பொருமுறை நான் ஒரு மூசிக வாகனம் செய்து தரப் போறன் என்று சொல்லச் சட்டங் கதைத்தனீங்கள். மடத்திலை நான் அன்னதானஞ் செய்யும் போது அரைவாசிப்பேர் சாப்பிடவில்லை. இன்றைக்கு லட்சரூபா செலவிலை மூஷிகவாகனமொன்ற செய்து தந்திருக்கிறன். மடத்தில ஆயிரம் பேருக்கு அன்னதானஞ் கொடுத்தனான். காலம் மாறிவிட்டது” என்று கூறிவிட்டுக் கோயிலினுள்ளே சென்றான் தனபாலன். அவனது கழுததில் ஒரு பெரிய மலர்மாலை இருந்தது. அம்மாலை அவனது முளங்காலளவு நீளமாக இருந்தத. அவனைக் கண்ட குருக்கள்;

"வா, தனபாலு" என்று மகிழ்வுடன் அழைத்து அவனுக்கு திருநீறு கொடுத்தார். அவன் திருநீற்றுமடலுள் ஆயிரம் ரூபாத் தாள் ஒன்றை வைத்தான். குருக்களின் முகம் பல்லாகத் தெரிந்தது.

"பொருள் என்று சொல்லப்படுகின்ற அணையாத விளக்கு, நினைத்த இடங்களுக் கெல்லாம் சென்று எண்ணியபடி செயலாற்றிக் குறைகள் யாவற்றையும் தீர்க்கும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள் அது நடைபெறுகிறது. நேற்று சிவகுருவினுடைய பேரப்பிள்ளைக்கு காய்ச்சலுடன் வலிவந்து விட்டது. அவர்கள் வைத்தியஞ் செய்ய விமானத்திலே கொழும்புக்குப் பிள்ளையைக் கொண்டு சென்று விட்டனர். பண்டிதருக்குச் சிறுநீரகக் கோளாறாம். கொழும்புக்குத்தானம் போகவேணும். அவரிடம் பொருள் இலலை. நடக்கிறது நடக்கட்டும் என்று சொல்லிக் கொண்டு அரசாங்க வைத்தியசாலையில் இருக்கிறார்" என்றார் தணிகாசலம்.

"முன்பு தனபாலனிடம் நாம் மூஷிகவாகனம் வாங்கவில்லை. அப்ப அவன் ஏழை. இப்போ சகோதரன் பெருங் கோடீஸ்வரன். அவனுக்கு எதிராகக் கதைக்கச் சனம் விரும்புவதில்லை. எல்லாம் பணம் செய்யிற வேலை. நாங்கள் இனி ஒதுங்கியிருக்க வேண்டியதுதான்" என்றார் வேலாயுதபிள்ளை. தணிகாசலம் எதுவும் பேசவில்லை.

---

**753.பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.**

---

பொருள் என்று சொல்லப்படுகின்ற நல்ல விளக்கு, நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய படி குறைகளைத் தீர்க்கும்.

## இன்பங் கொடுக்கும்

வெளிநாட்டிலிருந்து தனபாலசிங்கத்தின் சகோதரியின் மகன் கேசவன் ஊருக்கு வந்திருந்தான். அவனை அழைத்துத் தணிகாசலம் சொன்னார்; "கேசவா, பண்டிதர் கந்தையா மிகவும் ஆபத்தான நிலையில் எமது அரசாங்க வைத்தியசாலையில் சிறுநீரகக் கோளாறு காரணமாகத் தங்கிச் சிகிட்சை பெற்று வருகிறார். அரசினர் வைத்தியசாலையைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அத்துடன் வைத்தியர் அவருக்குச் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிட்சை செய்ய வேண்டுமென்று கூறுகிறார். சிறுநீரகத்திற்கு ஐந்தாறு இலட்ச ரூபா தேவை. வைத்தியத்திற்கும் அவ்வளவு பணம் தேவை. ஜெகநாதன் வைத்தியசாலைக்குச் சென்று தான் பத்து இலட்சரூபா தருவதாகப் பண்டிதருக்குக் கூறியுள்ளான். ஆனால் பண்டிதர் அதை விரும்பவில்லை. தனக்கு வயது சென்று விட்டது. வாழ்க்கையை நன்கு அனுபவித்து விட்டேன். வயதும் எழுபதிற்கு மேலாகி விட்டது. இனி நான் தூர இடங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. அத்துடன் சத்திரசிகிச்சை செய்யவும் விரும்பவில்லை. மகா கணபதி என்னுடைய நோயைக் குணப்படுத்துவார்" என்று சொன்னாராம். பண்டிதர் பெரும் அறிஞர். அவர் வாழ வேண்டும். நீ அவரிடம் கற்றனீ. அத்துடன் முன்பு நீங்கள் ஏழைகள். அதனால் நீ அங்குதான்

உண்டு வளர்ந்தாய். அவர் என்னைக் காணும் போதெல்லாம் உன்னைப் பற்றி விசாரிக்கத் தவறமாட்டார்; “போனவாரமும் உன்னை அவர் தன்னுடைய மகன்’ என்று சொன்னவர். “தனபாலசிங்கம் கதைத்துக் கொண்டிருக்கும் போது கேசவன் குறுக்கிட்டுச் சொன்னான்; “அவர் எனது தகப்பனை விட மேலானவர். பலநாள் நான் வகுப்பில் பசியால் மயங்கிய போது தான் கொண்டு வரும் உணவை எனக்குத் தந்து விட்டுத் தான் பட்டினி இருந்தவர். இப்ப அவருக்கு என்ன செய்ய வேண்டும்?”

“நல்ல முறையில் அறவழியில் தேடிய செல்வம், அறத்தை வளர்க்கும். அத்துடன் இன்பத்தையும் தரும். அறவழியில் சேர்த்த பணம் பத்துச் சதம் தந்தாலும் நான் வாங்குவேனே தவிர தீயவழியில் தேடிய பணம் பத்து இலட்சம் தந்தாலும் நான் வாங்க மாட்டேன். தீய வழியில் தேடிவர்கள் அப்பணத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துப் பாவத்தைக் குறைக்க நினைக்கிறார்கள். அதற்கு நாம் காரணகர்த்தாக்களாக இருக்கக் கூடாது” என்றவர். அத்துடன் ஆரூரன் அவரது மருத்துவச் செலவை ஏற்க முன்வந்தவன். அதற்கும் அவர் மறுத்து விட்டார். ஆரூரனிடம் இருக்கும் பணம் அவனது முன்னோர் தேடியது. ஆரூரனது தகப்பனும் பேரனும் அறாவட்டிக்குக் கொடுத்துத்தான் பணத்தைச் சம்பாதித்தவர்கள். அதனால்தான் அவர் அப்பணத்தையும் ஏற்ற மறுக்கிறார். நீ தன்னுடைய மகன் என்று அடிக்கடி கூறுபவர் அதனால் நீ அவருக்கு உதவி செய்வதாகக் கூறினால் கட்டாயம் ஏற்பார்” என்றார் தணிகாசலம்.

கேசவன் வைத்தியசாலைக்குச் சென்றான். பண்டிதர் வேரறுந்த கொடியைப் போல வைத்தியசாலைக்கட்டிலில் படுத்திருந்தார். அவரது முகத்தில் முடி வளர்ந்திருந்தது. முன்பென்றால் ஒரு நாளாவது மழிக்காமல் விடமாட்டார். பண்தரின் கோலத்தைக் கண்ட கேசவனுக்குக் கண்களில் நீர் முட்டியது.

பண்டிதர் கட்டிலால் எழும்ப முயற்சித்தார். முடியவில்லை. கேசவனது கண்கள் கலங்கியதைக் கண்டு பண்டிதர் துடித்துப் போனார்; "மகனே..." மேலே அவரால் பேசமுடியவில்லை.

"என்னை மகனாகவா நினைக்கிறீர்கள்...?" கேசவன் கேட்டான்.

பண்டிதருக்கு அவனது வார்த்தைகள் அளவுக்கதிகமான வேதனையைக் கொடுத்தது; "மகனே எனது அன்பைச் சந்தேகிக்கிறாயா?"

''இல்லை... இல்லை என்று அவசரமாக மறுத்த கேசவன்; "நீங்கள் என்னை மகனாக நினைத்தால் மகன் சொல்வதைக் கேட்க வேண்டும்'' என்றான்

பண்டிதர் சிரித்தார். அவரது கன்னங்களால் கண்ணீர வழிந்தது; "கேட்பன். சொல்"

"இங்குள்ள வைத்தியர்கள் உங்களைக் கொழும்பில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிட்சையளிக்கும்படி கூறுகிறார்கள். நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள்

மறுக்கமாட்டேன் என்று முன்பே கூறிவிட்டீர்கள். நான் உங்களின் மகன் தான். அப்படித்தான் என்னை நீங்கள் வளர்த்தீர்கள்; பணம் தந்தீர்கள்; உணவு தந்தீர்கள். நான் அறவழியில் உழைத்துச் சேர்த்த பணம்.'' என்றான் கேசவன். அவனது குரல் அடைத்தது.

பண்டிதர் எதுவும் பேசவில்லை. அவரது கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அதைக் கேசவன் துடைத்தான்; "உனது விருப்பப்படி செய்" என்றார் பண்டிதர்.

**754. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறள்அறிந்து தீதுஇன்றி வந்த பொருள்.**

சேர்க்கும் வழியறிந்து தீமை ஒன்றுமில்லாமல் சேர்க்கப்பட்ட பொருள். ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

### தீய செல்வம்

அப்போது அங்கே ஜெயபாலனும் தனபாலனும் வந்தனர். அவர்கள் பண்டிதருக்குத் தகரத்தில் அடைக்கப்பட்ட பால் மாவும், பழங்களும், உணவு வகைகளும் கொண்டு வந்தனர், "பண்டிதர் ஐயா, நீங்கள் பெரிய அறிஞர். உங்களைக் காப்பாற்ற வேண்டியது எமது கடன்; தார்மீகக்கடன் என்று நான் நினைக்கிறேன். எனவே தயவு செய்து ஒப்புக் கொள்ளுங்கள்" என்றான் தனபாலன்.

“எனக்குதவி செய்ய வேண்டியகடன் இங்கு யாருக்கும் இல்லை. நான் உனது இனத்தவன் கூட அல்ல. என்னால் இப்போது எதுவும் சாப்பிட முடிவதில்லை. இதெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போ. இங்கு வைக்க வேண்டாம்” என்றார் பண்டிதர்.

“ஏன் பண்டிதர் ஐயா கோபிக்கிறீர்கள்” என்று கேட்டான் ஜெயபாலன்.

“நான் கோபப்படவில்லை. இவையெலலாவற்றையும் என்னால் உண்ண முடியாது. வைத்தியர்கள் என்னை சில உணவு வகைகளை உண்ணக்கூடாது என்று கூறியுள்ளனர். அவர்கள் கூறிய எல்லாவற்றையும் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்”

“வீட்டுக்கு அனுப்புங்கள்” என்றார் ஜெயபாலன்.

“துளசி ஒரு மாதிரியான பெண். அவள் நீ வைத்து விட்டுப் போன பணத்தையும் திருப்பிக் கொடுக்கும்படி சொன்னவள். நான் திடீரென்று நோய் வாய்ப்பட்டதால் அதை உன்னிடங் கொண்டு வந்து தர முடியவில்லை. அவள் பெண், ‘‘உனது வீட்டுக்கு வருவது நல்லதல்ல என்று சொல்கிறாள்....” பண்டிதர் பேசிக் கொண்டிருக்கும் போது ஜெயபாலன் குறுக்கிட்டுச் சொன்னான்; “ஐயா நீங்கள் ஏழை. முன்பு நான் உங்களிடம் படித்தனான். அத்துடன் நான் கொடுத்ததை திருப்பி வாங்க மாட்டன்...” அவன் பேசிக் கொண்டிருக்கும்

போது பண்டிதர் நிதானமாகச் சொன்னர்; “துளசிக்கு அந்தப் பணத்தைத் தொடவே விருப்பமில்லை. அந்தப் பணத்தைப் பார்க்கவே தனக்கு விருப்பமில்லையாம். யாரிடமாவது கொடுத்து விடுங்கள்” என்றாள். நான் யாரிடம் கொடுத்து விடுவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். தனபாலு உன்னால் முடிந்தால் குறை நினைக்காமல் வீட்டை போய் துளசியிடம் வாங்கு.’’

“ஐயையோ நான் வாங்க மாட்டன்” என்றான் தனபாலன்.

“அப்ப அதைக் கொண்டு போய் மகா கணபதி கோயில் உண்டியலில் போடச் சொல்கிறேன்” என்றார் பண்டிதர்.

“ஏன் ஐயா, அப்படிச் சொல்கிறீர்கள்” என்று கேட்டான் ஜெயபாலன்.

“இன்னொருவரிடம் வாங்குவது பிச்சை எடுப்பதற்குச் சமமானது. ஒருவன் நோயாளியாகவோ, வலது குறைந்தவானகவோ இருந்தால் தான் இரந்து கேட்டல் வேண்டும். நான் முப்பந்தைந்து வருடங்கள் அரசாங்கத்தில் சேவையாற்றியுள்ளேன். இப்போது ஓய்வூதியம் பெறுகிறேன். “அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வரும் எந்தச் செல்வத்தையும் பெற்று மகிழாது அதை தீமையானது என்று நீக்கி விட வேண்டும்” என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நான் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளேன். அவர் என்னைக் காப்பாற்றுவார்.

நான் யாருக்கும் கடமைப்பட விரும்பவில்லை. இவ்வளவு காலமும் நான் மற்றவர்களுக்கு கடமைப்படாமல் வாழ்ந்து விட்டேன். இனி மகா கணபதியின் பாதார வித்தங்களில் இளைப்பாறவே விரும்புகிறேன்" என்றார் பண்டிதர்.

ஜெயபாலனால் எதுவும் சொல்ல முடியவில்லை. அவன் பண்டிதருக்குக் கூறாது சென்றான். அவன் கொண்டு வந்த பொருட்கள் அங்கிருந்தன.

"ஜெயபாலன் கொண்டு வந்த பொருட்களைத் தொட்டாலே பாவம் தம்பி. அதைத் தூக்கிச் சென்று குப்பைத் தொட்டிக்குள் போடு" என்றார் பண்டிதர்.

"நான் இங்குள்ள பெரிய வைத்தியரோடு கதைத்து விட்டேன். நாளைக்கே அவர் கொழும்பிற்குச் செல்லாமெனக் கூறினார். வீட்டாருக்குச் சொல்லிச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்." என்றான் கேசவன்.

பண்டிதர் புன்னகைத்தார். "உனது கோரிக்கையை என்னால் மறுக்க முடியவிலலை. இந்தக் கிழவன் பல ஆண்டுகள் வாழ மாட்டான். இது தேவைதானா என்று சற்று யோசித்துப்பார்" என்றார் பண்டிதர்.

"நான் முடிவு செய்து விட்டேன். தனபாலசிங்கம் மாமாவும் எம்முடன் வருகிறார். அவர்தான் நான் வந்தவுடன் இதைச் சொன்னவர்.

நீங்கள் மாமாவுடன் செல்லுங்கள். நான் ஒரு வாரத்தின் பின் வருகிறேன்" என்றான் கேசவன்.

**755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம் புல்லார் புரள விடல்.**

அருளோடும் அன்போடும் இல்லாது தீய வழியில் தேடிய செல்வத்தை நற் செயல்களுக்குப் பயன்படுத்தாது தீயதென ஒதுக்கி விடல் வேண்டும்.

## அரசின் பொருட்கள்

"உரிமையாளர் இல்லாமையால் வரும் பொருளையும், வரியாகப் பெறும் பொருளையும், பகைவரை வென்று திறையாகப் பெறும் பொருளையும் நாம் தொடக்கூடாது. அது அரசுக்குச் சொந்தமானது. எனது தந்தை வழி இனத்தவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. என்னோடுதான் வாழ்ந்து வந்தார். உழைப்புப் பிழைப்பில்லாத அவருக்கு மூன்று வேளையும் நான்தான் சாப்பாடு கொடுத்து வந்தேன். உடுபிடைவை, வைத்தியச் செலவுகளையெல்லாம் நான் தான் கவனித்து வந்தேன். அவருக்கு கணபதி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகே பத்துப் பரப்புக் காணி இருந்தது. அவர் அக்காணியை எனக்குத் தருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். யாரோ ஒருவரது சொத்தை அபகரிக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் நான் அதில் அக்கறைப்படவில்லை. அவர் இறக்கு முன் யாருக்கும் தெரியாது அக்காணியை எனது பெயரில் எழுதிவிட்டார். அவர் இறந்ததும் பலர் தாம் தாம்

உரிமையாளர் என்று கூறிக் கொண்டு காணியை ஆட்சிப்படுத்த வந்தனர். நான் கிராம சேவகரை அழைத்து உண்மை நிலையைச் சொல்லி அக்காணியைப் பாடசாலைக்குக் கொடுக்கும் படி கூறிவிட்டேன். பின் விசாரித்துப் பாத்தால் அக்காணி பாடசாலை ஸ்தாபகரான கந்தர் வைத்தியலிங்கத்தினது. வைத்தியலிங்கம் அவர்கள் பாடசாலைக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக என்னுடன் இருந்த வரிடம் கொஞ்சப்பணம் வாங்கிக் கொண்டு அக்காணியை ஈடாக எழுதிக் கொடுத்திருக்கிறார். அது மீளப்படவில்லை. அந்தக் காணி சம்பந்தமாக ஜெயபாலனும் தனபாலனும் அவரைக் கரைச்சல்படுத்தினவங்கள். அவர் தமது இனத்தவர் என்று என்னுடன் சண்டைக்கு வந்தவங்கள். பணம் இன்று வரும் நாளைக்குப் போய் விடும். ஆனால் மானம் அப்படியான தல்ல. ஜெயபாலன் இப்போது கோடீஸ்வரனாக இருக்கலாம். இப்பொழுது பணம் காரணமாக அவனை எல்லோரும் மதிக்கலாம். மதிப்பவர்களெல்லாம் மதித்துத் துதிபாடி தாம் பெறவேண்டியவற்றைப் பெற்றுவிட்டுப் பின் அவனது பழைய சரித்திரத்தைத் தானே கூறுகிறார்கள். அரியகுட்டி சொன்னவனாம்; "இவர் பெரிய ஆளே, கோயில் களைக் கொள்ளையடித்துத்தான் வெளிநாடு சென்றவர். அங்கையும் கள்ளத் தொழில் செய்துதான் முன்னேறியவர். நானும் அவருஞ் சேர்ந்து களவெடுத்தனாங்கள். எங்கையெங்கை எடுத்ததென்ற விபரம் முழுவதும் எனக்குத் தெரியும். இப்பபணக்கார னானவுடனே அதையெல்லாம் மறந்திட்டார" என்றானாம். அதனால்தான் நான் அவனிடம் கடமைப்பட விரும்பவில்லை. தீயவழியில் ஒரு சதத்தைப் பெற்றாலும் அது வளர்ந்து

கொண்டே இருக்கும். அதனால் தீயவர்களிடம் நாம் உதவி பெறக்கூடாது” என்றார் பண்டிதர்.

“நான் தீயவழியில் சம்பாதிக்கவில்லை. உடலை வருததித்தான் சம்பாதித்தனான்..” என்றான் கேசவன்.

“ஒவ்வொருவரிலும் உள்ள குணங்களைக் கொண்டுதான் அவன் ஒழுக்கமாக வாழ்கிறானா தீயவனாக வாழ்கிறானா என நாம் கண்டு கொள்ள முடியும். மனிதன் எப்பொழுதும் நல்லவனாகத்தான் பிறக்கிறான். பின் அவன் தன்னைத் தானே கெடுத்துக் கொள்கிறான். அவனை யாருங் கெடுப்பதில்லை. வசதிவாய்ப்புக்களுக்காக அவன் தீமையான செயல்களைச் செய்கிறான். ஒருமுறை களவெடுத்து அதில் இன்பத்தைக் கண்டவன் தொடர்ந்தும் களவெடுக்கிறான். களவெடுக்காதவன் தான் மனித நேயத்தைப் பற்றிச் சிந்திக்கிறான். அவன் களவெடுக்கத் தொடங்கியதும் மனித நேயம் மாறிவிடும். அதனால் நாம் எந்த நேரமும் அவதானமாக இருத்தல் வேண்டும். உரிமையாளர் இல்லாத பொருட்களும், வரியாகப் பெறும் பொருட்களையும், திறையாகப் பொருட்களையும் நாம் அரசிடம் ஒப்படைத்து விட வேண்டும்” என்றார் பண்டிதர்.

“நான் சிறுவயதில் உங்களுக்கு நிறையக் கடமைப்பட்டிருக்கிறேன்” கேசவன் கூறிக் கொண்டிருக்கையில் பண்டிதர் குறுக்கிட்டார்; “மகனே, நான் நூல்கள் பலவற்றைக் கற்றவன். தானதர்மங்களைச் செய்யும் படிதான் சிறந்த

நூல்கள் கூறுகின்றன; "ஏற்பது இகழ்ச்சி" என்று ஔவையார் கூறியுள்ளார். வசதியுள்ளவன் ஏற்பதுதான் இகழ்ச்சிக்குரியதாகும். ஒருவன் தானதர்மஞ் செய்யாவிட்டால் உலகம் வாழாது." என்றார் பண்டிதர்.

"ஐயா, நான் சென்று வருகிறேன். நீங்கள் வீட்டுக்குச் சென்று, நாளைக்குக் கொழும்புக்குச் செல்ல வேண்டிய ஆயத்தங்களைக் கவனியுங்கள்" என்ற கேசவன், அவரிடம் விடை பெற்றுச் சென்றான்.

**756. உறுபொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்.**

உரியவர் இல்லாத பொருளும் வரியாக வந்த பொருளும், பகைவரை வென்று திறமையாகப் பெறும் பொருளும் அரசனுடைய பொருள்கள் ஆகும்.

## செவிலித்தாய்

இலக்கியப் பேரவையில் அன்று வித்துவ சிரோன்மணி பேசினார். ஏராளமான அறிஞர்கள் அங்கு குழுமியிருந்தனர்; "அன்பானவர்களே, மனிதன் மனிதப் பண்புகளுடன் வாழ்தல் வேண்டும். நீ முதலில் உன்னை நேசி. அதாவது உன்னிடம் அன்பு வை. பின் மற்றவர்களை நேசி. அன்பு கொள்ளல் தான் மனித நேயம். தன்னில் அன்புள்ளவன், பிறரில் அன்பு வைக்கின்றவன் தான் கடவுளின் மீதும் அன்பு வைப்பான். அன்பு கொள்ளல் வேண்டும் என்று எண்ணினால் மட்டும் போதாது; சபைகளில் பேசினால் மட்டும் போதாது.

நூல்களைக் கற்பதால் கூடப் பயனில்லை. அதை நடைமுறையில் கைக் கொள்ளல் வேண்டும். தமது இயற்கையான குணங்களைப் பறவைகளும் விலங்குகளும் கூடக் கைக்கொள்கின்றன. மனிதனின் மனிதனாக வாழ வேண்டும். அதற்கு அன்பு தான் உதவும். மனிதனையும் இறைவனையும் இணைப்பது அன்பு ஒன்றுதான். அன்புள்ளவன் அமைதியாக இருப்பான்; மகிழ்ச்சியுடையவனாக இருப்பான்; ஆசைகள் இல்லாதவனாக இருப்பான். ஒருவனது மனத்தில் இருக்கும் அன்பின் அளவை முதலில் அவனது முகம் வெளிப்படுத்தும். பின் அவனது வார்த்தைகள் வெளிப்படுத்தும்.''

''அன்பு என்ற அற்புதத்தாயின் ஒப்புயர்வில்லாத அற்புதக் குழந்தை தான் அருள். இறைவன் அன்பே மயமானவன். அதனால் அவன் அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறான். அதே போல அன்புள்ள மனதுடன் தன்னை நாடி வருபவர்களுக்கும் அருள்பாலிப்பான். அருள் என்ற அற்புதக் குழந்தையை வளாப்பது செல்வம் என்ற செவிலித்தாய். இறைவன் தன்னை நாடி வரும் அடியார்க்கு அவர்கள் கேட்டவற்றையெல்லாம் கொடுக்கிறான். அதே போல அன்புள்ள மனிதன் தன்னை நாடிவரும் ஏழை எளியவர்களுக்குப் பொருள் கொடுத்துக் காப்பாற்றுகிறான்.''

''இராமாயணத்தில் ஸ்ரீகிருஷ்ணர் இராம அவதாரம் எடுத்தார். ஆனால் பாரதத்தில் கடவுளாகவே தனது நிஜ உருவில் பஞ்சபாண்டவர்களோடு சேர்ந்து வாழ்ந்தார். இராமன் கடவுளவதாரமென்ற போதும் எந்தக் குறைகளையும் கேட்கவில்லை. ஆனால் பாரதத்தில் கடவுளாகவே

இருந்த ஸ்ரீ கிருஸ்னர் பல திருகுதாளங்களைச் செய்ததாக நாம் அறிகிறோம். அவர் நீதியை நிலைபெறச் செய்வதற்காகத் திருவிளையாடல்கள் பலவற்றைச் செய்த போதும் அவற்றைக் குறைகள் என்று பேசுவோர் எம்மத்தியில் இருக்கிறார்கள்.''

''பக்தர்கள்மீது இறைவன் கொண்ட அன்பின் நிமிர்த்தம் செய்யக் கூடாத செயல்கள் பலவற்றை இறைவன் செய்துள்ளான். இது பக்தர்கள் இறைவன் மீது கொண்ட அன்பால் செய்யப்பட்டது. அன்பு கொண்ட இறைவன் பக்தர்களுக்கு அருள்புரிகிறான். அருள் எப்பொழுதும் செல்வம் சார்ந்ததாகும். நாம் இறைவனைப் போலப் பக்தர்களுக்கு அருள முடியும். மனிதனின் இதயத்துள் அருள் உண்டானால் அவனது செல்வம் குறைய ஆரம்பித்து அருள் வளர்ந்து கொண்டு செல்லும். இந்த அருளால் மிக்க செல்வமுடைய ஒருவன் வறியவனாகி விடுவதும் உண்டு.''

''ஸ்ரீ கிருஷ்ணரின் நண்பர் குசேலர். அவர் மிகவும் வறியவர். அவருக்கு இருபத்தேழு பிள்ளைகளிருந்தனர். கிருஷ்ணரின் மேல் அன்பும் பக்தியும் மிக்க குசேலரைச் கிருஷ்ணரிடம் சென்று தமது நிலையைத் தெரிவித்து பொருள் வேண்டி வருமாறு குசேலரின் மவைி அவரைத் தொந்தரவு செய்யக் குசேலர் வேண்டா வெறுப்பாக, மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காகச் சென்று கிருஷ்னனைத் தரிசித்துக் கலந்துரையாடிவிட்டு வருகிறார். குசேலரின் மீது அன்பு கொண்ட கிருஷ்ணர் அவருக்கு அருள் புரிகிறார். அவரது வீடு சொர்க்கபுரியாகிறது. இது கிருஷ்னரின் அருளால் வந்தது. அன்பு என்ற தாய் பெற்ற அருள் என்னும்

அற்புதக் குழந்தை, செல்வம் என்றும் செவிலித்தாயால் வளர்க்கப்படும் என்ற தத்துவத்தை இது காட்டுகிறது. அன்புதான் கடவுள். இதை இந்து மதம் ‘அன்பே சிவம்’ என்கிறது. மக்கள் எல்லோரும் அன்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மற்றவர்களுக்கு அவர்களால் அருள்புரிய முடியும்.” வித்துவ சிரோன்மணி பேசிக் கொண்டிருந்தார். சபையோர் அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

**757. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு.**

அன்பினால் பெற்றெடுக்கும் அருள் என்ற குழந்தை, பொருள் என்று சொல்லப்படுகின்ற செவிலித்தாயால் வளர்வதாகும்.

## யானைப் போர்

மணிவண்ணன் தனது வியாபார நிலையங்கள் யாவற்றையும் குத்தகைக்குக் கொடுத்து விட்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய மண்டபத்தில் காலை ஆறுமணிக்கு வந்து அமர்ந்து விடுவான். காலைப்பூசை, பகற்பூசை,

இரவுப் பூசை யாவும் முடிந்த பின்பு இரவு ஒன்பது மணிக்குத்தான் தனது வீட்டுக்குச் செல்வான். பகல் உணவை அவன் மடத்தில் உண்பான். கதிரேசனுடன் நான்கு வயோதிபர்கள் கோயில் மடத்தில் தங்குயிருந்த போது தணிகாசலத்தின் வேண்டுதலில் பெயரில் அந்த வயோதிபர்களுக்கு உணவு கொடுக்கச் சம்மதித்திருந்தான். அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அவனே வழங்கி வருவான். அதன் பின் கதிரேசன் தனது சகோதரி ஈஸ்வரியுடன் சென்று விட்டார். மிகுதியான வயோதிபர்கள் மடத்தில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சமைக்கும் உணவை வாங்கி அவன் பகல் உண்பான். அவன் பகல் வேளையில் அங்கு சாப்பிடுவதால் வயோதிபர்கள் நல்ல முறையில் சமைத்து அவனுக்கும் கொடுத்து தாமும் உண்டு வந்தனர்.

காலைப்பூசை முடிவடைந்ததும் சுவாமியாரோடு அரச மரநிழலில் வந்து அமர்வான். சுவாமியார் நிஷ்டையில் ஆழ்ந்து விடுவார். மணி வண்ணன் கோயிலைத் துப்பரவு செய்வான். மணிவண்ணன் கோயிலுக்கு வந்ததை அறிந்த பரமேஸ்வரனும் கோயிலுக்கு வந்து விட்டார். அவரும் மடத்தில் பகல் உணவை உண்பார். இருவருக்கும் கோயிலடியில் இருப்பது எல்லையில்லாத இன்பத்தைக் கொடுத்தது.

இலக்கியப்பேரவையினர் அலுவலகத்திற்கென மண்டபமொன்றைக் கட்ட விரும்பினார்கள். அதைப் பல இலட்ச ரூபா செலவில் மணிவண்ணன் கட்டிக் கொடுத்தான். அதனால் மகிழ்ந்த இலக்கியப் பேரவையினர் மணிவண்ணனுக்குப் பெருவிழா ஒன்றெடுத்தனர். அதில் ஊரில் உள்ள பெரும்

பெரும்பிரமுகர்களெல்லாம் கலந்து சிறப்பித்து மணிவண்ணனைப் பலவாறு புகழ்ந்தனர். மக்கள் நூற்றுக்கணக்கான மாலைகளை மணிவண்ணனுக்கு அணிவித்தனர். மங்கள வாத்தியம் முழங்க வீடுகள் தோறும் கும்பம் வைத்து அவனை வாழ்த்தினர்.

அவ்வூரில் போரினால் பெற்றோரை இழந்த இருபத்தாறு சிறுவர்கள் இருந்தனர். அவர்கள் தமது உறவினர்களது வீடுகளில் கவனிப்பாரற்று வாழ்ந்து வந்தனர். பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அதை அறிந்த மணிவண்ணன் அவர்களுக்கான காப்பகம் ஒன்றை அமைத்து, இருபத்தாறு சிறுவர்களையும் அழைத்து வந்து காப்பகத்தில் இருத்தினான். அவர்களது நலன்கள் முழுவதையும் கவனித்தான். அவர்கள் தினமும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினர். அக்காப்பகம் ஒழுங்காக நடைபெறுவதை அறிந்த அயலூரவல்கள் அங்கு வாழ்ந்த பெற்றோரை இழந்த சிறுவர்களையும் அக்காப்பகத்தில் கொண்டு வந்து சேர்த்தனர். ரோஜாவனம் போலத் திகழ்ந்த அக்காப்பகம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு அருகே அமைந்திருந்தது. அக்காப்பகத்தில் இருந்த சிறுவர்கள் சகல வசதிகளோடும் வாழ்ந்து வந்தனர்.

அவ்வூரில் போரினால் கணவனை இழந்த ஐந்து பெண்கள் இருந்தனர். அவர்களை அழைத்து வந்து சிறுவர் காப்பகத்தில் அவர்களைப் பராமரிக்கும் வேலையைக் கொடுத்தான். அதனால் அவர்கள் மிகவும் வசதியோடு வாழ முடிந்தது. மணிவண்ணன் செய்யும் நற்செயல்களைக் கண்ட பரமேஸ்வரனும் மணிவண்ணன் செய்யும் சமூக

உதவிகளுக்குப் பெருந்தொகையாகப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அன்று சிறுவர் காப்பகத்தில் கலை விழா ஒன்று நடைபெற்றது. ஊரில் உள்ள பெரும் பெரும் தனவந்தர்களும் அறிஞர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டனர். அவ்விழாவுக்கு விக்னேஸ்வர மூர்த்தி தலைமை தாங்கினார். அவர் தனது தலைமை உரையில்; ‘‘அன்பானவர்களே, ஆருமற்ற அனாதைகளாக வாழ்ந்து கொண்டிருந்த சிறுவர்களுக்கு இன்று பாதுகாப்புக் கிடைத்துள்ளது; நல்வாழவு கிடைத்துள்ளது; கல்வி கிடைத்துள்ளது; சுருக்கமாகச் சொன்னால் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் கிடைத்துள்ளது. மணிவண்ணன் ஒரு பெரும் வர்த்தகன்; பெரும் தனவந்தன். அவர் எமது கிராம மக்களுக்கும் பாடசாலைக்கும் கோயிலுக்கும் இலட்சக்கணக்கில் உதவி செய்தது உங்களுக்குத் தெரியும். இப்போது வர்த்தகத்தை விட்டு விட்டு சமூக சேவையில் ஈடுபட்டுள்ளார். அதனால் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் நல்வாழ்வைப் பெற்றுள்ளனர். ‘‘ஒருவன் தனக்குச் சொந்தமான செல்வத்தை நல்ல வழியில் செலவு செய்வதென்பது மலையில் மேலே ஏறி இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைப் போரைப் பார்ப்பதைப் போன்ற சிறப்பு மிக்கது’’ என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். அவர்கள் சொல்வது போல மணிவண்ணன் தான் அறவழியில் தேடிய செல்வத்தை நல்ல வழியில் செலவு செய்வது மலைமீது இருந்து யானைப் போரைப் பார்ப்பது போன்றது’’

“அத்தகைய சிறப்புப் பெற்ற மணிவண்ணன் சிறப்பாக வாழ நாவலர் ஸ்ரீ வித்தியா மகாணபதி உதவி செய்வார்”

**758. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து ஒன்று உண்டாகச் செய்வான் வினை.**

ஒருவன் தனது செல்வத்தை வைத்துச் செயலாற்றுவது என்பது, மலையின் மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போரைப் பார்பதைப் போன்றது.

## கூர்மையான ஆயுதம்

ஜெயபாலன் அன்று காலை சிறுவர் காப்பகத்திற்கு வந்தான். அவனை வேண்டா வெறுப்பாக மணிவண்ணன் வரவேற்றான். மணிவண்ணன் முன்பு சிறிய வியாபார நிலையம் ஒன்று வைத்து நடத்திய காலத்தில் அக்கடையில் இருந்த பொருட்கள் யாவும் களவு போய்விட்டது. அதை ஜெயபாலன் தான் திருடியதாக ஊரில் கதை அடிபட்டது. அதை உண்மையென மணிவண்ணன் நம்பியிருந்தான். அத்துடன் அந்த நாட்களில் நடைபெற்ற திருட்டுக்களுக்கெல்லாம் அவன் தான் காரணமென்று மக்கள் கதைத்தனர். இன்று அவன் பெருங் கோடீஸ்வரனாக ஊருக்குத் திரும்பி வந்து நன்கொடைகள் செய்யும் போதும் மக்கள் பழைய நிகழ்வுகளைக் கதைத்துச் சிரித்தனர்.

“நான் இங்கு வந்ததைத் தப்பாக நினைக்கிறீர்களா…?” என்று கேட்டான் ஜெயபாலன்.

மணிவண்ணன் பேசவில்லை. வெகுநேரமாக மௌமான இருந்தான். அவன் ஜெயபாலனுடன் கதைக்க விரும்பவில்லை. அதை உணர்ந்த ஜெயபாலன் சொன்னான்; ‘‘மணி, கொலை செய்தவனைக் கூட இறுதி நேரத்தில் என்ன வேண்டும் என்று கேட்பார்கள். நான் என்ன கொலைக் கைதியை விட கொடியவனா...? சிறுவயதில் நான் பல கொள்ளைகளைச் செய்ததாகச் சொல்கிறார்கள்....’’ என்று கூறிவிட்டு நிறுத்தினான் ஜெயபாலன். சில நிமிடங்கள் அவன் பேசவில்லை. அவனால் பேச முடியவில்லை. பின் சொன்னான்; ‘‘மணி, எனக்கு நேர்ந்த அவலம் வேறு யாருக்கும் நேரக்கூடாது..’’ என்று கூறிவிட்டு விம்மினான். மணிவண்ணன் எதுவும் பேசாது அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். சில கணங்கள் துயர மேலீட்டால் விம்மி அழுத ஜெயபாலன் சொன்னான்; ‘‘கடந்த காலத்தை எண்ணி நான் மிகவும் வேதனைப்படுகிறேன். ஊரில் பெரிய மனிதர்கள் என்றிருப்பவர்கள் முன்மாதிரியாக வாழ வேண்டும். அனாதைகளையும் ஏழைகளையும் வாழ வைத்தல் வேண்டும். சின்ன வயதில் எனது தந்தை இறந்து விட்டார். அதனால் அம்மா என்னைச் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டில் வேலைக்குச் சேர்த்தார். சிவசுந்தரமூர்த்தி என்னைத் தவறான வழியில் நடத்தி விட்டார். அவர் குடிக்கும் போது எனக்கும் தருவார். பத்து வயதில் நான் குடிக்கப் பழகி விட்டேன். நல்ல உணவு தருவார். அதனால் அவரை நான் தெய்வமாக மதித்தேன். அவர் கூறும் வேலைகளையெல்லாம் செய்து வந்தேன். அவர் தனது எதிரிகளை என்னைக் கொண்டு பழிவாங்கினார். அவரது எதிரிகளின்

சொத்துக்களை நான் சூறையாடினேன். அல்லது அழித்தேன். பண்டிதருடன் அவருக்கு ஏதோ பிரச்சினை இருந்தது. அதனால் பண்டிதரது மனைவியின் தாலிக்கொடியை அறுக்குமாறு சொன்னார். அதை அறுத்து அவரிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். பல்லாயிரம் ரூபா பெறுமதியான அந்தத் தாலிக் கொடிக்கு இருநூறு ரூபா தந்தார். பாடசாலையை மூடினால் அக்காணியைத் தான் அடையலாமென்று பாடசாலையில் திருடச் சொன்னார். கோயிலில் திருடச் சொன்னார்'' அழுதான் ஜெயபாலன்.

மணிவண்ணன் அதைக் கேட்டு அதிர்ந்து போனான்; ''பெரிய மனிதர் என்ற போர்வையில் வாழ்பவர்கள் எத்தனை தில்லு முல்லுகளைச் செய்திருக்கிறார்கள்'' என்பதை நினைக்க மணிவன்னனுக்குத் தலை சுற்றியது.

பண்டிதரின் மனைவியின் தாலிக்கொடியை அறுத்தது எனது மனதை வருத்தியது. அதனால் அதைத் திருப்பிக் கொடுக்குமாறு கெஞ்சினேன். அவர் மறுத்து விட்டார். அத்துடன் தனது செல்வாக்கைப் பாவித்து என்னைக் காவல்துறையில் பிடித்துக் கொடுத்து விடுவதாகவும் மிரட்டினார். அதனால் என்னால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. பணபலத்தால் தானே இவர் தான் நினைத்தபடியெல்லாம் செய்கிறார் என நினைத்து நானும் பணம் தேடிவேண்டுமென நினைத்தேன்; ''ஒருவன் பணம் தேடினால் தான் பகைவருடைய செருக்கை அடக்கலாம்; பணம்தான் பகைவனது செருக்கை அடக்கக்கூடிய கூரிய ஆயுதம்'' என்று எனது பேரனார் அடிக்கடி கூறுவார். அதனால்

சிவசுந்தரமூர்த்தியின் வீட்டில் திருடிக்கொண்டு வெளி நாட்டுக்குச் சென்று விட்டேன். சிவசுந்தரமூர்த்தி தனது வீட்டில் நான் திருடியதைக் கூறாமல் வேறு இடங்களில் திருடியதைக் கூறியதால் தான் எல்லாம் தெரிய வந்தது. வெளிநாட்டில் ஒரு கொள்கையுடன் சலிப்பில்லாமல் உழைத்துப் பணத்தைத் தேடிவிட்டேன். நான் செய்த குற்றங்களுக்குப் பிராயச்சித்தமாக என்னாலான உதவிகளைச் செய்து வருகிறேன்'' விம்மினான் ஜெயபாலன்.

அவனைப் பார்க்க மணிவண்ணனுக்குப் பரிதாபமாக இருந்தது. ''பாவம் ஜெயபாலன்'' என்று நினைத்தான். அவனுக்குத் துக்கமாக இருந்தது.

**759. செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்**
**எஃகுஅதனின் கூரியது இல்.**

ஒருவன் பொருளைச் சேர்க்க வேண்டும் அவனுடைய பகைவரின் செருக்கை அடக்கவல்ல கூரிய ஆயுதம் பொருளன்றி வேறு இல்லை.

## எளிதாக வருபவை

''எனது பாட்டனார் மிகுந்த அறிவாளி. நான் சிறுவயதில் சிவசுந்தரமூர்த்தியுடன் சேர்ந்து குடிப்பது, திருடுவது யாவும் அவருக்குத் தெரியும். அதனால் சொல்வார்; ''ஜெயம், ஒரு மனிதன்

நேர்மையாக வாழ வேண்டும். கள்ளருந்தக் கூடாது. கள்ளருந்துவது எல்லாத் தீய செயல்களுக்கும் வழிவகுக்கும். கள்ளைக் குடித்தவனது மதிமயங்கி விடும். அதன்பின் அவனுக்குத் தான் என்ன செய்கிறேன் என்று தெரியவராது. கள்ளுண்ட மயக்கத்தில் செய்யும் செயல்கள் என்னென்னவென்று நினைவுக்கும் வராது. எமது பரம்பரையில் உள்ள எவரும் குடிப்பதில்லை; திருடுவதில்லை; மிகவும் ஒழுக்கமாக வாழ்பவர்கள். உனது தந்தையார் ஒழுக்க சீலர். அப்படிப்பட்ட ஒழுக்க சீலனுக்கு மகனாகப் பிறந்த நீ குற்றச் செயல்கள் செய்வதை என்னால் தங்கிக் கொள்ள முடியவில்லை. உன்னைப் பற்றி ஊரவர்கள் கேவலமாகக் கதைக்கும் போது எனது உயிர் போய் விடுகிறது. மகனே, தயவு செய்து நீ சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் செல்லாதே. அவன் உன்னைப் பயன்படுத்தித் தனது எதிரிகளைப் பழிவாங்குகிறான். இது ஊராருக்குத் தெரியாது. தெரிந்தாலும் நம்பமாட்டார்கள். ஏனென்றால் அவன் பணக்காரன். பணத்தால் எல்லாவற்றையும் அடக்கிவிடலாம். எல்லா நன்மைகளும் உடையவர்களாக இருந்தாலும் பணமில்லாதவர்களை மக்கள் மனிதனாக மதிப்பது குறைவு. எனவே நீ சிவசுந்தர மூர்த்தியின் உறவைவிட்டு விட்டு நேர்மையாக வாழப்பழகு.” என்றவர். அவரது போதனைகளால் மனம்மாறிய நான் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் செல்லாமல் விட்டு விட்டேன். ஆனால் சிவசுந்தரமூர்த்தி என்னைத் தேடி வந்து என்னை மிரட்டினார். காவல்துறையில் பிடித்துக் கொடுத்துவிடுவேன் என்றார். அவரது தொல்லைகளைப் பொறுக்கமாட்டாமல் தான் நான் செய்த பாவங்களுடன் பாவமாக இருக்கட்டுமென்று

நினைத்துச் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டில் திருடிக் கொண்டு வெளிநாடு சென்றேன்.'' பெருமூச்சுவிட்டான் ஜெயபாலன்.

மணிவண்ணன் அப்பொழுதும் பேசவில்லை; ''வலிமையுள்ளவனின் சொற்படிதான் மக்கள் நடக்கிறார்கள். அதைப் புரிந்து கொண்டதால்தான் நான் சிவசுந்தரமூர்த்தியை எதிர்க்கவில்லை. வலிமையுள்ளவர்களை மேலும் வலிமைப்படுத்துவது பணம் ஒன்றுதான். ஆனால் எந்த வேளையிலும் பணம் மனிதனைத் தேடிச் செல்லாது. மனிதன் தான் கஷ்டப்பட்டுப் பணத்தைத் தேடுதல் வேண்டும். நான் இரவு பகலாகக் கஷ்டப்பட்டுப் பணத்தைத் தேடினேன். பணத்தைத் தேடத் தேட பணத்தைத் தேட வேண்டுமென்ற நினைப்பு எனது மனதில் வளர்ந்தது. அதனால் வெறி கொண்டவனைப் போல உழைத்தேன். எனது பிள்ளைகள் மிகவும் நன்றாக வாழ்கிறார்கள். நான் பட்ட கஷ்டங்களால் தான் நான் ஊருக்குதவாதவனானேன்; திருடனானேன்; குடிகாரனானேன். அதை நினைத்தால் இப்பொழுதும் வேதனையாக உள்ளது. அதனால் பெற்றோரை இழந்து உனது சிறுவர் காப்பகத்தில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஐம்பதினாயிரம் ரூபா நிரந்தர வைப்பிலிட யோசிக்கிறேன். அதற்காகத்தான் நான் இப்பொழுது இங்கு வந்துள்ளேன். கருணை கூர்ந்து இதை நீ அனுமதித்தல் வேண்டும்.'' என்றான் ஜெயபாலன். அவனது குரல் துயரத்துடன் ஒலித்தது.

மணிவண்ணன் எதுவும் பேசாது யோசித்துக் கொண்டிருந்தான். அவன் தனது இளமைக் காலத்தை எண்ணிப் பார்த்தான். இளவயதில் அவன்

கடையொன்றில் சிப்பந்தியாக வேலை செய்யும் போது ஓர் இனிப்பொன்றை எடுத்துச் சாப்பிட்டதற்கு முதலாளி அடித்த அடியை நினைத்துப் பார்த்தான். அவனது உடல் வலித்தது. "தீயவர்கள் என்று சமூகம் ஒதுக்கியவர்களின் மனக்கதவைத் திறந்தால் எவ்வளவு குப்பைகள் இருந்து நாறும். எல்லாம் திருத்துவாரின்மையாலும் வறுமையாலும் அறியாமையினாலுமே ஏற்படுகிறது. பிற்காலத்தில் அதை உணர்ந்தவர்கள் திருந்தி விடுவார்கள்" என்று நினைக்க ஜெயபாலன் மீது அவனுக்குப் பாசம் பிறந்தது. "சரி, நீங்கள் விரும்பிய படி வைப்பிலிடுங்கள்" என்றான் மணிவண்ணன்.

"மிகவும் சந்தோஷம் தம்பி, தேடுவதற்கு அரிதான செல்வத்தை அளவுக் கதிகமாகத் தேடியவர்களுக்கு, மற்றய பணிகள் யாவும் மிகவும் எளிதானவை. பணத்தைத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் மிகவும் எளிதாகக் கைகூடும்." என்று பெரியவர்கள் சொல்வார்கள். அத்துடன்; "தான தர்மங்கள் செய்தால், முன்பு ஒருவன் செய்த பழிபாவங்களெல்லாம் அற்று விடும்" என்றும் எனது பாட்டனார் கூறுவார். எனது மனந்திறந்து நான் செய்த தவறுகளை விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுக்கும், தணிகாசலம் அண்ணைக்கும் சுவாமியாருக்கும் சொன்னதால் தான் அவர்கள் என்னை மதிக்கிறார்கள்" என்றான் ஜெயபாலன்.

---

**760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.**

---

சிறந்ததாகிய பொருளை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேரும் எளிய பொருள்களாகும்.

## சிறந்த செல்வம்

ஏமநாதனும் காயத்திரியும் சுவர்ணா நதிக்கரையில் வந்தமர்ந்தனர். பகல் வேளையானாலும் மரங்கள் அந்நதிக்கரையில் சோலையாக நின்றமையால் அவர்களிருந்த இடத்தில் சூரிய வெளிச்சம்படவில்லை. பொழுது சாய்ந்ததைப் போல இருந்தது. மெல்லிய காற்று இருவரது உடல்களையும் மெல்ல வருடியது. அந்த மென்மையான ஸ்பரிசம் ஏமநாதனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது. அருகில் அமர்ந்திருந்த காயத்திரியைப் பார்த்தான் அவளது முகம் சிவந்து பூரித்திருந்தது. அதைப் பார்த்த அவன் சற்றுத் தடுமாறிப் போனான். அக்கணமே அவளை அணைத்து மகிழ வேண்டுமென்ற நினைப்பு அவனது மனதில் முளை கொண்டது.

காயத்திரி ஏமநாதனைப் பார்த்தாள். அவனது இரண்டு கண்களும் சிவந்திருந்தன. உஸ்ணமான மூச்சுக்காற்று அவளது கன்னத்தில் பட்டு மயக்கத்தை உண்டு பண்ணியது. அவனது கண்கள் மெல்ல மொழி பேசின.

“அரண்மனைக்குச் செல்வோம்” என்று எழுந்தாள் காயத்திரி. அவள் வெட்கம் உள்ளவள். இரவில் தனிமையில் இருக்கும் போது கூட வெட்கப்படுவாள். அதனால் எழுந்தான் ஏமநாதன்.

அவர்கள் வரும்போது அரண்களைப் பாதுகாக்கும் தளபதியான சிவசேனன் அவர்களின் அருகே வந்தான்; “அரண்கள் யாவும் மிகவும் பலமான நிலையில் உள்ளன. பலவீரர்கள் தனித்தனியாகத் தங்கக்கூடிய வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளது. அரசர் வேண்டுமானால் உள்ளே சென்று இளைப்பாறலாம்” என்றான்.

ஏமநாதன் காயத்திரியைப் பார்த்துக் கண்சிமிட்டினான். அவனது செயல் அவளுக்கு அளவுக்கு மீறிய வெட்கத்தைக் கொடுத்தது. தனது விருப்பத்தை அங்கு பூர்த்தி செய்யலாமென நினைத்து மகிழ்ந்தான் ஏமநாதன்.

மிகவும் விசாலமான அரண் அது. அதற்குள் குறைந்தது பத்துப்பேர் தங்கலாம். மிகவும் விசாலமாக அமைந்திருந்த அரண் மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் இருந்தது. வெளியே இருந்து பார்த்தால் அங்கு அரண் இருப்பது யாரும் தெரியாதவாறு மிகவும் நுட்பமாக அமைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அங்கு யாரும் இருக்கவில்லை. ஏமநாதன் காயத்திரியை இறுக அணைத்தான். காயத்திரி பிணங்கினாள்; “அன்பே, ஒரு காதலியும் காதலனும் பலர் இருந்தாலும் அவர்களுக்குத் தெரியாதபடி கூடிமகிழ்ந்து விடுவர்” என்றவாறு இறுக அணைத்தான்.

அவர்கள் வெளியே வந்தபோது சிவசேனன் புன்முறுவலுடன் வரவேற்றான்; “உனக்கு எனது பாராட்டுக்கள். மிகவும் அருமையான அரண்” என்றான் ஏமநாதன். அப்போது தளபதி நாகராஜன்

வேகமாகப் புரவியில் வந்திறங்கி ஏமநாதனை வணங்கினான்.

“அரண்மனைக்குச் சென்றேன். தாங்கள் பட்டத்தரசியுடன் சுவர்ணா நதிக்கரைக்குச் சென்றதாக முதலமைச்சர் கூறினார். அதனால் இங்கு வந்தேன்” என்ற நாகராஜன் ஏமநாதனைப் பார்த்தான்.

“சொல்லு” என்றான் ஏமநாதன்.

“எல்லா அரண்களையும் நான் மற்றைய தளபதிகளுடன் சென்று பார்வையிட்டு விட்டேன். எல்லா அரண்களும் மிகவும் பலமான நிலையில் உள்ளன. முப்படைகளும் எந்த நேரமும் எந்தப்பலம் மிக்க எதிரிகளையும் தாக்குவதற்குத் தயாரான நிலையில் உள்ளன. ஆயிரக்கணக்காகன இளைஞர்களுக்குப் புதிதாக ஆயுதப் பயிற்சி வழங்கியுள்ளோம். நாட்டில் உள்ள பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைத்து இளைஞர்களுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்கினால் நல்லதென்று நான் நினைக்கிறேன். தங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டான் நாகராஜன்.

“படையில் வீரர்களின் தொகையைவிட, உறுப்புக்கள் அனைத்தும் பூரணமாக இருத்தல் வேண்டும். அத்துடன் எதிரியின் பகைக்கு அஞ்சாமல் தீரத்துடன் போர்புரியும் படையே அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்த செல்வம். அதனால் படை வீரர்களுக்குப் போதிய ஆயுதங்களும், யானை, குதிரை, தேர் போன்றவையும் குறைவின்றி நல்ல நிலையில்

இருத்தல் வேண்டும். ஆயுதங்கள் பழுது பார்த்து வைத்திருத்தல் வேண்டும்...'' என்று ஏமநாதன் கூறினான்.

“தாங்கள் வந்து பார்வையிடுங்கள். அரசனின் செல்வம் உறுப்புக்கள் அனைத்தும் நிறைந்த படைகள் என்பது எனக்குத் தெரியும். அதனால் யாவற்றையும் நல்ல முறையில் செய்து வைத்துள்ளேன். தற்போதைய நிலையில் பேர் உண்டாகாதென்று நாம் கவலையீனமாக இருக்கக்கூடாதென்பதற்காக முப்படைகளையும் உசார் நிலையில் வைத்திருக்கிறேன்'' என்றார் நாகராஜன்.

ஏமநாதன் பூரிப்புடன் புன்னகைத்தான்.

**761. உறுப்பு அமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை.**

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய், எதிர்புக்களுக்கு அஞ்சததாய், தொடர்ந்து வெற்றி தரும் படையே அரசனின் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் ஆகும்.

## மூலப்படை

“நாகராஜா, உன்னில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அதனால் தான் நான் உன்னைத் தளபதியாக நியமித்தேன். நாட்டுப்

பற்றும் அரசனின் மீது அளவுக்கதிகமான விசுவாசமும் கொண்ட நீ, எந்த எதிரியையும் ஓடோட விரட்டுவாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதனால் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைத்து இளைஞருக்கும் ஆயுதப்பயிற்சி கொடுப்பதை நான் அவ்வளவு விரும்பவில்லை. ஆயுதப்பயிற்சி பெற விரும்புபவர்களுக்கு மட்டும் பயிற்சி கொடுங்கள். அத்துடன் மற்றைய வேலைகளுக்கும் இளைஞர் தேவை. எல்லோருக்கும் பயிற்சியை ஒரே முறையில் கொடுத்தால் மற்றைய வேலைகள் பாதிக்கப்பட்டு விடும். தற்பொழுது அறுவடை தொடங்கி விட்டது. அவ்வேளையில் பயிற்சி கொடுத்தால் மக்கள் வெறுப்படைவார்கள். படிப்படியாக எல்லோருக்கும் பயிற்சி கொடுப்போம்'' என்றான் ஏமநாதன்.

ஏமநாதன் கூறுவது நாகராஜனுக்குச் சரியெனப்பட்டது.

‘‘போர் செய்யும் போது நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். பகைவன் பலவிதமான தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவான். நாம் நிட்சயமாகப் பகைவனை வெல்வோம் என்று நினைப்பதைப் போல பகைவனும் எம்மை வெல்ல முடியும் என்று நினைத்துத்தான் போர் தொடுப்பான். எனவே போரில் எதிர்பாராத அழிவால் எமது படையின் வல்லமை குறைந்தால், எந்த வேளையிலும் நெஞ்சுறுதி குலையாத தன்மை அந்த நாட்டின் மூலப்படைக்குரியதாகும். எனவே மூலப்படைக்குரிய வீரர்களைத் தெரிவு செய்யும் போது அவதானமாக இருத்தல் வேண்டும். மூலப்படை வீரர்களுக்கு எந்த நேரத்திலும் எக்குறையும் இருக்கக்கூடாது.

குறிப்பாக ஆயுதங்களும் உணவு வகைகளும் போதியளவில் இருத்தல் வேண்டும்''

''மூலப்படை வீரர்கள் திறமையானவர்களாகவும், நெஞ்சுறுதிமிக்கவர்களாகவும், எந்த வேளையிலும் அஞ்சாததன்மை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். அப்படியான வீரர்களால் தான் போரில் எதிர்பாராதவிதமாகத் தோல்வியேற்பட்டால் அதைச் சமாளித்து வெற்றியாக்க முடியும். அதற்கேற்றபடி வீரர்களைத் தெரிந்து அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கி வருகிறோம். யானையேற்றம், குதிரையேற்றம், மற்றும் அனைத்து ஆயுதங்களின் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது'' என்றான் நாகராஜன்.

ஏமநாதனின் உதடுகள் பிரிந்து மலர்ந்தன; ''நாகராஜா, உனது திறமையில் எனக்குப் பூரணமான நம்பிக்கையுண்டு. நேற்று நான் மூலப்படையினரின் பயிற்சி முகாமிற்குச் சென்று அவர்கள் பயிற்சி பெறும் விதத்தைப் பார்வையிட்டேன். அந்த நேரம் நீ குதிரைப்படை வீரர்களின் முகாமில் இருப்பதாக அறிந்தேன். போர் வீரர்கள் தாய் நாட்டின் மீது அளவுக்கதிகமான பற்று வைத்திருக்கிறார்கள். தாய் நாட்டுப் பற்றுள்ள வீரர்கள் எதிரியை எக்காரணம் கொண்டும் தமது நாட்டைக் கைப்பற்ற அனுமதிக்க மாட்டார்கள் அவர்கள் தொன்று தொட்டு வந்த வீரர்கள்'' என்றான் ஏமநாதன்.

''போர்க்கால அணிவகுப்பொன்றை நாளைய தினம் செய்து பார்ப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

தாங்களும் பட்டத்தரசியும் அதில் கட்டாயம் கலந்து கொள்ளல் வேண்டும்'' என்றான் நாகராஜன்.

``கட்டாயம் கலந்து கொள்வோம்'' என்றான் ஏமநாதன்.

``அரண்மனையிலும் இன்பமாக நாம் பொழுதைக் கழிக்கமுடியாது. இன்பமாகக் கழிப்பதற்கென்று அரண்மனையை விட்டுப் புறப்பட்டு வந்தாலும் யாரோ ஒருவர் வந்து விடுவார். நான் எந்நாளும் பிரியாது உங்களோடு இருக்க ஆசைப்படுகிறேன்'' என்றாள் காயத்திரி.

``எனக்கும் அந்த ஆசை இருக்கிறது கண்ணே. பளிங்குச் சிலை போன்ற பேரழகி அருகில் இருக்கும் போது மற்றையனவெல்லாம் எனக்கு வெறுப்பாகத்தான் இருக்கிறது. அதனால் தான் அரணுள்ச் சென்று குதூகலித்திருந்தோம்'' கண் சிமிட்டினான் ஏமநாதன்.

வெட்கத்தால் சிணுங்கினாள் காயத்திரி; ``உறுப்புக்கள் அனைத்தும் சிறந்ததாக அமைந்தது தான் சிறந்தபடை. அது அரசனின் செல்வம் என்பார்கள். அதுபோலத்தான் நீரும் எனது சிறந்த செல்வம்'' சிரித்தான் ஏமநாதன்.

தலை குனிந்தாள் காய்த்திரி. ``சிவந்த உமது மேனியில் முதுகுப் புறமாக மறைந்திருக்கும் கரிய மச்சம் உமது அழகை மேலும் மெருகூட்டுகிறது. அது அதிஷ்டமச்சம். எனக்கு

பேரதிஷ்டமாகக் கிடைத்த பொக்கிசத்தை விடப் பெரும் பொக்கிஷம் கிடைக்கப் போகிறது.''

மேலும் சிணுங்கினாள் காயத்திரி. அவளது முகம் நாணிக் கோணிச் சிவந்தது; ''மரக்கிளையைப் பாரும்'' என்றான் ஏமநாதன்.

காயத்திரி நிமிர்ந்து பார்த்தாள். பஞ்சவர்ணக்கிளிகள் இரண்டு தம் நிலையை மறந்து, உலகை மறந்து காதல் லீலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்க காயத்திரிக்கு வெட்கமாக இருந்தது.

---

**762.உலைவுஇடத்து ஊறுஅஞ்சா வன்கண் தாலைவுஇடத்துத்**
**தொல்படைக்கு அல்லால் அரிது.**

---

போரில் அழிவு வந்தாலும், வலிமை குன்றினாலும், இடையூறுகளுக்கு அஞ்சாத நெஞ்சுறுதி தொன்று தொட்டு வந்த படைவீரர்களுக்கன்றி மற்றவர்களுக்கு இல்லை.

## பாம்பின் மூச்சு

அன்று காலை மங்களபுரிகளை கட்டியிருந்தது. போர்க்கால ஒத்திகை பார்க்கப்படும் என்று முதல் நாள் நாடு முழுவதும் முரசறிவித்தமையால் மக்கள் மகிழ்வுடன் வீதிகளில் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.

நாகராஜன் ஒத்திகைக்குத் தயாராக நின்ற படை வீரர்களின் மத்தியில் உரையாற்றினான்; ''என் அன்பான படை வீரர்களே, நீங்கள் எந்த

வேளையிலும் தாய் நாட்டிற்காக உடலையும் உயிரையும் அர்ப்பணிக்கச் சித்தமாக இருத்தல் வேண்டும். மக்கள் மகிழ்வுடன் வாழ வேண்டுமானால் அவர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். முன்னைய மன்னனது காலத்தில் மக்கள் பெருந்துன்பப்பட்டனர். ஒருவேளை உணவுக்காகக் கஷ்டப்பட்டனர். அவர்கள் இடம்பெயர்ந்து தாய் நாட்டை விட்டு வெளியேறி அயல்நாடுகளுக்குச் சென்று அடிமைகளாக வாழ்ந்தனர். அந்த நேரம் மக்கள் பட்ட துன்பங்களை வார்த்தைகளால் கூற முடியாது. நோயும் பசியும் மக்களை கொடூரமாக வாட்டியது. மக்கள் படும் துன்பங்களைச் சகிக்க முடியாத மன்னர் புரட்சி மூலம் நாட்டைக் கைப்பற்றி நீதி வழுவாது ஆண்டு வருகிறார். இன்று மக்கள் சகல வசதிகளோடும், உரிமைகளோடும் என்றுமில்லாது இன்பமாக வாழ்ந்கின்றனர். படை வீரர்களும் அப்படியே வாழ்கிறார்கள். அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக எமது துயரங்களைப் போக்கியமைக்காகவும், அரசர் திருமணஞ் செய்தமையைக் கொண்டாடுவதற்காகவும் வதற்காகவும் முப்படைகளும் பெரும் ஏற்பாட்டில் அரசருக்கும் அரசிக்கும் மாபெரும் அணிவகுப்பு மரியாதை செய்கிறது. இதை நாம் போர் ஒத்திகையாகக் கொண்டாடுகிறோம். பல ஆண்டுகளக்குப் பின்பு இவ்ஒத்திகை நடத்தப்படுகிறது. எமது அரசர் மாவீரர். படை வீரர்கள் நாட்டுப் பற்றுமிக்கவர்கள். எதிரிகளின் படை கடல் போல வந்தாலும் அதைக் கண்டு கலங்காத வீரர்கள் தாம் நாம். எதிரிகளை நாம் எலிகளாகவே கருதுகிறோம். எலிகள் பெரும் அளவில் கடல் போல ஒலித்தாலும் நாக பாம்பாகிய எமக்கு எதுவும் ஆகாது. நாகம் மூச்சு விட்ட அளவிலேயே எலிகள் யாவும் அழிந்து விடும்.

நாம் யாருக்கும் அஞ்சமாட்மோட்டோம்'' என்று உணர்ச்சி வசப்பட்டான் நாகராஜன்.

''மன்னர் வாழ்க. எம்முயிரைக் கொடுத்துத் தாய்நாட்டைக் காப்போம்'' வீரர்கள் கோஷமெழுப்பினர்.

மக்கள் வானதிர ஆர்ப்பரித்தனர். சங்கு முழங்கியது; பேரிகைகள் முழங்கின. நாகராஜன் குதிரையில் முன்னே செல்ல, அவனைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான குதிரைகள் புழுதியைக் கிழப்பிக் கொண்டு புறப்பட்டன. நகர் எங்கும் கிழம்பிய புழுதி சூரியனைச் சில கணங்கள் மறைத்தது.

முப்படைகளும் முன்னே செல்ல ஏமநாதனும் காயத்திரியும் பயணித்த குதிரை வண்டி பின்னே சென்றது. மக்கள் மன்னனையும் அரசியையும் கண்டு மகிழ்ந்து கோசமெழுப்பியவாறு பூமழை பொழிந்தனர்.

விஷ்வப் பிரமனும் பட்டத்தரசியும் அவர்களின் பின்னால் இன்னொரு குதிரை வண்டியில் சென்றனர்.

படை அணிவகுப்பைக் கண்டு விஷ்வப் பிரமன் திகைத்துப் போனார். தனது நாட்டுப் படையினரின் அணிவகுப்பை விடப் பலமடங்கு சிறப்பாகவிருந்த அவ் அணிவகுப்பைப் பார்க்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது; ''இனி எனது நாட்டை எந்த எதிரியும் கைப்பற்ற நினைக்க மாட்டான்'' என்பதை நினைக்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஏமநாதன், காயத்திரி மீது

அளவுக்கதிகமான அன்பு வைத்திருக்கிறானென அவனின் முகத்திலிருந்து தெரிந்து கொண்டார் விஷ்வப்பிரமன். ‘‘காயத்திரி கொடுத்து வைத்தவள்’’ என்று அவரது மனம் மகிழ்ந்தது.

பகல் பன்னிரண்டு மணி வரை படைகளின் அணிவகுப்பு நடைபெற்றது. அதன் பின் அரசனும் தளபதிகளும் முதலமைச்சரும் பிரதானிகளும் அரசசபையில் கூடினர். ஏமநாதனின் முகத்தில் அளவுக்கதிகமான மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது; ‘‘நான் எமது நாட்டின் தளபதிகளை மிக்க மகிழ்வுடன் பாராட்டுகின்றேன். படைகள் மிகவும் திறமையாகப் பயிற்சி பெற்றிருக்கின்றன. தளபதிகள் நாட்டுப் பற்றுடனும் மிகுந்த விசுவாசத்துடனும் வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். முப்படை வீரகளும் தம்மை நாட்டிற்காக முழுமையாக அர்ப்பணித்துப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். தளபதி கூறியது போல எமது வீரர்கள் நாக பாம்மைப் போன்றவர்கள். ஆயிரமாயிரம் படை வீரர்களின் மூச்சுக் காற்றுப்பட்டாலே எதிரிகள் அழிந்து போவார்கள்’’ என்றான் ஏமநாதன் சபையோர் கரகோஷம் செய்தனர்

**763. ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை?**
**நாகம் உயிர்பக் கெடும்.**

எலியாகிய பகை திரண்டு கடல் போல ஒலித்தாலும் நாகத்திற்கு என்ன தீங்கு ஏற்படும்.? நாகம் மூச்சுவிட்ட அளவில் அவை கெட்டு அழியும்.

## பெருமையான படை

“இவ்அணி வகுப்பை முன் நின்று நடத்தியமுப்படைத் தளபதிகளையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். நான் திருமணமானதும் அயல்நாடுகள் சில எம்மீது போர் தொடுக்கும் எண்ணங் கொண்டிருந்தன. அதை அறிந்த நான் எமது திருமண நிகழ்வுகளையெல்லாம் மறந்து விட்டு போருக்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்தேன். பட்டத்தரசியோடு ஓரிருவார்த்தைகள் கூட இன்பமாகப் பேசக்கூட என்னால் முடியவில்லை. இதைத் தளபதிகள் நன்றாக உணர்ந்திருந்தனர். அதனால் தான் இவ் ஏற்பாடுகளைச் செய்தனர். படையணி வகுப்பென்ற பெயரில் ஒரு யுத்தத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து காடடினர். அடுத்து நாம் பகைவரை நோக்கி நகர வேண்டும், இல்லாவிட்டால் பகைவர் எம்மை நாடி வரல் வேண்டும். நாம் ஒரு போதும் தேவையற்ற போரில் ஈடுபட மாட்டோம். ஆனால் பகைவர்கள் எம்மை நாடி வந்தால் என்ன செய்வோம் என்பதை எமது படை வீரர்கள் செய்து காட்டினார்கள். அத்துடன் இது “அரசருடைய திருமண விழாவுக்கான சிறப்புப்படையணிவகுப்பு” என்று தலைமைத் தளபதி நாகராஜன் காலையில் எனக்கு வாழ்த்துக் கூறி விட்டுச் சொன்னார். மக்கள் எல்லோரும் ஒரு மனதுடன் போர்ப்பயிற்சி பெற முன் வந்தனர். இருந்த போதும் வேறு அத்தியாவசிய தொழில்கள் அவர்களுக்கு இருந்தமையால் அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதில் சில பிரச்சினைகள் இருந்தன. பயிற்சி பெற்ற போர் வீரர்களை நாம் அத்தொழில்களுக்குப்

படிப்படியாக அனுப்பி விட்டுப் பயிற்சி பெற விரும்பும் சகல இளைஞர்களக்கும் பயிற்சி அளிப்போம். போரில் பகைவரால் அழிக்க முடியாததாகவும், பகைவரின் எந்தச் சூழ்ச்சிகளுக்கும் பலியாகாததாகவும் வெற்றியைத் தொடர்ந்து பெற்றுவரும் பெருமையுடையதாகவும் விளங்குவதே படை ஆகும். எமது படை அப்படியானது என்பதை இந்த அணிவகுப்புக் காட்டுகின்றது. அதனால் நான் மிகவும் மகிழ்கிறேன்'' என்றான் ஏமநாதன்.

''மன்னருக்குத் திருமணமான சிலநாட்களிலேயே போருக்கான அறிகுறிகள் தென்பட்டன. அதனால் மன்னர் தான் உயிருக்குயிராக விரும்பிய பட்டத்தரசியைத் தனிமையில் வாட விட்டுவிட்டுப் போரில் முனைப்பாக இருந்தார். நாம் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. ''தனக்கு நாகநாட்டு இளவரசி கிடைப்பாளோ...? கிடைக்காவிட்டால் உயிரையே விட்டு விடுவேன்?'' என்று எமக்குக் கூறாவிட்டாலும் செயலால் உணர்த்திய மன்னர், தனக்கு அருகில் இருந்த பட்டத்தரசியாருடன் கதைக்கக்கூட விரும்பாது போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். தனது சொந்த இன்பதுன்பங்களை விட நாட்டு மக்களின் மீது அக்கறையும் பரிவும் கொண்டமையால் தான் இன்று நாமும் மக்களும் இன்ப சாகரத்தில் மிதக்கிறோம். இதற்காக மன்னர் தனது இன்பங்களையெல்லாம் ஒதுக்கி விட்டார். அவர் இனியாவது இன்பமாகச் சில நாட்களுக்கு நாட்டை மறந்து மக்களை மறந்து தனது அன்புக்குரிய காதலியுடன் அருகிலிருந்து

அவரின் குறைகளைப் போக்க வேண்டும்'' என்றார் முதலமைச்சர் வெங்கடேசர்.

''நான் பெருமைப்படுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்பத்தில் நான் எனது மகளை ஏமநாத மன்னருக்குத் திருமணஞ் செய்து கொடுக்க விரும்பவில்லை. பெரும் வணிகனான ஏமநாதனுக்கு அரசாட்சியைப் பற்றியும் போர் முறைகளைப் பற்றியும் எதுவும் தெரியாது. மக்களின் துணையுடன் அரசைக் கைப்பற்றினாலும் காலப் போக்கில் அயல் நாட்டரசர்கள் மங்களபுரியைக் கைப்பற்றி விடுவார்கள் என்ற அச்சம் எனது மனதில் இருந்தது. ஆனால் காயத்திரி ஏமநாதனைத் தவிர வேறு யாரையும் திருமணஞ் செய்ய மறுத்து விட்டாள். அதனால் மனமின்றித்தான் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தேன். மகதநாட்டு இளவரசன் வீரமார்த்தாண்டனும் செல்வபுரி அரசன் நடனசேகரனும் சேர்ந்து நாகபுரிமீது படையெடுப்பார்கள் என்ற பயம் எனது மனதில் இருந்தது. ஆனால் இன்றைய போர் ஒத்திகையைப் பார்த்த பின்பு அவ்வெண்ணம் மறைந்து விட்டது. போரில் பகைவரால் அழிக்க முடியாத படை இது. அத்துடன் பகைவர்களின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாத பெரும்படை இது என்பதை ஒத்திகையின் மூலம் தெரிந்து கொண்டேன். உண்மையில் அரசனான நானே வியந்து போற்றுமளவிற்கு மிக மிக வீரமான போர் வீரர்களைக் கொண்ட படைகள் உங்கள் நாட்டிலுள்ளன. இனி எனது மாப்பிள்ளை கவலைப்படாது தனது காதல் மனைவியின்

விருப்பங்களைப் பூர்த்தி செய்யலாம்” என்றார் நாகபுரி மன்னர் விஷ்வப்பிரமன்.

---

**764. அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த வன்க ணதுவே படை.**

---

போர்களத்தில் அழிவு இல்லாததாய், பகைவர்களின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாததாய், தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

## ஆற்றல் மிகுந்த படை

மக்கள் வானதிர மகிழ்ச்சியாரவாரஞ் செய்தனர். அவ்வாரவாரம் அடங்கப் பலமணி நேரம் எடுத்தது. ஒத்திகையில் ஈடுபட்டிருந்த படைகள் கலைந்து தத்தமது இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தன. அரண்மனையில் உள்ளோருக்குப் பணிப்பெண்கள் சுவையான சிற்றுண்டிகளை வழங்கிக் கொண்டிருந்தனர். அன்று மக்களின் வீடுகளில் சமையல் நடைபெறவில்லை. அரசன் கோயில்களிலும் மடங்களிலும் சமையலாளர்களை அமர்த்தி மக்களுக்குச் சுவையான சாப்பாடுகளை சமைப்பித்திருந்தான்.அப்படியிருந்த போதும் மக்கள் மதிய வேளை கடந்தும் உணவை மறந்து அரண்மனை வாசலில் கூடி நின்று ஆடிப்பாடினர்.

“எமது மன்னர் காருண்ணியம் மிக்கவர்; நாட்டு மக்களின் மீது எல்லையில்லாத பற்றுக் கொண்டவர். அதனால் தான் மக்கள் துன்பப்படும்போது அவர்களின் துன்பத்தைப்

போக்கினார். அத்துடன் போர்வரும் அறிகுறிகள் தென்பட்ட போது மக்களின் நலன்கருதி அவர் தனது இன்ப வாழ்வைத் துறந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.''

''எமது நாட்டில் சிறந்த படைகள் உள்ளன. எந்தப் பகைவன் எம்மைத் தாக்க வந்தாலும் அவனை வெற்றி கொள்ளும் திறன் எமது படைகளிடம் இருக்கிறது. எமனே சினங்கொண்டு எமது, நாட்டைத் தாக் கவந்தாலும் ஒன்று திரண்டு தாக்கும் வல்லமை கொண்டது தான் சிறந்த படையென்று அறிஞர்கள் கூறுவார்கள். அப்படியானது தான் எமது படை. நாம் எமனுக்கும் அஞ்சமாட்டோம்; அவனை மதிக்கவும் மாட்டோம். குறுகிய காலத்தில் நாம் ஒரு பெரும் போருக்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. அதற்காக நாம் கலங்கவில்லை. துணிவுடன் பகைவனை எதிர்க்கத் தீர்மானித்தோம். பெரிய நாடுகள் சில ஒன்று சேர்ந்து தாக்குதல் நடவடிக்கையில் ஈடபடலாம் என்ற தகவலை அறிந்த பின்பு இந்த நாட்டில் உள்ள எவரும் ஓய்ந்திருக்க வில்லை. அதனால் இன்றிலிருந்து சிறிது ஓய்வெடுங்கள். மன்னர் முழுமையாக ஓய்வெடுத்துச் சில நாட்கள் அந்தப்புரத்திலேயே இருக்கட்டும்...'' என்றார் முதலமைச்சர். சபையோர் பெரிதாகச் சிரித்தனர். மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர்.

ஏமநாதன் பட்டத்தரசியைப் பார்த்துப் புன்னகைத்தான். அவள் நாணமுற்றுத் தலைகவிழ்ந்தாள். ஒவ்வொருவரும் தன்னைப்

பற்றிக் குறிப்பிடும் போது அவள் அளவுக்கதிகமாக நாணமுற்றாள்.

“ஒவ்வொருவரும் அரசரும் அரசியும் இன்பமனுபவிக்க வேண்டுமென்று கூறிக் கொண்டே இருக்கிறோமே தவிர அதற்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் நான் எனது பேச்சை முடித்துக் கொள்வதோடு தாமதியாது சபையைக் கலைக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்” என்றான் நாகராஜன்.

சபைபெரும் ஆரவாரத்துடன் கலைந்தது. ஏமநாதனும் காயத்திரியும் அந்தபுரத்திற்கு வந்தனர். அழகாக அலங்கரிக்கப்பட்ட மிகவும் மெதுமையான இலவம் பஞ்சால் செய்யப்பட்ட பஞ்சனையில் அமர்ந்த ஏமநாதன், அருகில் நாணமுற்று தலைகவிழ்ந்து நின்ற காயத்திரியின் கையைப் பிடித்து இழுத்து தனக்கருகில் அமர்த்தினான்.

காயத்திரி தனது கீழுதட்டைப் பற்களால் கடித்தபடி தலைகுனிந்திருந்தாள்; “எல்லோரும் உம்மீதுதான் அக்கறைப்பட்டனர்” சிரித்தான் மன்னன்.

“இனிநான் உங்களை என்னை விட்டுப் பிரிந்து செல்ல விட மாட்டேன். படைத்தளபதிகளும் முதலமைச்சரும் உங்களை அரண்மனைப்பக்கம் வரவேண்டாமென்று கூறிவிட்டனர்” என்றாள் காயத்திரி.

“எனக்கு உம்மை விட்டுப் பிரிவதற்கு விருப்பமா…? போர்வரும் அறிகுறிகள்

தென்பட்டதால் பிரிந்து சென்றேன். பிரிந்து சென்ற போதும் உம்மைப் பற்றிய இனிய உணர்வுகள் எனது மனத்திலும், உமது அழகான கவர்ச்சி மிக்க அங்கங்களின் பொலிவு கண்களுக்குள்ளும் இருந்தும் சித்திரவதை செய்தும், மகிழ்ச்சியிலாழ்த்தியும் என்னை உமது நினைவிலேயே வைத்திருந்தன. ஒப்பற்ற உமது அழகும், பூரணத்துவம் பெற்ற உமது பெண்மையும் என்னை எப்படி உம்மை விட்டுப் பிரியச் செய்யும். பார்க்கப் பார்க்கப் புதுமையாகத் தோன்றும் உமது பொலிவை விட்டு இனிப் பிரியமாட்டேன்'' என்றான் ஏமநாதன்.

மெல்லச் சிரித்தவாறு ஏமநாதனின் தோளில் சாய்ந்தாள் காயத்திரி. அனிச்சம் பூக்களால் செய்த மலர்மாலையொன்று தனது தோளில் படர்ந்திருப்பதைப் போன்ற மென்மையான இனிய உணர்வு அவனது உடலெங்கும் மெல்ல வியாபித்துப் பரவியது; ``இனிப் போர் வந்தாலும் பிரியமாட்டேன். ஏனென்றால் எமனே சினம் கொண்டு எதிர்த்து வந்தாலும் எமது படை அவனைத் தோற்கடிக்கும்'' குசுகுசுத்தான் ஏமநாதன்.

---

**765. கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.**

---

எமனே சினங் கொண்டு எதிர்த்தாலும், ஒன்றாகத் திரண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதே படை ஆகும்.

## நான்கு பண்புகள்

நாகபுரி மன்னன் விஷ்வப்பிரமனை மங்களபுரியின் படைத்தளங்களைப் பார்வையிட வருமாறு அழைத்தான் நாகராஜன்.

“அரசே, தாங்கள் எமது நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தியமையால் தான் தங்களின் குதிரைப் படைத்தளபதி அருண்பாண்டியன் மகதநாட்டு இளவரசனுடன் சேர்ந்து எமது நாட்டைக் கைப்பற்ற நினைத்தான். எமது படை சிறந்த படையாகும். வீரம், மானம், பெருமைக்குரிய செயல்களைச் செய்தல் அரசருக்கு நம்பிக்கை உடையவராக இருத்தல் ஆகிய நான்கு பண்புகளும் எம்மிடமுள்ளன. தாங்கள் அனுபவம் மிக்கவர். எமது அரசருக்குப் பெண் கொடுத்தவர் பலபோரில் கலந்து வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றவர். அதனால் தாங்கள் எமது படைத்தளங்களைப் பார்வையிடல் வேண்டும். அதை நாம் நீங்கள் எமக்களிக்கும் கௌரவமாக ஏற்றுக் கொள்வோம்” என்றான் நாகராஜன்.

விஷ்வப்பிரமன் புன்னகைத்தார். பின் எழுந்து அவனுடன் சென்றார்.

லயன்களில் குதிரைகள் திமிறியபடி நின்றன. இருவரையும் கண்டதும் அவை பலமாக மூசின. ஒவ்வொரு குதிரையைப் பற்றியும் நாகராஜன் விஷ்வப் பிரமனுக்குச் சொல்லிக் கொண்டு வந்தான். ஒரு கரிய குதிரையின் அருகே வந்து நின்ற நாகராஜன் சொன்னான்; “இது அரேபிய நாட்டு

உயர் ஜாதிக் குதிரை. அரசன் பவனி வருவதற்காக வாங்கப்பட்டது'' என்றான்.

விஷ்வப்பிரமன் அதன் உறுதியான நான்கு கால்களையும் பார்த்தார். மிகமிக உறுதியான பலம்பொருந்திய கால்கள். முன் இடது காலைத் தூக்கிப் பார்த்தார் விஷ்வப்பிரமன். குதிரை அவர் பார்ப்பதற்கு உதவியாக தனது இடது காலைத் தூக்கியது. அதைத் தடவிப் பார்த்தார். பின் மறுபக்கம் வந்தார். குதிரை அவர் குனியுமுன் தனது வலது காலைத் தூக்கியது. அதைப் பார்த்து முறுலித்த விஷ்வப் பிரமன் அதன் முதுகில் தடவினார். குதிரை நெஞ்சை நிமிர்த்தி வாலைத் தூக்கிக் கனைத்தது.

திரும்பவும் அதன் முதுகைத் தடவிய விஷ்வப் பிரமன். ''நல்ல குதிரை. போர்க் களத்தில் எதிரிகளைப் பந்தாடும்'' என்றார்.

அவரது வார்த்தைகள் நாகராஜனது மனதைக் குளிரப்பண்ணின. அந்தக் குதிரையைப் பராமரிக்கும் சுந்தரன் அங்கே வந்து நாகராஜனையும் விஷ்வப்பிரமனையும் வணங்கினான்.

''அரசே இவனது பெயர் சுந்தரன். பரம்பரை பரம்பரையாக இவனது குடும்பம் தான் அரசரது குதிரைகளைப் பராமரிப்பது. இவன்தான் அரசரும் மகாராணியும் செல்லும் தேரைச் செலுத்துபவன்.'' என்றான் நாகராஜன்.

விஷ்வப் பிரமன் சுந்ரனை நிமிர்ந்து பார்த்தார். அவனது தோள்களும் மார்பும் மிகவும்

திடமாக இருந்தன. கண்களில் உறுதி பிரகாசித்தது. ‘‘சுத்த வீரன்’’ என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன.

‘‘வணக்கம் அரசே, நாம் வீரமுள்ளவர்கள்; மானமுள்ளவர்கள்; பெருமைக்குரிய செயல்களைச் செய்பவர்கள். அத்துடன் தாய் நாட்டையும் அரசனையும் உயிராக நினைப்பவர்கள். எமது படையை யாராலும் வெல்ல முடியாது’’ என்றான் சுந்தரன். அவனது கண்கள் பிரகாசித்தன. வார்த்தைகளில் உறுதி பிரதிபலித்தது.

விஷ்வப்பிரமன் அவனது தோள்களில் தனது கையால் தட்டினார். ‘‘சுத்தவீரனுக்குரிய பண்புகளைச் சொன்னாய். உங்களைப் போன்ற சில வீரர்கள் இருந்தாலே இந்த நாட்டை எவராலும் தோற்கடிக்க முடியாது. உன்னை நான் பாராட்டுகிறேன்’’

நாகராஜனும் விஷ்வப்பிரமனும் அப்பால்சென்றனர். நீர் நிரம்பிய நீர்நிலையொன்றில் யானைப்பாகர்கள் யானைகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான யானைகள் நீர் நிலையைச் சுற்றியுள்ள மர நிழலில் படுத்திருந்தன. சில யானைகள் மரங்களின் கிளைகளை முறித்துத் தின்று கொண்டிருந்தன.

வளர்ப்பு யானைகள் என்று சொல்ல முடியாதளவிற்கு அவை மிகுந்த சுறுசுறுப்புடனும் திடகாததிரத்துடனும் நின்றன. விஷ்வப்பிரமன்னையும் நாகராஜனையும் கண்ட பாகர்கள் யானைகளை எழுந்து மரியாதை

செய்யுமாறு பணிக்க யானைகள் எல்லாம் எழுந்து தும்பிக்கைகளை உயர்த்திப் பிளிறின.

தமது முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கித் தும்பிக்கையை அசைத்தன.

---

**766. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**எனநான்கே ஏமம் படைக்கு.**

---

வீரம், மானம், சிறந்தவழியில் நடக்கும் பண்பு, அரசனுக்கு நம்பிக்கையுடையவராய் இருத்தல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவை ஆகும்.

## தூசிப்படை

விஷ்வப்பிரமன் முழு மனநிறைவுடன் புன்னகைத்தார். ஓர் அரசனுக்கு நூற்றுக்கு மேற்பட்ட யானைகள் இருப்பது மிகுந்த பலத்தைக் கொடுக்கும். ஆயிரக்கணக்கான குதிரைகள் உங்களிடம் நிற்கின்றன. பேரரசன் ஒருவனிடம் உள்ளதைப் போன்ற சிறந்த படைகள் உங்களிடமுள்ளன.'' என்றார் விஷ்வப்பிரமன்.

``எமது அரசர் பெரும் வணிகர். அதனால் அவரது கப்பல்கள் எல்லா நாடுகளுக்குஞ் செல்லும். முன்பு அவர் வணிகராக இருந்த போது ஆயிரம் குதிரைகளை வாங்கி வந்து பருத்தி மலை அரசருக்குக் கொடுத்தவர். அதில் இருநூறு குதிரைகளை நன்கொடையாகக் கொடுத்தவர். நாட்டை அவர் கைப்பற்றியதும் அவரின்

கப்பல்களில் ஆயுதங்களும் குதிரைகளுமே முதலில் ஏற்றப்பட்டன. தற்பொழுது அரேபியாவிலிருந்து மன்னரின் கப்பல்களில் ஐந்நூறு குதிரைகள் வந்து கொண்டிருக்கின்றன. இரண்டொரு தினங்களில் அவை எமது நாட்டின் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்து விடும்.'' என்றான் நாகராஜன்.

விஷ்வப்பிரமன் புன்னகைத்தார்; ''மன்னர், பெரும் வணிகராக இருந்தமையால் எல்லா நாடுகளுக்கும் சென்று வந்திருப்பார். எந்தெந்த நாடுகளில் எந்தெந்தப் பொருட்கள், ஆயுதங்கள், யானைகள், குதிரைகள் இருக்கும் மென்று அவருக்குத் தெரியும். மன்னர் வணிகராக இருந்தது உங்களுக்கு வாய்ப்பானது.''

''ஆம் அரசே! அது உங்களுக்கும் வாய்ப்பானதுதானே'' என்றான் நாகராஜன்.

''உண்மைதான். இனி எனது நாட்டுடன் பகைமை பாராட்ட யாரும் எண்ண மாட்டார்கள். அருண்பாண்டியன் எனக்கு நம்பிக்கை உள்ளவனாக நடித்துப் பல மோசடி களைச் செய்து விட்டான். நான் திருமணம் முடிந்த பின்பு விசாரணை செய்வோம் என நினைத்தேன். அவன் அதற்கு முன்பே சுரங்கம் அமைந்திருந்தமையால் தப்பிச் சென்று விட்டான். அவன் தப்பிச் சென்ற பின் வீரமார்த்தாண்டனுடனும் நடனசேகரனுடனும் சேர்ந்து எமது நாட்டின் மீது படையெடுப்பானென அஞ்சினேன். ஆனால் அன்று நடைபெற்ற அணிவகுப்பைக் கண்ட பின் வீரமார்த்தாண்டனால் மட்டுமல்ல வேறு எவராலும் எமது நாட்டைக்

கைப்பற்ற முடியாது என்று திடமாக நம்புகிறேன்.'' என்றார் விஷ்வப்பிரமன்.

அவர் கூறுவதைக் கேட்ட நாகராஜனுக்குச் சந்தோசமாக இருந்தது; ''பகைவர்கள் எம்மைத் தடுத்து நிறுத்துவதற்காக தம்முன்னனிப் படையாகத் தூசிப்படையை அனுப்புவார்கள். அத்தூசிப்படையைத் தாக்கி அழித்து முன்னேறிச் செல்லும் வலிமை உடையதே சிறந்த படையாகும். வல்லமை பொருந்திய எந்த எதிரியின் தூசிப்படையையும் உங்கள் படை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது'' என்று விஷ்வப்பிரமன் கூறிக் கொண்டிருந்தார். மகிழ்ச்சியின் உச்சியில் இருந்த நாகராஜனுக்கு அவர் சொன்னதெவையும் கேட்கவில்லை.

''பகைவர்களின் எழுச்சியைத் தடுத்து நிறுத்தித் திசை திருப்புவது தூசிப்படையின் செயலாகும். அதுதான் பகைவரின் முன்னணிப் படையாகும். அதைத்தாக்கியளித்து விட்டால் பகைவன் பயந்து போவான். தாம் திட்டமிட்டபடி முன்னேற முடியாது என்ற எண்ணம் பகைவனின் மனதில் எழுந்து விடும். இவ் எண்ணத்தை, பகைவனிடத்தில் உண்டாக்கி விட்டால், அவனை வெல்வது மிகவும் இலகுவானதாகும். தூசிப்படையை அழித்தால் அது சிறந்த படை என்று பகைவனுக்குத் தெரியும். அதனால் அவன் தனது யுத்த தந்திரத்தை மாற்ற முயல்வான். அதற்கு இடங்கொடாது முன்னேற வேண்டும்'' விஷ்வப்பிரமர் மகிழ்வுடன் சொல்லிக் கொண்டு வந்தார்.

தூசிப்படை மிக்க பலமுடையதாக இருத்தல் வேண்டும் என்பது நாகராஜனுக்குத் தெரியும். இருந்த போதும் பலகளம் கண்ட நாகபுரி அரசரான விஷ்வப் பிரமன் கூறுவதை அவதானத்துடன் கேட்டுக் கொண்டு வந்தான்.

“உங்கள் நாட்டுப் படைகள் எந்த எதிரியினது தூசிப்படையையும் மிக எளிதாக வென்று விடும். நான் உன்னைப் பாராட்டுகிறேன். தலைமைத் தளபதியாக இருந்து நீ தன்னலமற்ற சேவையாற்றியதால் தான் மங்களபுரியின் படைகள் சகலவல்லமைகளும் பெற்ற சிறந்த படைகளாக இருக்கின்றன. மன்னனும் மக்களும் கொடுத்து வைத்தவர்கள்” என்றார் விஷ்வப்பிரமன்.

**767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.**

தம் மேல் எதிர்த்து வந்த பகைவரின் சேனையைத் தாக்கி, வெல்லும் தன்மையை அறிந்து, பகைவருடைய தூசிப் படையை எதிர்த்துச் செல்லும் வலிமையுடையதே படையாகும்.

## அணிவகுப்பின் சிறப்பு

“தங்களின் வார்த்தைகள் பலிக்க வேண்டும். எமது மன்னர் நாட்டிற்குத் தேவையான அத்தனை விஷயங்களையும் கற்றிருக்கிறார். இல்லாவிட்டால் கற்கிறார். வணிகரான மன்னருக்கு ஆட்சியைப் பற்றி எதுவும் தெரியாது என்று நினைத்துத்தான் வீரமார்த்தாண்டனும் அருண்பாண்டியனும்

நடனசேகரனும் படையெடுக்கலாமென்று நினைத்தார்கள். அதனால் தான் நடனசேகரன் தனது உறவினனான பருத்திமலை அரசனிடம் உதவி கேட்டுச் சென்றான். பருத்திமலை அரசன் எமது மன்னரின் நண்பன். அவர் வணிகராக இருந்த காலத்தில் பருத்திமலை அரசனுக்கு எண்ணற்ற உதவிகளைச் செய்தவர். மகதநாட்டு பருத்திமலையின் மீது போர் தொடுத்த போது பருத்திமலை வீரர்களை கடல் மார்க்கமாகக் கொண்டு சென்று பருத்திமலையில் வடக்குப் பக்க எல்லையில் இறக்கினார். அந்தப் பகுதியில் மகத நாட்டுப் படைகள் இருக்கவில்லை. அதனால் மகதநாட்டின் தெற்குப் புறத்திலிருந்து படைகளை மகதநாட்டு மன்னன் வரவழைத்தான். படைகள் இரண்டாகத் திட்டமின்றிப் பிரிக்கப்பட்டதால் மகத நாட்டுப் படைகள் ஆரவாரமின்றிப் பின்வாங்கின. இவ்வுதவியைப் பருத்திமலை மன்னர் கடைசிவரையும் மறக்க மாட்டார். அதனால் எமது நாட்டிற்கு ஏதாவது ஆபத்து வந்தால் அவர் கட்டாயம் உதவுவார். அத்துடன் சிவபுரி மன்னன் நடனசேகரனுக்கு இவற்றை விரிவாகப் பருத்திமலை மன்னர் கூறியமையால் தான் இரண்டு நாடுகளும் சேர்ந்து எமது நாட்டின் மீது படையெடுக்கும் திட்டத்தைக் கைவிட்டன'' என்றான் நாகராஜன்.

``அப்படியா..? சிவபுரி அரசனான நடனசேகரன் பருத்திமலைக்குச் சென்றுள்ளான் என்பதை அறிந்ததும் எனது மனம் சஞ்சலப்பட்டது. பருத்திமலை சிறந்தபடைகளை உடைய நாடு. அவன் உதவினால் பெரும் போர் மூளும் என்று நம்பினேன். ஆனால் இன்றுவரை பருத்திமலை அரசன் ஏன் நடனசேகரனுக்கு உதவாமல் விட்டான் என்று யோசித்து வந்தேன். இன்று வரை எனக்கு

அது புரியவில்லை. இப்பொழுதுதான் புரிந்தது.'' என்றார் விஷ்வப்பிரமன்.

''எமது மன்னர் பெரும் வணிகராக இருந்தமையால் பலநாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். அவர் பல நாடுகளின் அசரர்களுக்குப் பெறுமதி வாய்ந்த இரததினங்களையும் மாணிக்கங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளார். தொண்டை நாட்டுப் பேரரசருக்கு எமது மன்னர் கிடைத்தற்கரிய மாணிக்கக்கல் ஒன்றைப் பரிசாக அளித்தவர். அதனால் தொண்டை நாட்டு மன்னர் எமது மன்னருக்கு உதவுவதாகக் கூறியுள்ளார்'' என்றான் நாகராஜன்.

''மகத நாட்டு மன்னன், ஏமநாதனுக்கு நான் பெண் கொடுக்கச் சம்மதித்ததும் தொண்டை நாட்டிற்கு நட்புறவிலான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அது நட்புறவான பயணமல்ல. வேறு நோக்கங்களைக் கொண்ட பயணம் என்று நான் அறிந்து கலங்கினேன். நல்ல வேளை பிரச்சினைகள் எதுவும் வரவில்லை…'' பெருமூச்சு விட்டார் விஷ்வப்பிரமன்.

''இப்போது எமது நாட்டின் படைகள் உரிய பயிற்சிகளைப் பெற்று விட்டன. எமக்கு நட்பு நாடுகள் பல உள்ளன. இனி நாம் அஞ்ச வேண்டியதில்லை'' என்றான் நகராஜன்.

விஷ்வப்பிரமன் சிரித்தார். பின் சொன்னார்; ''நாகராஜா, போர் செய்யும் வீரமும், பகைவர்களைத் தடுக்கும் ஆற்றலும் படைகளுக்கு இல்லாவிட்டாலும், படையானது தனது அணிவகுப்பு

அழகால் பெருமையடையும். அன்றைய உங்கள் படைகளின் அணிவகுப்பு மிகவும் பிரமாதம். தூசிப்படைகளின் அணிவகுப்பு போர்ப் பிரகடனம் போலவும், போர் நடைபெறுவதைப் போலவும் இருந்தது. குதிரைப்படை வீரர்கள் அணிவகுத்துச் சென்ற முறை புதுமையானது. இதுவரை நான் போரில் காணாதது. வியூகம் அமைத்து எதிரிகளை அவ்வியூகத்திலிருந்து வெளியே செல்லமுடியாது அவர்களைக் கொல்வது போல அணி வகுத்து நின்ற முறை பிரமாதம்.'' என்றார் விஷ்வப்பிரமன்.

''எமது மன்னர் படைத்தளபதிகளின் யுத்த முறைகளைப் பார்த்து அபிப்பிராயம் சொல்வார். அது சரியானால் ஏற்கச் சொல்வார். சேனாதிபதிதான் குதிரைப்படை வியூகத்தை அமைத்தது. அதில் மன்னர் தலையிடவில்லை. மன்னரின் இந்த வகையான செயல்கள் படைத்தளபதிகளுக்கு உற்சாகத்தை ஊட்டும். அதனால் தான் அப்படி வித்தியாசமான வியூகம் அமைக்க முடிந்தது'' என்றான் நாகராஜன்.

**768. அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை**
**படைத்தகையால் பாடு பெறும்.**

போர் செய்யத் தக்க வீரமும், பகைவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலும் இல்லையென்றாலும் படை தன்னுடைய அணி வகுப்பால் பெருமை பெறும்.

யானைப்படையைப் பார்த்துவிட்டு விஷ்வப்பிரமனும் நாகராஜனும் ஆயுதசாலைக்குச் சென்றனர். அங்கு பெரிய தொரு யுத்தம் செய்வதற்குத் தேவையான அத்தனை ஆயுதங்களும் தயாரான நிலையில் இருந்தன. ஆயுதங்களை எடுத்துப் பரீட்சித்துப் பார்த்தான் விஷ்வப்பிரமன். "மிகவும் நல்ல தரமான ஆயுதங்கள்" என்று அவரது வாய் முணுமுணுத்தது நாகராஜனுக்குக் கேட்டது. வருங்காலத்தில் எமக்குத் தேவையான அத்தனை ஆயுதங்களையும் நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்று எமது மன்னர் கூறுவார். இப்பொழுது வெளி நாடுகளில் இருந்து எமக்குத் தேவையா ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளோம்." என்றான் நாகராஜன்.

"மிகவும் தரமான ஆயுதங்கள். மன்னர் முன்பு வணிகராக இருந்தாரென்பதை நம்பமுடியவில்லை. அரச பரம்பரையில் பிறந்து அரச குருவிடம் பயிற்சி பெற்று, தரமான ஆயுதங்களை அறிந்து கொள்ளும் தன்மையுள்ள அரசனால் கூட இப்படியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முடியாது. அத்துடன் இவ்வளவு நுட்பமாகப் படைகளைப் பயிற்றுவிக்கவும் முடியாது" என்று ஆச்சரியப்பட்டார் விஷ்வப்பிரமன்.

"அரசசபையில் குரு ஒருவர் இருக்கிறார். அவரை யாரென்று எமக்குத் தெரியாது. அவர் அரசர் மீது அளவுக்கதிகமான அன்பு பூண்டவர். அதே போலக் குருவும் அரசர் மீது அன்பு கொண்டவர். அவருடைய ஏற்பாட்னடிபடிதான் யாவும்

நடைபெறுகின்றன. இப்பொழுது சிவன்கோயிலின் தெற்கு வாசற்கோபுரத்தை அரசகுருவே மேற்பார்வை செய்து கட்டுவிக்கிறார். மிகவும் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் அக்கோபுரத்தில் செய்யப்பட்டுள்ளன. அதே போல நான் வீரர்களுக்கு யுத்தப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும் போது குரு மௌனமாக வந்து நின்று பயிற்சிகளை அவதானிப்பார். பின் அதைப் பற்றிக் கூறுவார். உண்மையில் அவர் மகாஞானியென்று தான் குறிப்பிட வேண்டும்.'' என்றான் நாகராஜன்.

''நானும் அவரை அவதானித்தேன். அவரின் கண்களில் ஒரு ஞான ஒளிதென் படுகிறது. அவரைப் பற்றிய விபரங்கள் எதையும் அரசரிடமிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை. அவரைக் கேட்டால் சரியான பதில் சொல்கிறாரில்லை. அதனால் நான் கேட்கவில்லை. முதலமைச்சரைக் கேட்டேன். அவருக்கும் குருவைப்பற்றி எதுவும் தெரியாது. நான் தலைமைத் தளபதியான உன்னைக் கேட்கலாமென்று நினைத்தேன், நீயும் எதுவும் தெரியாதென்கிறாய்'' என்றார் விஷ்வப்பிரமன்.

''மன்னர் குருவைப் பற்றி ஏதுவும் சொல்வதில்லை. ஆனால் மன்னர் அவரை மிகவும் உயர்வாக மதிக்கிறார். அவர் குருவை மதிப்பதிலிருந்து, குருவின் உயர்வை எண்ணி அரண்மனையில் உள்ள அத்தனை பேரும் மதிக்கிறார்கள். தினமும் மன்னர் பலமணிநேரம் குருவுடன் கதைத்துக் கொண்டிருப்பார்'' என்றான் நாகராஜன்.

அவர்கள் கதைத்துக் கொண்டு உணவுக் களஞ்சியத்திற்கு வந்தனர். உணவுக் களஞ்சியத்தில் போதுமான அளவு தானியங்கள் இருந்தன.

அடிக்கடி ஒரு நாட்டின் அரசன் அயல் நாடுகள் மீது போர் தொடுப்பதால், அவனது படைகள் தேய்ந்து விடும். அதனால் ஓர் அரசன் மிக முக்கியமான வேளைகளில் மட்டும் தான் போர் தொடுத்தல் வேண்டும். அதுவும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் மட்டுமே போர் தொடுத்தல் வேண்டும். அடிக்கடி போர் தொடுத்துத் தோல்வியடையும் அரசனைப் படைகளும் மக்களும் வெறுப்பார்கள். ஒரு மன்னன் பல நாடுகளைப் பிடித்து அங்கிருந்து திறை பெறுவதிலும் பார்க்கத் தனது நாட்டை வளப்படுத்தல் நல்லது. அத்துடன் ஒரு நாட்டில் உணவு, உடை, போர்க்கருவிகள் என்பவற்றிக்கு எந்த வேளையிலும் தட்டுப்பாடேற்படக்கூடாது. மக்களும் படைவீரர்களும் நன்றாக உண்டு உடுத்துச் சந்தோஷமாக வாழ்தல் வேண்டும். போர் செய்து படைகள் அழிவதும், அரசன் மீது வெறுப்பும், உடை, உணவு, போர்க்கருவிகள், ஆகியவற்றிற்குப் பற்றாக்குறை இல்லாமல் இருப்பதும் தான் ஒரு நாட்டின் வெற்றிக்கு வழி வகுப்பவை. உங்கள் படை எந்த நாட்டுடன் போர் தொடுத்தாலும் வெல்லும்'' என்றார் விஷ்வப்பிரமன்.

நாகராஜன் மகிழ்வுடன் சிரித்தான். அவனது உணர்வுகள் சிலிர்த்தன; ''நீங்கள் அனுபவம் மிக்கவர். பல போர்க்களங்களைக் கண்டவர். அதனால் தான் எமது மன்னர் உங்களை அழைத்துச் சென்று சகல இடங்களையும் காட்டச்

சொன்னார். நீங்கள் திருப்திப்பட்டளவில் எமது படைகள் யாவும் சிறந்த நிலையில் உள்ளன என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றான் நாகராஜன்.

**769. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.**

போர் செய்வதால் அளவு சிறிதாகக் குறைதலும், அரசனிடம் நீங்காத வெறுப்பும், வறுமையும் இல்லாதிருக்குமானால் அத்தகைய படை வெற்றி பெறும்.

## பொருத்தமான தலைவன்.

``எனது மாப்பிள்ளையா என்னை அழைத்துச் சென்று படைத்தளங்களைக் காட்டச் சொன்னவர்.?'' ஆச்சரியத்துடன் கேட்டார் விஷ்வப்பிரமன்.

``எனது விருப்பப்படி நான் நடக்க முடியுமா....? நேற்று மாலை என்னை அழைத்து மன்னர் சொன்னார்; ``எனது மாமனார் அறிவு மிக்கவர். பல காலம் நாகபுரியை நல்ல முறையில் ஆண்டு வருகிறார். நான் வணிகன். மக்கள் படும் துயரத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் பருத்தி மலைக்குச் சென்றேன். பருத்திமலை அரசரின் தூண்டுதலால் தான் நாட்டைக் கைப்பற்றினேன். படைகளைப் பற்றியோ, போர் முறைகளைப் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. அதனால் எனது மாமனார் இங்கு தங்கியிருக்கும் போது எமது

படைத்தளங்களை அவருக்குக் காட்டி, தகுந்த ஆலோசனைகளைப் பெறுங்கள்'' என்று சொன்னார். அதன்படி தாங்கள் எமது படைத்தளங்கள், உணவுக் களஞ்சியம், ஆயுதசாலை யாவற்றையும் பார்த்து அதன் சிறப்புக்களையும் குறைபாடுகளையும் தெரிவித்தீர்கள். இன்னும் எமக்கு ஏதாவது தெரிய வேண்டுமானால் சொல்லுங்கள்'' என்றான் நாகராஜன்.

''உங்கள் மன்னரின் செயற்பாடுகளைப் பார்த்தால் அவர் பெரும் வணிகராக இருந்தார் என்று யாரும் நம்பமாட்டார்கள். சிறந்த ஓர் அரசனின் ஏற்பாடுகள் என்றே கருது வார்கள். சகல ஏற்பாடுகளும் மிகவும் கச்சிதமாகச் செய்யப்பட்டுள்ளன. மிகவும் திறமையானவர் உங்கள் மன்னர்'' என்றார் விஷ்வப்பிரமன்.

''ஏன் எமது மன்னர் திறமையானவர் என்று கூறுகிறீர்கள். உங்கள் மாப்பிள்ளை திறமையானவர் என்று கூறலாம் தானே'' என்றான் நாகராஜன்.

விஷ்வப்பிரமன் பெரிதாகச் சிரித்தார்; ''நீ சொல்வதும் சரிதான்'' என்று சிரித்தார். ''படை, பயிற்சி, அரண்கள், உணவு, உடை, ஆயுதங்கள் எல்லாம் போதிய அளவில் இருந்தாலும் போர் முறைகளை நன்கு அறிந்த படைத்தலைவன் இல்லாவிட்டால் எந்தப் படையும் பகைவரை வெல்ல முடியாது. நான் அணிவகுப்பு நடைபெற்ற போது படைத்தலைவனான உனது செயற்பாடுகளைப் பார்த்தேன். பின் இன்று எனக்கு நீ படைத்தளங்களையும் ஆயுதசாலைகளையும், உணவுக் களஞ்சியங்களையும் காட்டிய

முறைகளைப் பார்த்தேன். நீ சுத்த வீரன். போர் நுட்பங்கள் அனைத்தையும் அறிந்த சிறந்த வீரன். உனது தலைமையில் செல்லும் படைகள் தோற்க மாட்டாது. போரைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் படைத் தலைவனுக்குத் தமக்குத் தோல்வி ஏற்படும் என்று தெரிந்தாலும் அதை போர் புரியும் வீரர்களுக்குச் சொல்லாது வேறு காரணங்களைக் கூறிப் படையைப் பின் வாங்கச் செய்தல் வேண்டும். தோற்கும் நிலையிலும் திடீரென்று வெற்றி வரக்கூடிய சூழ்நிலைகள் உருவாகலாம். அதனால் படை வீரர்களுக்குப் போர்க் களத்தில் மனஊக்கம் குன்றக் கூடியவாறு படைத் தலைவன் நடந்து கொள்ளக்கூடாது'' என்று கூறி விட்டுச் சிறிது நேரம் பேசாமல் இருந்தார் விஷ்வப்பிரமன்.

நாகராஜனும் எதுவும் பேசவில்லை. விஷ்வப்பிரமனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவரது முகத்தில் மாறுதல்கள் தென்பட்டன.

''பத்து வருடங்களுக்கு முன்பு ஜெயபுரம் மீது போர் தொடுக்க வேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்டு விட்டது. எம்மிடம் சிறந்த படைகள் இருந்தன. படைத்தளபதி பெரும் வீரன். ஆனால் படைகளை அவன் நடத்திச் சென்ற விதம் எமக்குத் தோல்வியையே பெற்றுத் தந்தது. படைத்தலைவன் தவறான தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தான். அதனால் எமது படை சிதைந்தது. சிறந்த படை வீரர்கள் தோற்றுக் கொண்டிப்பதைச் சகிக்க முடியாத வீரன் ஒருவன் படைத் தலைவனைக் கொன்று விட்டுத் தான் படைகளுக்குத் தலைமை தாங்கினான். மறுநாள் போரில் மாறுதல் ஏற்பட்டது.

எமது படையினர் ஜெயபுரத்தைக் கைப்பற்றி எமது நாட்டுடன் இணைந்து விட்டனர். பின்புதான் எமக்கு உண்மையான நிலை தெரியவந்தது. எமது படைகளின் தலைவன் ஜெயபுர மன்னனுக்குச் சார்பாகவே நடந்து கொண்டான். நாகபுரியைத் தாம் கைப்பற்றியதும் எமது படைத்தலைவனிடமே ஆட்சியை ஒப்படைப்பதாக ஜெயபுர மன்னன் கூறியிருந்தான். படைத்தலைவன் பிழையான முறையில் போர் செய்யும்படி படைகளைக் கட்டளையிட்டால் எந்தச் சிறந்த படையாலும் வெல்ல முடியாது. ஆனால் நீ சிறந்த படைத்தலைவன்.'' என்றார் விஷ்வப்பிரமன். அதைக் கேட்ட நாகராஜனுக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை.

**770. நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை**
**தலைமக்கள் இல்வழி இல்.**

நெடுங்காலமாக நிலைத்திருக்கும் பயிற்சி பெற்ற வீரர்கள் பலரை உடைய படையேயானாலும், படைக்குத் தலைமை தாங்கும் தலைவன் பொருத்தம் இல்லாவிட்டால் பகைவரை வெல்ல முடியாது.

### நடுகல்லாவர்

``நாகராஜா, அரசரின் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் 'படை' என்ற செல்வம் தான். படைக்குரிய உறுப்புக்கள் யாவும் அமைந்த படையே அரசனின் சிறப்பான செல்வமாகும். ஜெயபுர மன்னன் எமது

படைத்தளபதியோடு இரகசியமாகத் தொடர்பு கொண்டு, அவனுக்கு ஆசை வார்த்தைகள் கூறித்தான் அவனைத் தன்வசமாக்கினான். ஒருநாள் ஜெயபுரமன்னனின் தளபதி மாறுவேடமிட்டு எமது நாட்டிற்கு வந்து எமது படைத்தலைவனுடன் கதைத்ததை எமது வீரன் ஒருவன் கண்டு விட்டான். தாய்த்திருநாட்டிற்குத் துரோக மிழைக்க எண்ணும் படைத்தலைவனை நேரில் எதிர்க்க முடியாதென்று எண்ணி அவன், படைத்தளபதியோடு நட்புக் கொண்டு ஜெயபுரத்தின் அரண்மனைக்குச் சென்றான். அங்கு படைத்தலைவனும் வேறு பல எமது நாட்டு வீரர்களும் இருந்திருக்கின்றனர். அதைக்கண்டு ஆச்சரிமடைந்த வீரன் தனக்கு நம்பிக்கையான ஒருவனிடம் விசயத்தை எழுதிக் கொடுத்திருக்கிறான். அவன் வரும்போது ஜெயபுரப்படைகளிடஞ் சிக்கி விட்டான். அப்போர் வீரனை ஜெயபுரத்தின் அரண்மனைக்கு வீரர்கள் கொண்டு சென்று விசாரித்தனர். அப்போர்வீரன் துணிவுடன் தான் அந்த நாட்டிற்கு வந்த முறைகளைக் கூறியிருக்கிறான். அதற்கு ஜெயபுர மன்னன்; “போர்வீரனே நீ எங்கேயிருக்கிறாய் என்பதை உணர்ந்த பின்பு பேசு. இது உங்களது நாடல்ல. பகைவனது நாடு. இங்கு நீ எமது நாட்டின் சட்டதிட்டங்களை மதித்து நடக்க வேண்டும். நீ நாகபுரியின் ஒற்றனாக வந்து அகப்பட்டுள்ளாய். அத்துடன் நீ மாபெரும் தவறும் செய்துள்ளாய். வேற்று நாட்டவனான நீ எமது அரசனின் அனுமதியில்லாமல் வரமுடியாது. அத்துடன் நீ ஒற்றனாக இங்கு வந்து எமது நாட்டின் படைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கிறாய். அதற்குத் தண்டனை என்ன தெரியுமா…?” என்று கேட்டிருக்கிறான்.

“அதற்கு அப்போர்வீரன் சொன்னான்; “மரணதண்டனை என்று எனக்குத் தெரியும். எனது தாய் நாட்டைக் காப்பாற்ற ஆயிரகணக்கான வீரர்கள் தம் உயிரைத் தியாகஞ் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் எனது உயிர் பெரிதல்ல. உடனே எனக்கு மரணதண்டனை வழங்குங்கள்” என்றானாம்.”

அதனால் கோபமுற்ற ஜெயபுர மன்னன் அவனுக்குத் தண்டனை வழங்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். வீரர்கள் பலர் சவுக்கால் அவனை அடித்தனர். அப்பொழுது அவன் வீரத்துடன் சொன்னானாம்; “மன்னவனே, ஒரு நாட்டை நயவஞ்சகமான முறையில் கைப்பற்ற நினைத்தால் நீதான் அழிவாய். நீ எமது மன்னருக்குத் துரும்பைப் போன்றவன். பகைவனே! எனது மன்னனை எதிர்த்து நிற்காதே. எனது மன்னரின் வீரத்தை அறியாது அவனுடன் நீதியற்ற முறையில் போராடிப் பலர் போரில் மடிந்து நடுகல்லாக இன்று நிற்கின்றனர். உனக்கும் அந்த நிலைதான் ஏற்படும்” என்று கர்ஜித்தானாம்.

“பின் ஜெயபுரமன்னன் அப்போர் வீரனைப் பாதாளச் சிறையில் அடைத்திருக்கிறான். போர் முடிந்த பின்பு எமது படைவீரர்கள் ஜெயபுரமன்னனைக் கைது செய்து பாதாளச் சிறையில் அடைத்தபோது அப்போர்வீரன் வெளியே வந்து சொன்னான்; “கோழையே! எனது மன்னனின் வீரத்தைப் பற்றி நான் உனக்கு என்ன சொன்னேன். எமது மன்னனை எதிர்த்த பகைவர்கள் எல்லோரும் இப்போது நடுகற்கலாக நிற்கின்றனர். நீயும் விரைவில் நடு கல்லாக நிற்பாய் என்றேன்.

விரைவில் உனக்கு மரண தண்டனை வழங்கப்படும் பின் உனக்கு ஒரு கல் வைக்கக்கூட ஆள் இல்லாமற் போய் விடும்'' என்று கர்ஜித்தான்.''

''எனவே சிறந்தபடை, ஆயுதம், உணவு, உடை யாவும் இருந்தாலும் உணர்வள்ள தாய் நாட்டுப் பற்று மிக்க அரசனில் விசுவாசமுள்ள வீரர்கள் பலர் இருத்தல் வேண்டும். இங்கு நான் சந்தித்த பல வீரர்கள் உங்கள் அரசனுக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாக உள்ளனர்'' என்றார் விஷ்வப்பிரமன்.

அந்தப் போர் வீரனை நினைக்க நாகராஜனுக்கு மெய் சிலிர்த்தது. ''இப்போது அந்தப் போர்வீரன் எங்கே?'' என்று கேட்டான்

''அவன்தான் எமது நாட்டின் முதலமைச்சாராக இருக்கிறான். படைத்தலைவனைக் கொன்ற போர்வீரனே எமது தற்போதைய படைத்தலைவன். முதலமைச்சர் அருண்பாண்டியனைப் பற்றிக் கூறியமையால் நாம் அவதானமாகத்தான் இருந்தோம்'' என்றார் விஷ்வப்பிரமன்.

### 771. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர்! பலர்என்ஐ முன்நின்று கல்நின்றவர்!

பகைவர்களே! எமது அரசனின் முன் எதிர்த்து நிற்காதீர்கள், எமது அரசனை எதிர்த்து மடிந்து நடுகல்லானார்கள் பலர்.

## தவறிய வேல்

ஜெயபுரம் ஒரு சிறிய நாடு. எமது நாட்டின் நான்கில் ஒரு பங்கு விஷ்தீரணம் கூட இருக்கமாட்டாது. அத்துடன் வளமில்லாத நாடு. மழை அங்கு மாரிகாலத்தில் அதாவது கார்த்திகை மார்கழி மாதங்களில் மட்டுமே பெய்யும். அதனால் விவசாயம் செய்ய முடியாது. கடற்கரைப் பிரதேசமாகையால் நன்நீருக்கும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். மக்களில் அனேகர் அயல்நாடுகளுக்குச் சென்று கூலித் தொழில் செய்கின்றனர். அத்துடன் மீன் பிடித்தல் தான் அங்கு பிரதான தொழில். மீனைப் பிடித்து கருவாடாக்கி ஏற்றுமதி செய்கிறார்கள். முன்பு ஜெயபுர மன்னனின் வீரர்கள் கருவாட்டு வியாபாரிகளைப் போலவே இங்கு வந்து சென்றனர். ஒரு சிறிய நாடு, வளமில்லாத நாடு, படைப்பலமில்லாத நாடு, எம்மை எதிர்க்குமென்று நாம் கனவு கூடக்காணவில்லை. எமது படைத்தலைவன் தான் அடிக்கடி ஜெயபுரமன்னனைச் சந்தித்து அவனுக்கு நாட்டைக் கைப்பற்றும் ஆசையை ஊட்டியுள்ளான். நெடுங்காலமாக சிவபுரி மன்னனுக்கும் எமக்கும் எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. அதனால் தமது எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகச் சிவபுரி மன்னன் மறைமுகமாக ஜெயபுரமன்னனுக்கு ஆதரவு வழங்கி வந்துள்ளான். சிவபுரி மன்னனும் எமது நாட்டின் படைத்தளபதியுடன் சேர்ந்து தான் எமது நாட்டின் மீது படையெடுத்துள்ளான்.''

''சிவபுரி மீது நாம் படையெடுத்தால் என்ன? முன்பிலிருந்தே அவன் உங்கள் நாட்டோடு தேவையில்லாத முறையில் பிரச்சினைகளுக்கு

வந்துள்ளான். தற்பொழுதும் எமது மன்னரின் திருமண விடயத்தில் தலையிட்டுள்ளான். எனவே சிவபுரி மீது நீங்கள் படையெடுத்தால் என்ன?'' ஆவேஷமாகக் கேட்டான் நாகராஜன்.

``வெகுநாட்களாக அந்த எண்ணம் எனது மனதில் உண்டு. எமது நாட்டின் வடக்கெல்லையில் இருக்கும் மக்களுக்கு அவன் ஓயாமல் தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். முன்பு நான் போர் தொடுத்தால் மகதநாடும், ஜெயபுரமும், தென்நாடும் சேர்ந்து விடும் என்று நினைத்துப் பயந்தேன். ஆனால் இப்பொழுது அந்த நிலை இல்லை. ஜெயபுரத்தை எமது நாட்டுடன் சேர்த்து விட்டோம். ஜெயபுரமன்னன் எமது சிறையில் இருக்கிறான். இப்பொழுது ஜெயபுரத்தை நாம் ஏன் எமது நாட்டோடு இணைத்தோம் என்று வருந்துகிறேன். எமது மக்களுக்குக் கொடுக்கும் மானியங்கள் யாவும் ஜெயபுர மக்களுக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த நாட்டிலிருந்து எந்த வருமானமும் கிடையாது. பேசாமல் ஜெயபுர மன்னை விடுதலை செய்து அவனிடம் அந்நாட்டைக் கொடுப்பது நல்லது'' என்றார் விஷ்வப்பிரமன்.

நாகராஜன் எதுவும்பேசாது விஷ்வப்பிரமன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்; ``நான் ஜெயபுர மன்னனைப் பார்த்து; ``நீ ஏன் எமது நாட்டின் மீது போர் தொடுத்தாய். தோற்பேன் என்று தெரிந்தும் போர் தொடுக்க உனக்கு எப்படித் துணிவு வந்தது? என்று கேட்டேன். அவன் திமிராக; ``மன்னரே; காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறி தவறாது அம்பை எய்வதை விட, வெட்ட வெளியில் நிற்கும் யானை மேல் எறிந்து தவறிய வேலை

ஏந்துதல் சிறந்தது'' என்கிறான். அவன் கூறியது உண்மைதான். அதனால் தான் நான் சிவபுரியைக் கைப்பற்ற முயலவில்லை'' என்றார்.

''அப்படியானால் ஜெயபுர மன்னனை விடுதலை செய்யப் போகிறீர்களா....?'' என்று கேட்டான் நாகராஜன்.

''இன்னும் நான் அதைப்பற்றி முடிவெடுக்கவில்லை. அப்படி ஒருயோசனை எனது மனதில் நெடுநாளாக இருக்கிறது'' என்றார் விஷ்வப்பிரமன்.

''காலையில் இருந்து உணவு உண்ணாமல் படைத்தளங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். வாருங்கள் அரண்மனைக்குச் செல்வோம்'' என்றான் நாகராஜன்.

இருவரும் அரண்மனைக்கு வந்தனர். விருந்தினர் தங்கும் மண்டபத்திற்கு இருவரும் வந்தனர். அம்மண்டபத்தில் ஏமநாதனும் குருவும் இருந்தனர். விஷ்வப்பிரமனைக் கண்ட ஏமநாதன் ஆசனத்தை விட்டெழுந்தான். விஷ்வப்பிரமன் குருவை நமஸ்கரித்தார்.

''படைத்தளங்கள் யாவும் பலமாகவுள்ளன. படைகளும் சிறந்த முறையில் உள்ளன'' என்றார் விஷ்வப்பிரமன்.

---

**772. கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

---

காட்டில் ஓடும் முயலுக்கு குறிதவறாது அம்பை எய்வதை விட, வெட்ட வெளியில் நிற்கும் யானை மேல் எறிந்து குறி தவறிய வேலினை ஏந்துதலே சிறந்தது.

## பேராண்மை

மிகுந்த மகிழ்வுடன் புன்னகைத்தான் ஏமநாதன். அளவுக்கதிகமான மகிழ்ச்சி அவனது மனதிலும் முகத்திலும் தெரிந்தது; “படைத் தளபதிகளோடு கலந்துரையாடினேன். ஒவ்வொருவரும் மிகுந்த திறமையுள்ளவர்களாகவும் வலிமையுள்ளவர்களாகவும் நுட்பமான புத்திக் கூர்மையுள்ளவர்களாகவும் விளங்குகிறார்கள். அவர்களது கண்களிலும் முகத்திலும் மன்னனது பெயரைச் சொன்னதும் தோன்றும் மகிழ்ச்சிப் பிரபாகத்தை வார்த்தைகளால் கூற முடியாது. கண்கள் எதிரியைத் துவாம்சம் செய்வோமெனக் கூறுகின்றன. தாய்நாட்டுப்பற்று அவர்களிடம் அளவுக்கதிகமாக இருக்கிறது. நாட்டையும் அரசனையும் மக்களையும் அவர்கள் தம்மைப் போல நேசிக்கிறார்கள். இது மன்னருக்கு ஏற்பட்ட பெரு வெற்றியாகும். இப்படிப்பட்ட படைத்தலைவர்களைப் பெற்ற மன்னன் போற்றுதற்குரியவன். படைத்தலைவன் மிகுந்த வலிமையுடையவன். அதைவிட உணர்வுகளால் கூட எதிரி இந்நாட்டை நினைக்கக்கூடாது என்று நினைப்பவன் நாகராஜன். மிகுந்த வலிமையும், போர்த்திறமையும் புத்திக்கூர்மையும் மிக்க நாகராஜனின் தலைமையில் செல்லும் படையை எந்தப் பகைவர்களாலும் அழிக்க முடியாது.” என்றார் விஷ்வப்பிரமன்.

நாகராஜனின் மனம் ஆனந்தத்தால் ஆர்ப்பரித்தது. சபையைப் பார்த்தான். எல்லோரும் மகிழ்வுடன் புன்னகைத்துக் கொண்டிருந்தனர். ஏமநாதன் மிக்க மகிழ்வுடன் எழுந்து வந்து நாகராஜனைக் கட்டித் தழுவினான். பின் தனது கழுத்தில் இருந்த நவரத்தின மாலை ஒன்றைத் கழற்றி அவனது கழுத்தில் போட்டான். சபையினர் கரகோஷம் செய்தனர். நாகராஜன் மன்னனைப் பணிந்தான். பின்; "எமது நாட்டை எந்தப் பேரரசனும் கைப்பற்ற நாம் அனுமதிக்க மாட்டோம். எமது போர் வீரன் ஒருவன் உயிரோடு இருக்கும்வரை இந்த நாட்டை எதிரிகள் கைப்பற்ற முடியாது" என்று உணர்ச்சி மிகுதியுடன் கூறினான்.

"போர்நடைமுறைகளையும் போர் செய்யும் முறைகளையும் நல்ல முறையில் நீங்கள் அறிந்து வைத்திருப்பதைப் போல, போர்க்களத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தளபதிகளும் போர் வீரர்களும் அறிந்து கொள்ளல் வேண்டும். போர்க்காலத்தில் எந்த வகையான தந்திரங்களையும் கையாளலாம். ஆனால் சூழ்ச்சிகள் செய்யக்கூடாது. நயவஞ்சமான முறையில் எதிரிகளை அழிக்கக்கூடாது. பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தைப் பேராண்மை என்று சொல்வார்கள். ஒரு துன்பம் பகைவனுக்கு வந்த போது அந்தப் பகைவனுக்கு உதவி செய்தலை ஆண்மையின் கூர்மை என்று சொல்வார்கள். நாம் ஒவ்வொரு போர்வீரனுக்கும் இராமாயாணத்தையும் திருக்குறளையும் கற்பித்தல் வேண்டும். இராமாயணத்தில் எந்த ஓர் இடத்திலும் தர்மம் மீறப்படவில்லை. பகைவனுக்குத் துன்பம் வந்த போதெல்லாம் இராமன் உதவியிருக்கிறான்.

இராவணன் போர்க்களத்தில் ஆயுதங்கள் முழுவதையும் இழந்து துன்பத்துடன் நிராயுதபாணியாக நிற்கிறான். நிராயுதபாணியைக் கொல்லக்கூடதென்பது தர்மம். ஆயுதங்கள் எவையு மில்லாமல் பகைவரைச் சந்திக்க நேர்ந்தால் தான் அது பொருந்தும். இராமாயாண யுத்தத்தில் இலட்சக்கணக்கான வீரர்களுடன் பலவகைப்பட்ட சக்திமிக்க ஆயுதங் களுடனும் வந்த இராவணனை இராமன் போரிட்டு நிராயுதபாணியாக்குகிறான். அடுத்து இராவணனைக் கொல்லல் வேண்டும். ஆனால் அப்படி இராமன் இராவணனைக் கொல்லவில்லை. “நீ கொண்டு வந்த போரிட்ட ஆயுதங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. இப்பொழுது உனக்கருகில் கூட, நீ எடுத்துப் போரிடக்கூடிய ஆயுதம் எதுவும் இல்லை. அதனால் நீ இன்று போய் நாளை போரிடக்கூடிய ஆயுதங்களுடனும் படைகளுடனும் வா” என்கிறான். அப்படித்தான் ஓர் அரசன் பகைவனுடன் போராடுதல் வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தர்மத்தை மீறக்கூடாது. வலிமையுள்ள பேராண்மை மிக்க அரசன் எப்பொழுதும் தர்மமான முறையிலேயே யுத்தஞ் செய்தல் வேண்டும்” என்றார் விஷ்வப்பிரமன்.

“வலிமையுள்ளவன் ஒருபோதும் குறுக்கு வழியை நாட மாட்டான். எமது போர் வீரர்கள் வலிமை மிக்கவர்கள். அவர்கள் எப்போதும் பகைவர்களுக்குத் துன்பமான வேளையில் உதவும் பேராண்மை மிக்கவர்கள்.” என்றான் ஏமநாதன். சபையினர் கரகோசம் செய்தனர்.

**773. பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எ·கு.**

பகைவரை எதிர்க்கும் வீரத்தைப் பேராண்மை என்று கூறுவர்; பகைவர்களுக்குத் துன்பம் வந்த போது உதவி செய்வதை ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

## மார்பில் பாய்ந்த வேல்

"போர்க்காலத்தில் எந்த விதமான தந்திரங்களையும் உபயோகிக்கலாம் என்பதற்கு மகாபாரதம் நமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மகாபரமாத்மாவான கிருஷ்னர் தனது சுய உருவில் மகா பாரதத்தில் வந்துபல தந்திரோபாயங்களைக் கையாண்டவர். துரோணாச்சாரியாரை வெல்ல முடீயாது என்பது கிருஷ்னருக்குத் தெரியும். அதனால் கிருஷ்னர் தந்திரமாகத் துரோணரைக் கொல்ல முயற்சிக்கிறார். துரோணரின் மகன் அஸவலத்தாமா. அன்றைய போரில் அஸ்வத்தாமா என்ற பட்டத்து யானை கொல்லப்பட்டது. அதைச் சாட்டாக வைத்துத் துரோணரைக் கொல்ல நினைத்த கிருஷ்னர், தருமனிடஞ் சென்று யுத்தகளத்தில் துரோணர் போரிடும் இடத்திற்கு வந்து அஸ்வத்தாமா இறந்து விட்டதாகக் கூறச் சொல்கிறார். தர்மவானான தர்மன் அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறான். அப்பொழுது கிருஷ்னர்; "நீ பொய் சொல்ல வேண்டாம். அஸ்வத்தாமா என்ற யானை இறந்து விட்டது" என்று சொல்லென்றார். அதன் படி தருமன்

போர்க்களத்திற்குச் சென்று; “அஸ்வத்தாமா ஹத குஞ்சர” என்று சொன்னார். கிருஸ்ணர், தருமன்; “அஸ்வத்தாமா ஹத” என்று சொல்லும் போது சங்கை ஊதினார். அதனால் குஞ்சர அதாவது யானை என்ற சொல் அவருக்குக் கேட்கவில்லை. அதனால் தனது மகன் அஸ்வத்தாமன் இறந்து விட்டானென்று நினைத்துப் புத்திர சோகத்தால் துரோணர் மதி மயங்கி இறந்தார். இப்படியான தந்திரங்கள் பல நமது முன்னோர் நடத்திய போர்களில் கையாளப்பட்டுள்ளன. ஆனால் சூழ்ச்சி செய்து போரில் வென்று நாட்டைப் பிடித்தால், அந்த நாட்டை நல்ல முறையில் ஆழ முடியாது. அதனால் அவன் விரைவில் பகைவர்களால் தோற்கடிக்கப்படுவான்.” என்றார் முதலமைச்சர் வெங்கடேசர்.

விஷ்வப்பிரமன் புன்னகைத்தார்; “எமது முன்னோரின் போர் முறைகள் மிகவும் ஆச்சரியத்துக்குரியன. நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத பல அபூர்வ நிகழ்வுகள் போர்க்களத்தில் நடைபெற்றுள்ளன. அரசர்களின் போர்த் தந்திரங்கள் எம்மை ஆச்சரியப்பட வைக்கும்; போர் வீரர்களின் வீரம் எம்மை மெய் சிலிர்க்க வைக்கும்; “தனது மகனுடன் தனித்து வாழ்ந்த கைம்பெண்ணொருத்தி திடீரென நாட்டில் போர் ஏற்பட்டதால் தனது பச்சிளம் பாலகனைப் போர்க்களத்திற்கு அனுப்புகிறாள். அவன் அங்கு எதிரிகளால் கொல்லப்படுகிறான். கொல்லப்பட்ட தனது அன்பு மகனைப் பார்க்கச் சென்ற தாய் அவனது நெஞ்சில் வேல் ஏறி இருப்பதைக் கண்டு மகிழ்ந்தாளாம். இது மெய் சிலிர்க்கும் நிகழ்வு” என்றார் விஷ்வப்பிரமன்.

“எனது தந்தையார் இதைவிட மெய்சிலிர்க்கும் கதை ஒன்றை எனக்குக் கூறினார். எனது தந்தையின் காலத்தில் திடீரென்று மகதநாட்டினர் மங்களபுரியின் மீது படையெடுத்து விட்டனர். போர் செய்யும் நிலையிலில்லாவிட்டாலும் எப்பொழுதும் மங்களபுரியில் படைகள் போருக்குத் தயாராகவே இருக்கும் என்பதைப் பகைவர் அறிந்து கொள்வதில்லை. எதிர்பாராது படையெடுத்தால் தாம் வென்றுவிடலாமென்று மகதநாட்டு மன்னன் நினைத்தான். போர் உக்கிரமாக நடைபெற்றது. மூன்று தினங்கள் நடைபெற்ற போரில் மகதநாட்டு வீரர் முன்னணியில் இருந்தனர்.”

“யானையில் வீற்றிருந்து சண்டை செய்த மகத நாட்டு அரசன், எமது படையணியைச் சின்னபின்னமாக்கினான். எமது வீரனான இளங்குமரன் என்பவன் தனது கையிலிருந்து வேலை ஒரு யானைக்கு எறிந்தான். அவ்வேல் அவன் குறி வைத்து எறிந்த யானைமீது பாய்ந்து ஏறியது. அப்போது மகத நாட்டு மன்னன் இளங்குமரன் மீது ஒரு வேலை எறிந்தான். அவ்வேல் இளங்குமாரனின் மார்பில் ஏறியது. தனக்கு மிக அருகில் இருக்கும் மகதநாட்டு மன்னன் மீது ஏறியத் தன்னிடம் வேலில்லையே என்று கலங்கிய இளங்குமரன், தனது மார்பில் ஏறியிருந்த வேலைக்கண்டு மகிழ்ந்து அதைப்பறித்து மகதநாட்டு மன்னனை நோக்கி எறிந்தான். அவ்வேல் மகரநாட்டு மன்னனது நெஞ்சில் புகுந்து அவனது உயிரைக் குடித்தது. மன்னன் இறந்தமையால் கலங்கிய மகதநாட்டு வீரர்கள் கதிகலங்கிச் சிதறி ஓடினர். அதனால் எமக்கு வெற்றி கிட்டியது.

மார்பில் பாய்ந்த வேலைப் பறித்து எறிந்த வீரனுடைய பேரன் தான் நாகராஜன்'' என்றார் முதலமைச்சர் வெங்கடேசர்.

விஷ்வப்பிரமன் அதிர்ந்து போனார். இதுவரை போர்க்களங்களில் நடைபெற்ற அபூர்வமான அதிசய நிகழ்வுகளைப் பற்றி நூல்கள் மூலமாகத் தான் அறிந்துள்ளார். ஆனால் இப்பொழுது வெங்கடேசர் கூறிய நிகழ்வைத்தான் நேரில் கண்டதைப் போல உணர்ந்து கொண்டார். ‘‘எவ்வளவு மனவலிமை அவ்வீரனுக்கு இருந்திருக்கும்'' என்பதை நினைக்க அவருக்கு மெய்சிலிர்த்தது; ‘‘மங்களபுரி உண்மையில் வீரம் விளைந்த நாடுதான்'' என்று நினைத்தார்.

முதலமைச்சர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்; ‘‘வீரம் என்பது மண்ணில் சொத்து. வீரமண்தான் வீரர்களை உருவாக்கும். மண்ணின் வளம் பயிர்களில் காணப்படுவது போலத்தான் மண்ணின் வீரம் அம்மண்ணில் வாழும் மனிதனில் காணப்படும். வீரர் பலர் வாழ்ந்த எமது மண்ணைக் கைப்பற்ற நினைக்கும் பகைவர் தம்மைத் தாமே அழித்துக் கொண்டவர்களாவர். இங்கு வாழும் ஒவ்வொரு மனிதனும் எமது பத்துப் போர் வீரர்களுக்குச் சமனானவர்கள். எமது ஒரு போர் வீரன் பகைவர்களின் நூறு போர் வீரர்களுக்கு ஒப்பானவன் என்பதைப் பல போர்களில் நிரூபித்திருக்கிறார்கள்'' என்றார் உணர்ச்சி பொங்க. அவரது வார்த்தைகளில் கனல் தெறித்தது. கண்கள் தீயாகச் சுவாலித்தன.

**774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.**

கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந் கொன்று விட்டு, வேறு வேல் தேடும் போது தன் மார்பில் பட்ட வேலைப் பறித்து மற்ற யானையின் மீதெறிந்து மகிழ்பவனே வீரன்.

## இமைக்காத கண்கள்

முதலமைச்சர் தொடர்ந்து சொன்னார்; “படைகளின் சிறப்பு வீரர்களில் தங்கியுள்ளது. வீரர்கள் தவசிகளைப் போல உணர்வுகள் அனைத்தையும் துறக்க வேண்டும்; பற்றுக்கள் எல்லாவற்றையும் அறுத்தல் வேண்டும். தவசி ஒருவன் தவஞ் செய்யும் போது எப்படியிருக்கிறானோ அப்படியிருத்தல் வேண்டும். அவனது சிந்தனை எப்போதும் நாட்டைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். தாய் நாட்டின் நன்மைக்காகத் தனக்கு வரும் துன்பங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் தனது வலிமையால் செருக்கடைந்து பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும். பேர் வீரனது வீரம் ஒழுக்கத்தில் தான் தங்கியுள்ளது. ஒழுக்கமில்லாதவர்கள் வீரர்களாக இருந்தால் அது நாட்டிற்கும் அரசருக்கும் கேட்டையே உண்டாக்கும். ஆசையுள்ளவர்கள், பற்றுடையவர்கள் போர்க்களத்தில் புறமுதுகுகாட்டி ஓடவே தகுதியுடையவர்களாவர். அத்துடன் தீமை செய்யும் பகைவரைத் தனது வீரத்தால் அடக்கி, நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்பவன் தான்

போர் வீரன். அவன் நாட்டிற்கும் மக்களுக்கும் தன்னைத் தேய்த்து நன்மை பெற்றுக் கொடுக்கிறான். அத்துடன் விரும்பியதை விரும்பியபடி அடைய வீரனால் மட்டுமே முடியும். அதனால் தான் நாட்டிலுள்ள வீரர்கள் போர் வீரர்களாகிறார்கள். அத்துடன் வீரர்களுக்கு அவர்களது புலன் களும் அங்கங்களும் அவர்களின் கட்டளைப்படியே சேவையாற்றும்''.

''மகதநாட்டுப் போரில் அந்நாட்டு வேற் படைவீரர் கண்களை மூடி முகமூடியணிந்து கொண்டு போர்க்களத்திற்கு வந்து போரிட்டனர். அவர்கள் போரிட்ட இடம் புழுதி மயமாக இருந்தது. மகதநாட்டு வீரர்கள் வேண்டுமென்றே புழுதியைக் கிழப்பிக் கொண்டிருந்தனர். வேற்படை வீரன் ஒருவன் பகைவனைச் சினத்தோடு பார்த்து வேலை வீசும் பொழுது அவனது கண் இமைத்தால் எறியும் வேலின் குறி தவறி விடும். அதற்காத்தான் மகத நாட்டு வீரர்கள் முகமூடியணிந்து கொண்டு வந்து போர்க்களத்தில் புழுதியைக் கிளப்பினார்கள் என்பதை எமது வீரர்கள் ஓரிரு கணங்களில் உணர்ந்து கொண்டார்கள். கண்களுக்குள் புழுதிப்படலம் நுழைந்து எரிச்சலைக் கொடுத்த போதும் அவர்கள் தாம் கொண்ட கடமையை மறவாது திடத்துடன் தவசிகளைப் போலக் கருமமாற்றினார்கள். புழுதிப்படலத்தின் மத்தியிலும் எமது ஒவ்வொரு வீரனும் எறிந்த வேல் குறி தவறாது பகைவர்களின் உயிர்களைப் பறித்தது. அதனால் பகைவர்கள் தப்பியோட முயற்சித்தனர். தப்பியோடும் மகதநாட்டு வீரர்களை எமது வேற்படை வீரர்கள் துரத்தித் துரத்தி வேலை எறிந்து கொன்றனர். அன்று எமது வேற்படை வீரர்கள் கண் இமைத்திருந்தால் நாடு

பறிபோயிருக்கும். அதனால் வீரர்களுக்கு நாம் சகல பயிற்சிகளையும் அளித்துள்ளோம்'' என்றார் வெங்கடேசர். அவரது முகம் மிகவும் பயங்கரமாகக் காட்சியளித்தது.

விஷ்வப்பிரமன் யோசித்துப் பார்த்தார்; ‘‘இவ்வளவு மனத்திடமுள்ள வீரர்கள் படைகளில் இருப்பது மிகமிகக் குறைவு. மங்களபுரி சகல வளங்களும் நிறைந்த நாடு மட்டுமல்ல ஒப்புயர்வில்லாத பல வீரர்கள் வாழும் நாடு. இவற்றை நினைத்துத் தான் பெரும் போருக்கான ஆயத்தங்களைச் செய்த மகதநாடும் சிவபுரியும் அடங்கின'' என்று அவருக்குத் தோன்றியது.

அப்போது பணிப்பெண்கள் மிகவும் சுவையான உணவு வகைகளைக் கொண்டு வந்து பரிமாறினர். மஞ்சள் நிறத்தில் உருண்டையாக இருந்த பலகாரமொன்றை எடுத்து வாயில் போட்டார் விஷ்வப்பிரமன். அது மிகவும் சுவையாக இருந்தது. அப்படிச் சுவையான ஓர் உணவை அவர் இதுவரை சுவைத்ததில்லை. அறுசுவையும் அச்சிறு உருண்டைக்குள் இருந்தது. அவருக்கு அப்பணியாரம் பிடித்தால் மேலும் இரண்டை எடுத்தார். அதைக் கவனித்த வெங்கடேசருக்குச் சிரிப்பு வந்தது; ‘‘எமது நாட்டின் சிறப்பைக் காட்டும் அந்தப் பணியாரம் எவரையும் கவரும்'' என்று நினைத்தார்.

---

**775. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்**
**ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.**

---

பகைவனைச் சினந்து நோக்கிய கண் அவர்கள் வேலை வீசும் போது இமைக்குமானால், அது வீரர்களுக்குத் தோல்வியைக் கொடுக்கும்.

## பயனற்ற நாட்கள்

மங்களபுரியின் அரண்மனை நந்தவனத்தில் அரசனும் அரசியும் தங்கி மகிழ்வதற்கு மிகவும் ஆடம்பரமான முறையில் கட்டப்பட்ட மாளிகை ஒன்றிருந்தது. அம்மாளிகையில் சகல வசதிகளையுமுடைய பெரியதொரு அறையில் ஏமநாதனும் காயத்திரியும் தங்கியிருந்தனர். முத்துக்கள் பதித்த பட்டால் செய்யப்பட்ட அழகான மேற்சட்டை அணிந்திருந்தாள் காயத்திரி. மார்பை மட்டும் மறைத்திருந்த அச்சட்டையை ரசிப்படை விடச் சட்டைக்கு வெளியே தெரியும் பகுதிகளைப் பார்த்து மெய்மறந்திருந்தான் ஏமநாதன்.

போர் ஒத்திகையை நல்லமுறையில் பார்த்தாயிற்று. படைகள் யாவும் மிகுந்த பலத்துடன் தயார் நிலையில் உள்ளன. அரண்கள் யாவும் பலப்படுத்தப்பட்டு அங்கு தங்கிப் போர் செய்யும் வீரர்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களும் குவிக்கப்பட்டு விட்டன. போரில் வல்ல நாகபுரி அரசர் மங்களபுரியின் படைத்தளங்களைப் பார்வையிட்டு விட்டு அதன் பலத்தை மெச்சிப் புகழ்ந்து விட்டார். அதனால் ஏமநாதன் மிகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருந்தான். அரண்மனையில் உள்ள பெரியவர்கள் எல்லோரும்

பட்டத்தரசியுடன் மகிழ்வுடன் கலந்திருக்குமாறு கூறிவிட்டனர். அதனால் அவன் மிகவும் மகிழ்வுடன் இருந்தான்.

ஏமநாதனின் அருகில் அமர்ந்திருந்த காயத்திரி அவனது தோளைப் பற்றினாள். அது மிகவும் உறுதியாக இருந்தது; ‘‘தாங்கள் பெரும் வணிகர் என்பதை அரண்மனையில் உள்ள எந்தப் பெரியவர்களும் நம்பவில்லை. முக்கியமாக எனது தந்தையார் ஆச்சரியப்பட்டார். ‘‘ஒரு வணிகன் எப்படி இவ்வளவு போர் நுட்பங்களையும் அறிந்தான் என்று நம்பமுடியாதிருக்கிறதென்றார்.’’ இப்பொழுது உங்களைத் தழுவிய என்னாலும் அதை நம்பமுடியவில்லை’’ என்றாள்.

‘‘அப்படியா....? அவர்கள் எனது போர் அணிவகுப்பையும், போருக்கான ஆயத்தங்களையும் வைத்துக் கொண்டு சொன்னார்கள். நீர் எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்’’ என்று கேட்டவாறு அவளைச் சற்று இறுக அணைத்தான்.

காயத்திரி அவனைப் பார்த்து நாணத்துடன் சிரித்தாள். நாணமிகுதியால் அவளது கண்கள் மிரண்டு இமைத்தன. முகம் சிவக்கத் தொடங்கியது. அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

‘‘சொல்லும்’’ அவரசப்படுத்தினான் ஏமநாதன்.

மீண்டும் அவளது கண்கள் நாணத்தால் மெல்லத் துடித்தன; ‘‘நீங்கள் உடல் உறுதி மிக்கவர் என்று அப்பா சொன்னார். உங்கள் தோள்களும் மார்பும் கைகளும் இரும்புபோலக்

கடினமாக இருக்கின்றன. வர்த்தகனின் தோள்களும் மார்பும் கைகளும் பெண்களின் மென்மையான அங்கங்களைப் போலவே இருக்கும் என்றும் சொன்னார்'' ஏமநாதன் அட்டகாசமாகச் சிரித்தான்; ''ஒருவன் நாய் வேஷம் போட்டால் குரைக்க வேண்டும் என்பார்கள். நான் அரசனாகிவிட்டேன். அதனால் அரசர்க்குரிய பயிற்சிகள் யாவற்றையும் நல்ல முறையில் பெற்று விட்டேன். இதனால் எனது மனமும் உடலும் அரசர்களைப் போல உறுதி பெற்று விட்டன.'' என்றான்.

காயத்திரி மெல்ல நகைத்தாள். அவளது இரண்டு உதடுகளும் தாளத்திற்கேற்ப அசையும் கைகளைப் போல மிகவும் நளினமாக அசைந்தன. அந்த நளினமான சிரிப்பு ஏமநாதனுக்குப் பரவசத்தைக் கொடுததது; ''உண்மையைச் சொல்வதானால் நான் கொடுத்து வைத்தவன். இந்த நாடு பொருள் பண்டங்களைப் பெற்றதை விட உம்மைப் பெற்றதையே நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். உம்மை எதிரிகளிடமிருந்து காப்பற்றத் தான் தீவிரமாகப் பயிற்சி பெற்றேன். எனக்கு பயிற்சியளித்த அரசசபைக்குரு சொன்னார்; ''சுத்த வீரன் தன் வாழ்நாளில் கழிந்த நாட்களைக் கணக்கிட்டு, விழுப்புண்படாத நாட்களெல்லாம் பயன்படாத நாட்களாகக் கருதுவான்'' என்றார். ஆனால் நான் என் வாழ் நாளைக் கணக்கிட்டு உம்மோடு கூடியிராத நாளெல்லாம் வாழாத நாள் என்று தான் கூறுவேன்'' என்றான்.

''உன்மீது அளவுக்கதிகமான காதல் கொண்டமையால் தான் ஏமநாதன் இவ்வளவு திறமைகளையும் பெற்றான்'' என்று அவளது தந்தை

விஷ்வப்பிரமன் சொன்னது அவளுக்கு நினைவில் வந்தது.

**776. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.**

வீரன், பகைவருடன் தான் போர் செய்த நாட்களைக் கணக்கிட்டு, விழுப் புண்படாத நாட்களை யெல்லாம் போர் செய்யாத நாட்களாவே கொள்வான்.

## சிறந்த அழகு

“காயத்திரி, உண்மையைச் சொல்லப் போனால் உன்மீது கொண்ட காதல் தான் என்னை இந்தளவிற்கு உயர்த்தியது. இந்திர விழாவில் உன்னைக் கண்டு, உனது வர்ணிக்க முடியாத பேரழகில் மயங்கிக் காதலுற்றேன். அதனால் பல அரசர்கள் என்னை எதிர்த்தார்கள். உன்னை நான் அடைய வேண்டுமானால் நான் மாவீரனாதல் வேண்டும். சிறந்த படைகள் உள்ள பேரரசனாக வேண்டும். எதிரிகளைப் பூண்டோடு அழித்தல் வேண்டும். அத்துடன் ஒரு பேரரசியாக உன்னை எதிரிகள் நினைக்க வேண்டும் என்று நினைத்துச் செயலில் இறங்கினேன். மங்களபுரி மக்களும் பிரதானிகளும் என்மீது மட்டற்ற மதிப்பு வைத்திருந்தனர். அதனால் என்னால் எதையும் செய்ய முடிந்தது. நாட்டின் வளங்களைப் பெருக்கலாம்; சிறந்த படைகளை உருவாக்கலாம். ஏனென்றால் மங்களபுரியில் வாழும் அத்தனை பேரும் என்னை விசுவாசிப்பவர்கள். ஆனால் நான் வணிகன். வணிகனாக எந்நாளும் நான் இருந்தால்

நல்ல முறையியல் நாட்டை ஆழ முடியாது என்பதை உணர்ந்து அரசர்க்குரிய பயிற்சிகளைப் பெற்றேன். அரச சபைக்குரு சொன்னார்; “மன்னா! நீங்கள் ஓர் அதிசயப்பிறவி. மற்ற மன்னர்களை விட வித்தியாசமானவர். ஓர் அரசன் பட்டாபிஷேகம் செய்யுமுன் கல்வி கற்றுச் சகல பயிற்சிகளும் பெற்று விடுவான். நீங்கள் அரசனான பின் ஆயுதப் பயிற்சி பெறுகிறீர்கள். அது எனக்குச் சிரமாக உள்ளது” என்றார்.

“நான் உம்மை நினைத்து, உமது பேரழகை நினைத்துப் பயிற்சி பெற்றேன். முதல் நாள் என்னை அழைத்த குரு; “உங்கள் குலதெய்வத்தை நினைத்து உங்கள் வலது காலில் இவ்வீரக்கழலை அணியுங்கள். நிலைத்து நிற்கும் புகழை விரும்பி, தன் உயிரை நாட்டுக்காக இழக்க விரும்பும் வீரன் தன் குல தெய்வத்தை நினைத்து வீரத்துடன் இவ் வீரக்கழலை தன் காலில் அணிவான். அதுதான் அவனுக்கு அழகு; ஆபரணம். அதனால் இவ்வீரக்கழலை உனது காலில் அணி” என்றார். நான் கண்களை மூடி எனது குலதெய்வத்தைப் பிரார்த்தித்தேன். என் கண்களுக்குள் நீதான் வலம் வந்தாய். உனது அழகிய கண்களே முதலில் எனது விழித்திரைக்குள் வந்தன. பின் அழகான போதையூட்டும் நெற்றி, அதன்பின் எடுப்பான மூக்கு, பின் அழகான கழுத்து. அதன் பின் மெல்ல மெல்ல ஏனைய பகுதிகள் வந்தன. அன்று தான் முதன் முதலான உன்னை முத்தமிட்டு இறுக அணைத்தேன். வெகுநேரம் வரை அணைத்தேன். வெகுநேரஞ் சென்றமையால் குரு; “மன்னா, இவ்வளவு நேரமும் குலதெய்வத்தை வணங்குகிறீர்களா..?” என்று கேட்ட பின்

சுயநினைவடைந்து உம்மை மனதார நினைத்தவாறு இவ்வீரக்கழலை அணிந்தேன்'' என்ற ஏமநாதன் தான் அணிந்திருந்த பட்டு வேட்டியை உயர்த்தித் தனது வலது காலில் இருந்த அந்த விரக்கழலைக் காட்டினான்.

காயத்திரி உருகிப் போனாள். குனிந்து அந்த வீரக்கழலைத் தொட்டு வணங்கினாள்.

‘‘நான் சொல்பவற்றை நம்புகிறீரா..? சிலர் நம்ப மாட்டார்கள். அன்று நானிருந்த நிலையில் நீ எனக்குக் கடைசி வரையும் கிடைக்க மாட்டாய் என்றே எண்ணினேன். உமது தந்தை சம்மதம் தெரிவித்த பின்பும் பல இடர்கள் பல நாடுகள் மூலம் வந்ததால் நான் கலங்கிய போதும், என்னைத் தவிர வேறு யாராவது உம்மைத் திருமணஞ் செய்தால் அந்நாட்டரசனுடன் போர் செய்து ஒன்றில் உம்மைக் கைப்பற்றுவது இல்லாவிட்டால் அப்போரில் வீரமரணமடைவது என்றே தீர்மானித்தேன். அதனால் தான் நானும், வீரர்களும், மக்களும் தீவிரமாகப் பயிற்சிகளைப் பெற்றோம். புதிதாகப் பயிற்சி பெற வந்த வீரர்கள் தமது காலில் வீரக் கழலை அணியும் போது; ‘‘எமது மன்னருக்கு நாகரிபுரி இளவரசியைத் திருமணம் செய்து வைப்பதற்காகவே இவ்வீரக்கழலை எமது கால்களில் அணிகிறோம்'' எனக் கோசமிட்டனர். அதனால் எனக்கு மிகுந்த தைரியம் உண்டானது. மங்களபுரியில் வாழ்கின்ற சிற்றுயிர்கள் கூட எமக்குத் திருமணமாகும் வரை உம்மையே நினைத்திருந்தன. எமது திருமணத்திற்காக அரும்பாடுபட்டன'' என்றான் ஏமநாதன். அவனது குரலில் உணர்ச்சி தழும்பி

வழிந்தது. முகம் பூரித்து பொங்கியது. கண்களில் கருணை பூத்திருந்தது.

அவற்றைக் கேட்டுச் சிலிர்த்துப் போனாள் காயத்திரி. ஏமநாதனும், வீரர்களும் மக்களும் தன்னில் கொண்ட அன்பை நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

## 777. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

நிலைத்து நிற்கும் புகழை விரும்பி, அதற்காகத் தனது உயிரை இழக்க விரும்பும் வீரன், தன் காலில் வீரக்கழலை அணிவது சிறப்பானதாகும்.

### சிறப்பு மிக்கவன்

“அன்பே, உனது அழகான உதடுகளில் பொங்கிப் பிரபலிக்கும் அமிர்தத்தைப் பருக வேண்டுமென்றபதற்காகவும், மரகதச் சிலையை விட வனப்பு வாய்ந்த உன்னை எனது மனத்துள்ச் சிறை வைக்க வேண்டும் என்பதற்காகவும் நான் பட்ட துன்பங்கள் எண்ணில் அடங்காதவை. பயிற்சி பெற வேண்டுமென்ற வீம்பில் பயிற்சிக்குச் சென்று விட்டேன். ஆனால் எனது உடல் ஆரம்பத்தில் பயிற்சி பெற ஒத்துழைக்க மறுத்தது. அதைக் கண்ட குரு சொன்னார்; “மன்னா, பயிற்சியை ஓர் அரசன் பெற விரும்பினால் பத்து வயதில் எமது ஆச்சிரமத்திற்கு வந்து விட வேண்டும். தற்பொழுது உங்களுக்குப் பயிற்சி பெறும் வயதல்ல. அதனால்

சாதாரன பயிற்சிகளை ஆரம்பத்தில் பெறுங்கள். அத்துடன் ஒருவன் படிப்படியாகத்தான் பயிற்சி பெறல் வேண்டும். நீங்கள் ஒரேயடியாகப் பெற விரும்புகிறீர்கள். அது உடலுக்குக் கூடாதது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட.'' என்றார்.

''நான் அவரின் சொற்களைக் கேட்கவில்லை. அதனால் அவருக்குச் சில சமயம் என்மீது அளவுக்கதிகமான சினம் வரும். இருப்பினும் அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்வார். அத்துடன் அவருக்கு என்னில் உள்ள குறைகளை நேரடியாக எனக்குச் சொல்லப் பயம். அதனால் முதலமைச்சரிடம் கூறுவார். முதலமைச்சர் எனக்கு வந்து தட்டுத் தடுமாறியபடி அவற்றை ஆலோசனைகளாகச் சொல்வார்; ''மன்னா! தங்கள் பயிற்சி பெறத்தான் வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் குறிப்பிட்ட கால அளவு ஒன்று உண்டு. அத்துடன் படிப்படியாக மெதுவாகத்தான் பயிற்சி பெறுதல் வேண்டும். நீங்கள் நாட்டில் உள்ள பற்றுக் காரணமாக மிகத் தீவிரமான பயிற்சிகளை அவசர அவசரமாகப் பெற நினைக்கிறீர்கள். நாளைக்கு உங்களுக்கு அதனால் ஏதாவது பாதிப்பு வந்தால், அது சுகமடைய நீண்ட நாளெடுக்கும். அத்துடன் உடலும் பாதிப்புறும்'' என்பார். நான் சரியென்று ஏற்றுக் கொண்டு விட்டு மறுநாள் பயிற்சிக்குச் செல்லும் போது குருவின் முகத்தில் ஈ கூட ஆடாது. என்ன செய்வது உம் மீதிருந்த மோகம் தான் இத்தனைக்கும் காரணம்.'' சிரித்தான் ஏமநாதன்.

ஏமநாதன், தன்மீது எவ்வளவு தீவிரமான காதலைக் கொண்டிருக்கிறான் என்பதை நினைக்க

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது; ‘‘அன்பே, ஒரு பெண்ணின் மீது தீவிரமான அன்பைச் செலுத்தும் ஓர் ஆடவன் அவளுக்காக எதையும் செய்து முடிப்பான். நான் உம்மைத் தீவிரமாக நினைத்துக் கொண்டு குதிரைப் பயிற்சி பெறும் போது தவறி விழுந்து விட்டேன். அதைக் கண்டு பதறிய நாகராஜன் ஓடோடி வந்து என்னைத் தூக்க முயற்சித்தான். அவன் வருமுன் நான் எழுந்த போதும் உடலெங்கும் உரசல் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதனால் அவன் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான்; ‘‘மன்னா; நீங்கள் பேசாமலிருந்தால் கூட எமது படை வெற்றி பெறும். உங்களுக்கேன் இந்த விஷப்பரீட்சை.’’ என்று ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் எனக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; ‘‘எனது விஷயத்தில் தலையிட நீர் யார்….? எனக்கு எனது விஷயம் தெரியும். நீ அளவுக்கு மீறிப் பேசுகிறாய். படைத் தலைவனாக வருமுன் இப்படிப் பேசும் நீ, படைத் தலைவனாக வந்தால் எப்படிப் பேசுவாய். உன்னை நான் படைத் தலைவனாக்க மாட்டேன்’’ என்று கர்ஜித்தேன்.

அதற்கு அவன் சொன்னான்; ‘‘எனக்கு எந்தப் பதவியும் தேவையில்லை மன்னா. நாட்டுப் பற்றுள்ள நான் நாட்டுக்காப் போராட முன் வந்துள்ளேன். பதவிக்காக அல்ல’’ என்றான்.

‘‘ஆத்திரமடைந்த நான் அவனைக் கண்டபடி ஏசிவிட்டேன். ஆனால் நாகராஜன் எதுவும் பேசாது சென்று விட்டான்.’’

அதன் பின் குரு சொன்னார்; ‘‘மன்னா, நாகராஜன் அப்படி என்ன உங்களைப் பற்றிக் குறையாகச் சொன்னான். கடுமையான பயிற்சியால் உங்களுக்குச் கெடுதி வந்து விடுமோ என அஞ்சுபவர்களில் அவன் முக்கியமானவன். அதனால் தான் சொன்னான். போர் வந்தால் தன் உயிரைப் பொருட்படுத்தாது போர் செய்யத் துணியும் வீரன், தன் காலில் வீரக் கழல் அணிவது போரில் தன் உயிரைப் போக்கத் தயார் என்று நாட்டு மக்களுக்கும் அரசருக்கும் அறிவிப்பதற்காகவே. அதனால் அவன் எதற்கும் அஞ்சமாட்டான்.’’ என்றார்.

‘‘உண்மைதான் குருவே, நான் தவறாக நடந்து விட்டேன்’’ என்றேன். அதற்குக் குரு; ‘‘போர் வந்தால் தன்னுயிரைப் பொருட்படுத்தாது போர் செய்யத் துணியும் வீரன், ஒருவேளை அரசனின் சினத்துக்குள்ளானாலும், அவன் அதைப் பொருட்படுத்தமாட்டான்’’ என்றார்.

‘‘பெரும்வீரன் ஒருவனைத் தேவையில்லாமல் நான் கோபித்தது, உம்மீது கொண்ட மோகத்தினால் தான்’’ என்றான் ஏமநாதன்.

காயத்திரி அவ்வார்த்தைகளில் கரைந்து போனாள். தீவிரமாகத் தன்மீது அன்புமழை பொழியும் அவனைக் கணிக்க அவளால் முடியவில்லை.

---

**778. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும்சீர் குன்றல் இலர்.**

---

போர் வந்தால் போரிட்டு தன்னுயிரை விடத்துணியும் அஞ்சாத வீரன் அரசனின் சினத்திற்கு ஆளானாலும் தன் சிறப்புக் குன்ற மாட்டான்.

## பழிக்கப்படாதவன்

போர் அணிவகுப்பைப் பார்க்கவென்று மங்களபுரிக்கு வந்திருந்த நாகபுரி அரசரும் பிரதானிகளும் வீரர்களும் அன்று நாகபுரிக்குப் புறப்படவிருந்தனர். அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக மங்களபுரியின் முப்படை வீரர்களும் அணிவகுத்து நின்றனர். மக்கள் நாகபுரி மன்னரை வாழ்த்தி வழியனுப்ப அரண்மனை வாசலில் திரண்டிருந்தனர்.

மன்னர் விஷ்வப்பிரமன் ஏமநாதனையும் காயத்திரியையும் அந்தப்புரத்தில் சந்தித்தார். அவரைக் கண்டதும் அழுதழுது முகம் வீங்கியிருந்த காயத்திரி, முன்பைவிடத் துக்க மேலீட்டால் விம்மிவிம்மி அழுதாள். அவளால் தனது பெற்றோரைப் பிரிந்திருக்க முடியவில்லை.

‘‘அம்மா காயத்திரி, பெண்கள் எப்பொழுதும் பிறந்த வீட்டில் இருக்க முடியாது. அவர்கள் வயது வந்ததும் பெற்றோரைப் பிரிந்து தான் ஆக வேண்டும். எம்மிலும் பார்க்க ஆயிரம் மடங்கு உன் மீது பாசம் கொண்ட உனது கணவன் அருகில் இருக்கும் போது ஏனம்மா வேதனை மிகுந்து அழுகிறாய். உனது கணவனால் எல்லா விதமான அன்பையும் உனக்குத் தர முடியும். அவன் உனக்குத் தாயாக, தந்தையாக, சகோதரனாக,

கணவனாக இருந்து அன்பு மழை பொழிவானம்மா'' மன்னர் கலங்கினார்.

''உண்மைதானப்பா. கிடைத்தற்கரிய அரிய பொக்கிசமாக எனக்கு எனது கணவர் வாய்த்திருக்கிறார். எனக்கு எந்தக் குறையும் இல்லை. இப்போ ஏன் அவசரப்படுகிறீர்கள். இங்கு வந்து மூன்று நாட்கள் கூட ஆகவில்லை. இன்னும் ஒரு வாரகாலம் என்னுடன் இருந்து மகிழ்ந்து விட்டுச் செல்லுங்கள்.'' விம்மினாள் காயத்திரி.

கலங்கிய விஷ்வப்பிரமன் சொன்னார்; ''மகளே, உன்னுடன் மகிழ்வாகத் தங்க எனக்கு விருப்பமில்லையென்றா நினைக்கிறாய்? உனது கணவன் நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக உன்னைத் திருமணஞ் செய்தமறு நாளே படைத்தளங்களைக் கவனிக்கச் சென்று விட்டார். ஏனென்றால் அரசனுக்குக் குடும்பத்தை விட நாடுதானம்மா முக்கியம். அதே போல மகதநாடு எம்மீது போர் தொடுத்த நினைவுதினம் இன்னும் இரண்டு நாட்களில் வருகிறது. வஞ்சகமான முறையில் எம்மீது போர் தொடுத்தமையால் எமது வீரர்கள் வீர சபதமெடுத்துத்தான் போராடினார்கள். ஆரம்ப யுத்தத்தின் நாம் தோற்கும் நிலையிலேயே இருந்தோம். அவ்வேளையில் வீர சபதமெடுத்த பல வீரர்கள் மாண்டு விட்டனர். பின் போரின் நிலைமை மாறி நாம் வென்று விட்டோம். போரில் மாண்ட வீரர்கள் மதிப்புக்குரிய மாவீரர்கள். அவர்களை நாம் எந்நாளும் போற்றித் துதித்தல் வேண்டும். அவர்கள் போரில் வெல்லுமுன் இறந்து விட்டார்களே என்று யாரும் பழிக்க மாட்டார்கள். அவர்களுடைய இறப்புத்தான் எமக்கு வெற்றியைத் தந்தது. அந்த

நினைவு தினத்தை நாம் வருடா வருடம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவது உனக்குத் தெரியும். முன்பு நீ போரில் வீரமரணமடைந்த மாவீரர்களின் பெற்றோருக்கு பரிசளித்திருக்கிறாய். அதற்காகத்தான் நான் உன்னைப் பிரிந்துசெல்கிறேன்'' என்றார் விஷ்வப்பிரமன்.

காயத்திரியின் துயரத்தைப் போக்குவதற்காக வேடிக்கையாகச் சொன்னான் ஏமநாதன்; ''தேவி, பெற்றோரைப் பிரிவது கஷ்டம்தான். வேண்டுமானால் நீ பெற்றோருடன்சென்று ஒரு வாரம் நாகபுரியில் தங்கிவிட்டுவா''

காயத்திரிக்கு அளவுக்கதிகமான கோபம் வந்ததை விஷ்வப்பிரமன் கண்டு கொண்டார். அதனால் அவள் எதுவும் கூறுமுன் சொன்னார்; ''வேண்டாம். திருமணமான பெண் கணவனுடன் கூடியிருப்பதுதான் முறை. நாம் போர் வீரரின் நினைவுதினம் கழிந்தபின்பு வருகிறோம்.''

காயத்திரி மகிழ்வுடன் தந்தையைப் பார்த்தாள். அவர்கள் ஏமநாதனிடமும் காயத்திரியிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.

''என்னில் பெரும் அன்பு கொண்டதாகக் கூறும் உங்களுக்கு என்னைப் பிரிவது தான் நோக்கமோ?'' சீறினாள் காயத்திரி.

''உம்முடைய அன்பு எங்கே இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அப்படிக் கூறினேன். அப்போது உமக்கு வந்த கோபம்..... அத்துடன்

நான் அவர்கள் மீதும் அன்பு கொண்டுள்ளேன் என்பதை மாமனாருக்கும் தெரியப்படுத்தி விட்டேன்'' என்றான் ஏமநாதன்.

''நீங்கள் பொல்லாத கள்ளன்'' என்று சிரித்தாள் காயத்திரி. ஏமநாதன் அவளை அணைத்தான். அணைப்பு இறுக்கமடைந்தபின் அவர்கள் பேசவில்லை.

---

**779. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்தது ஒறுக்கிற் பவர்?**

---

தான் செய்த சபதப்படி போர் செய்து சாக வல்லவரை, அவர் செய்த பிழைக்காகத் தண்டிக்கக் கூடியவர் எவரும் இல்லை.

## பெருமையான பிச்சை

அன்று பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மங்களபுரியின் முன்நாள் மன்னனான நந்திதேவன் மரணமடைந்து விட்டான். அன்று மதிய உணவு கொண்டு சென்ற வீரன் மதிய உணவை அவனுக்குக் கொடுப்பதற்காகச் சிறைக் கதவைத் திறந்தான். வழமையாக அவன் உணவு கொண்டு செல்லும் வேளைகளில் நந்திதேவன் நாட்டைப் பற்றி விசாரிப்பான். அன்று அவன் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தமையால் அவன் நித்திரை செய்கிறானென நினைத்து உணவை வைத்து விட்டுச் சென்று விட்டான். பின்பு இரவு உணவைக் கொண்டு சென்ற போதும் அவன் முன்பு படுத்திருந்த இடத்திலேயே படுத்துக் கிடந்தான். அதனால் கலவரமடைந்த வீரன்தான்

மதிய உணவை வைத்த இடத்தில் பார்த்தான் உணவு அப்படியே இருந்தது. அதனால் அவன் நந்திதேவனுக்கு அருகே சென்று மூக்கருகே விரலை வைத்துப் பார்த்தான். மூச்சு வரவில்லை. அவனது உடலைத் தொட்டுப் பார்த்தான். அவனது உடல் சில்லெனக் குளிர்ந்தது. அதனால் அவ்வீரன் ஓடிச் சென்று அரண்மனை வைத்தியருக்கு அதை அறிவித்தான்.

அரண்மனை வைத்தியர் வந்து பரிசோதித்து விட்டு அவன் இறந்து விட்டதாகச் சொன்னார். உடனே நகர்முழுவதும் நந்திதேவன் மரணமான செய்தி முரசு மூலம் அறிவிக்கப்பட்டது. மறுநாள் மாலை நான்கு மணிக்கு அரச மரியாதைகளுடன் அவனது உடல் தகனம் செய்யப்படுமெனவும், மறுநாள்க்காலை எட்டு மணியிலிருந்து மூன்று மணிவரை மக்கள் அஞ்சலி செய்யலாமென்றும் அறிவிக்கப்பட்டது.

காலை எட்டுமணிக்கு நந்திதேவனது பூதவுடலை நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்துக் கொண்டு வந்து அரண்மனையில் உள்ள கேட்போர் கூடத்தில் வீரர்கள் வைத்தனர்.

மன்னரும் முதலமைச்சரும் தளபதிகளும் மந்திரிமாரும் வந்து நந்திதேவனது பூதவுடலுக்கு மலர்மாலை சூடி அஞ்சலி செய்தனர். “பகல் மூன்று மணிக்கு பிரேத ஊர்வலம் ஆரம்பமாகி நான்கு மணிக்குக் கோட்டையில் உடல் தகனஞ் செய்யப்படும்” என்று அறிவிக்கப்பட்டிருந்தும் எந்த ஒரு பொது மகனும் நந்திதேவனது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வரவில்லை.

மூன்று மணிக்கு நந்திதேவனின் பூதவுடல் தேரில் ஏற்றப்பட்டது. நான்கு மணிக்கு தேரால் நந்திதேவனது பூதவுடல் இறக்கப்பட்டு அரச மரியாதையுடன் கொண்டு செல்லப்பட்டது.

மன்னனுடன் முதலமைச்சரும் படைத்தளபதிகளும் புலவரும் ஊர்வலமாக வந்தனர். புலவருக்கு நந்திதேவனுக்கு அஞ்சலி செலுத்தப் பொது மக்கள் எவரும் வராதது மிகுந்த கவலையைக் கொடுத்தது.

‘‘நல்ல முறையில் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வாழாதவர்கள் இப்படி அனாதைகளாகத்தான் செல்ல வேண்டிய நிலை வரும். நந்திதேவன் மக்களுக்குச் செய்த கொடுமைகள் இப்பொழுது காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைப் போலுள்ளது’’ என்றார் புலவர்.

‘‘ஒவ்வொருவரும் செய்வதை அனுபவிக்கத்தானே வேண்டும். கடைசி நேரத்தில் மக்கள் பட்ட துன்பங்கள் கணக்கில் அடங்காதவை. தானியக்களஞ்சியங்களில் போதிய உணவுகளிருந்தும் மக்கள் உணவின்றி வீதிகளில் மிருகங்களைப் போல விழுந்து விழுந்து இறந்ததை எப்படி மறப்பார்கள். அதைவிட எமது மன்னர் மக்கள் படும் துன்பங்களைத் தாங்க முடியாது பருத்தி மலைக்குச் சென்று அங்கிருந்து கப்பல்களில் உணவு வகைகளைக் கொண்டு வந்த போது, நந்திதேவன் அவற்றை இறக்க விடாது தடுத்து வைத்தான். அதை மக்கள் மறக்க மாட்டார்கள்’’ என்றார் முதலமைச்சர்.

“வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்று பெரியவர்கள் சும்மாவா கூறினார்கள். பாவம் நந்திதேவன்” கண் கலங்கினார் புலவர்.

பத்து வருடங்களுக்கு முன் நந்தி தேவனது தகப்பனார் இறந்த போது மக்கள் பட்ட துன்பங்கள் எவ்வளவு. அவரது இறப்பைத் தாங்க முடியாது பலர் மயங்கி விழுந்தனர். மன்னர் இறந்த செய்தியைக் கேட்ட இருவர் மாரடைப்பால் இறந்தனர். மக்கள் ஒருவருடத்திற்கு விழாக்கள் கொண்டாடவில்லை. தினமும் மன்னன் இறந்தமைக்காக வீடுகளில் மக்கள் ஒப்பாரி வைத்தனர். ஆனால் இன்று நந்திதேவன் இறந்ததை மக்கள் பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்.” என்று பெருமூச்சு விட்டார் முதலமைச்சர்.

தம்மைக் காத்த மன்னர் மக்களின் கண்களால் நீர் பெருகுமாறு சாகநேர்ந்தால், அந்தச் சாவு பிச்சையாகக் கேட்டாவது பெற்றுக் கொள்ளத்தக்க பெருமையை உடையது. மக்களை வருத்தி, மக்களின் கண்களால் இரத்தக் கண்ணீர் வடியப் பண்ணிய கொடுங்கோலனின் சாவை மக்கள் தீபாவளியாகக் கொண்டாடுகிறார்கள்” என்றார் புலவர்.

ஏமநாதன், நந்திதேவனது சிதைக்கு தீ மூட்டினான். தீ சிறிது நேரத்தில் பற்றி எரிந்தது.

---

**780. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கது உடைத்து.**

---

தன்னைக் காத்த அரசர், மக்களின் கண்களால் நீர் பெருகுமாறு சாக நேர்ந்தால், அச்சாவு, பிச்சையாகக் கேட்டாவது பெற்றுக் கொள்ளத் தக்க பெருமை உடையதாகும்.

பின்னட்டையில் திரு. கே. வி. குணசேகரம் அவர்களின் படம் போடவும்.